19 10

1934

SL
00211, N15AB
N34.19.16.
187517

ங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அதற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமூற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் சிற்றின்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீஸில் தமிழ்நாட்டுச் சுகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம்; இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்

## MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்ருகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவமிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

புதிய நாவல்! புதிய நாவல்!!

# கிருஷ்ணஸிங்

அல்லது

## துப்பறியும் சீடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமார்த்தியங்களும், வீரதீரச் செயல்களும், உலகில் பல படுமோசப் படுகுழியிலிருந்து தப்புவதற்கான புத்தி மதிகளும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதற் கிணங்க நீதிமதிபோத கூடிய பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய போதனைகளும் அடங்கியது.

இதன் விலை அணு 14.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-34 வரை விலை அணு 10.

# அம்பாலிகை

அல்லது

## அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கறுப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம்புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சிசெய்து, ஏற்கனவே அவனுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனுமான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ரஸாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தனின் உண்மையான குற்றவாளியை அதாவது கறுப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம் செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கறுப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தசிங் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கன்னிகையை மணஞ் செய்துகொண்டு மேலும் பிரக்யாதி அடைவதும் படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

இதன் விலை அணு 12.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-34 வரை விலை அணு 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

# சற்குணவல்லி

அல்லது

## சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி கொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொறுமையின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகட்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிமதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-34-வரை விலை ரூபா 1-0-0.

# கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட் டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-34 வரை விலை ரூ. 1—2—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும் **ஆனந்த**

# ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

**ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.**

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.**

பற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற்கு உதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச்செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சியுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத்தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

ஔவையார் அருளிச்செய்த

**பெட்டகம்.**

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 2.

# கற்கோட்டை

**ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.**

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய்ப் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ் நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டியது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்பிரஷ்டமடைந்த சில உயர்குல மகுட வர்த்தனர்கள் தலைமறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிரளயபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வகையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேடமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

## இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

**விலை ரூபா 1—8—0.**

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயாஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சே. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஐ., அவர்கள் இயற்றியவை.

# சந்திரசேகரி.

## (இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்திசெய்யக்கூடிய நாவல் இதுவே.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-34 வரை விலை ரூ. 1.

# ஞானகாந்தி

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதாநாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரங் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர் மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின்போக்கு மிகவும் வேடிக்கையாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும். எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. அநேக நீதிகளடங்கியது; அறிவு விருத்திக்கு நிகரற்ற ஓர் பொக்கிஷம் என்றே இதைச் சொல்லவேண்டும். புதிய பதிப்பு விலை ரூபா 1—6—0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-4-34 வரை விலை ரூபா 1.

# அன்பானந்தன்

அல்லது

## அருஞ்செல்வன் விழைந்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது. அன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு ஆனந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றாகி விளங்கும் என்பதொன்று; மற்றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ளதோ, எந்தப் பாஷை நமக்குத் தாய்ப்பாஷையாக வுள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இம் மறைப்பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள் படும். அன்பைவிட இனிமையுள்ளது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் கலந்தால் ஆனந்தம் பிறக்கத் தடையென்ன? இந்த ஆனந்தம் தமிழ்ப்பாஷை முழுவதும் நிரம்பியிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக்களின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் இந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன.

இதன் விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-34 வரை விலை ரூ. 1.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓம்

பாப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


தொகுதி 19 | பவஹல சித்திரைமீ ௧௳ | 1934ஹல எப்ரல்மீ 13௳ | பகுதி ௰


## கடவுள் வணக்கம்.

வரும்போமென் பனவுமின்றி என்றுமொரு படித்தாய்
வானாதி தத்துவத்தை வளர்ந்தருந்தி வெளியாம்
இரும்போகல் லோமாமோ என்னு நெஞ்சைக் கனன்மேல்
இட்டமெழு காவுருக்கும் இன்பவெள்ளம் ஆகிக்
கரும்போகண் டோசீனி சருக்கரையோ தேனோ
கனியமிர்தோ எனருசிக்கும் கருத்தவிழ்ந்தோர் உணர்வார்
அரும்போநன் மணங்காட்டும் காமாசங் கன்னி
அறிவாளோ அபக்குவர்க்கோ அந்நலந்தான் விளங்கும். (1)

தானேயும் இவ்வுலகம் ஒருமுதலும் ஆகாத்
தன்மையினாற் படைத்தளிக்கும் தலைமையது வான
கோனாக ஒருமுதலிங் குண்டெனவும் யூகம்
கூட்டியதும் சகமுடிவிற் குலவுறுமெய்ஞ் ஞான
வானாக வம்முதலே நிற்குநிலை நம்மால்
மதிப்பரிதாம் எனமோனம் வைத்ததுமுன் மனமே
ஆனாலும் மனஞ்சடமென்று அழுங்காதே உண்மை
அறிவித்த இடம்குருவாம் அருளிலதொன்று இலையே. (2)

அற்ப மனமே அகிலவாழ் வத்தனையும்
சொற்பனங் கண்டாயுண்மை சொன்னேன் நான்—கற்பனையொன்று
இல்லா விடத்தே எனைச்சும்மா வைத்திருக்கக்
கல்லாய்நீ தானோர் கலி. (3)

ஆழ்ந்து நினைக்கின் அரோசிகமாம் இவ்வுடலில்
வாழ்ந்துபெறும் பேற்றை மதிக்குநாள் எந்நாளோ. (4)

# அரும்பொருள் விளக்கம்

1. இதனால் அநுபவ உணர்ச்சியின் சிறப்பை வருணிக்கின்றார்.

(இ-ள்) வரும் போகும் என்பன இன்றி, எக்காலத்திலும் ஒரு தன்மைத்தாகி, ஆகாயம் முதலாகிய தத்துவத் தொகுதியை வளைத்து உட்கொண்டு புறப்படும். வன்மையால் இரும்புதானோ? சிலைதானோ? மரந்தானோ என்று சொல்லப்படுகிற நெஞ்சை நெருப்பின்மேல் வைத்த மெழுகைப் போல உருக்காநிற்கும். ஆனந்த சாகரமாகி, இனிமையால் கருப்பஞ்சாறோ, கற்கண்டோ, சீனிச் சர்க்கரையோ, தேனோ, முக்கனிகளோ, அமிர்தமோ என்று சொல்லும் படி தித்திக்கும். அதனை மனமாரப் பெற்றவர்களே அறிவார்கள். பூ அரும்பு நல்ல மணத்தைக் கொடாது. கன்னிகையானவள் காமரஸத்தை அறியாள். இப்படியே அபக்குவர்கட்கு அந்தப் பரமானந்த சுகம் விளங்காது. அநுபவித்துணரவல்ல பக்குவர்கட்கே விளங்கும் என்க.

இரும்பு, கல், மரம் முதலியவற்றிற்கு ஒப்பான மனமானது மெழுகினைப் போல் உருகிய அவசரத்தில் கரும்பு, சீனி, கற்கண்டு, சர்க்கரை, தேன், கனி, அமிர்தம் போல ஆனந்தம் விளையும் என்பார் "இரும்போ.........அமிர்தோ என ருசிக்கும்" என்றனர். கன்னிகை காமரஸத்தை அறியாள். பருவமடைந்து இல்லறத்தில் கணவனோடு கூடியிருக்கும் காலத்தே அறிவாள். இது போல ஆன்மாவும் முதல்வனும் கலந்த விடத்தல்லது ஆனந்தானுபவம் உண்டாகாதென்பார் "காமரசங் கன்னி அறிவாளோ அபக்குவர்க்கோ அந் நலந்தான் விளங்கும்" என்றார்.

2. இதனால் மனதையும் ஒரு குருவாகக் கொள்ளவேண்டும் என்கின்றார்.

(இ-ள்) இவ்வுலகம் தானாகவே ஒரு முதற் பொருள் ஆகாத தன்மையால் இதனைப் படைத்துக் காக்கின்ற தலைமையுடைத்தான இறைவனாக ஒரு முதற் பொருள் இவ்விடத்துளதென்றும் யுக்தியை உண்டாக்கினதும், உலக முடிவில் விளங்காநின்ற உண்மையாகிய ஞானாகாயமாக அந்த முதற் பொருளே நிற்கின்ற நிலையானது நம்மால் மதிக்கப்படுவது அரிதாகும் என்று மௌன நிலையை அமைத்ததும் உன் மனதே. ஆனாலும் மனமானது சடம் என்று வருந்தாதே. மெய்யை உணர்த்தின இடத்தில் அதுவே ஆசாரியனாகும். அருள் இல்லாததாகிய ஒரு பொருளும் இல்லை.

பிரபஞ்சம் ஒரு முதல் ஆகாதென்றும், இதற்கு முதல்வன் ஒருவன் உண்டென்றும், அவனை அறிவதற்கு மௌன நிலையே அமைவுடைத் தெனவும், அறிதற்குக் காரணமாயிருத்தலின் அம்மனத்தினைச் சடமென அசட்டை செய்யாது அதனையும் ஒரு குருவாகக் கொள்ளவேண்டும் என்றனர்.

3. (இ-ள்) இழிவாகிய நெஞ்சே! உலக வாழ்வு எல்லாம் கனவாகும். நான் சத்தியம் பகர்ந்தேன். கற்பனை சிறிதும் இல்லாத விடத்தில் என்னை மௌனம் கூடியிருக்க நீ ஓர் கவியினைக் கற்றுக்கொள்ளுவாயாக என்க.

4. (இ-ள்) கூர்ந்து ஆலோசனை செய்து பார்க்கில் அருவருக்கத் தகுந்த இத் தேகத்தில் தங்கிப் பெறுதற்குரிய மோக்ஷலாபத்தினை அடைய நினைக்கின்றான் எங்ஙனமோ? என்க.



## பக்தியா சித்திரவதையா?

நமது நாட்டில் ஆலயங்கட்குக் குறைவில்லை. திருவிழாக்கட்குப் பஞ்சமில்லை. ஆண்டுதோறும் பல லக்ஷக் கணக்கான வருவாய் உள்ள பெரிய கோயில்களும், பல ஆயிரக் கணக்கான வருவாய் உள்ள சாதாரணக் கோவில்களும் இருக்கின்றன. இவற்றின் வருவாய்ப் பொருள்களெல்லாம் தேர்–திருநாள் முதலிய கொண்டாட்டங்களில் செலவு செய்யப்படுகின்றன. இக்காலத்தில் ஆலய வழிபாட்டின் உண்மைக் கருத்துப் பாழ் ஆகிவிட்டது. நம்முடைய ஆலயங்களின் ஆதரவில் நடைபெறும் திருவிழாக்களெல்லாம் வெறும் சம்பிரதாயக் காட்சிகளாகவும் ஆடம்பரக் காட்சிகளாகவுமே இருக்கின்றன. தேவதாசிகளின் ஆடல் பாடல்களும், வாண வேடிக்கைகளுமே இக்காலத் திருவிழாக்களின் முக்கியாம்சங்கள் என்று சுருங்கச் சொல்லலாம். ஆன்மார்த்த உணர்ச்சிக்கோ, பக்திக்கோ, அறிவுக்கோ இத் திருவிழாக்கள் ஒரு சிறிதும் வழிகாட்டுவதில்லை என்பது அநுபவம். இதுவே பிரசித்தி பெற்ற பெரிய க்ஷேத்திரங்களில் நடைபெறும் திருவிழாக்களின் உண்மை நிலையாகும். நிற்க,

ஒவ்வொரு பெரிய நகரத்திலும், சிறிய நகரத்திலும், கிராமத்திலும் சிறு தேவதைகளின் திருவிழாக்களும் உற்சாகமாய்க் கொண்டாடப் படுகின்றன. மாரியம்மன், மாகாளியம்மன் போன்ற கிராம தேவதைகள் என்பவைகளின் திருவிழாக்கள் ஆண்டுதோறும் தவறாமல் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இந்தத் திருவிழாக்கள் மகா கோரமானவைகளாகும். ஆடு, கோழி, எருமைக் கடாக்களைப்

பலி என்னும் பேரால் உயிருடன் சித்திரவதை செய்வதும், கள்ளுண்டு களிப்பதும், நெருப்புக் குழியில் இறங்குவதும், உடம்பெங்கும் ஆயிரக்கணக்கான ஊசிகளைக் குத்திக்கொள்ளுவதும், முதுகுகளில் இரும்புக் கொக்கிகளைக் குத்தித் தேர்களைக் கட்டி யிழுப்பதும் ஆகிய காரியங்களே இச் சிறு தேவதைகளுடைய திருவிழாக்களின் முக்கியாம்சங்களாகும். நாட்டில் பொருள் நெருக்கடியும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதி தீவிர நிலைமை அடைந்திருந்தாலும் அர்த்தமற்ற திருவிழாக்கள் மாத்திரம் ஆடம்பரமாக நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இவைகளால் மக்கட்கு வீண் கஷ்ட நஷ்டங்களைத் தவிரப் புண்ணியமோ புருஷார்த்தமோ கிடைக்கப்போவதில்லை என்று துணிந்து கூறலாம். சிறு தெய்வங்களின் பேரால் நடைபெறும் திருவிழாக்களில் அனுஷ்டிக்கப்படும் அருவருக்கத்தக்க ஆபாஸச் செயல்களை ஒரு சிறிது எடுத்துக் காட்டுவதே இத்தலையங்கத்தின் நோக்கமாகும்.

சென்ற மாதம் தஞ்சை ஜில்லா திருவையாற்றை அடுத்த வீரசிங்கம்பட்டி என்னும் கிராமத்தில் மாரியம்மன் திருவிழாக் கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவில் அநேகர் நேர்ச்சிக்கடன் என்று பெயர் வைத்துக்கொண்டு சித்திரவதைக்கொப்பான கொடுஞ்செயல்களை மேற்கொள்ளுவது வழக்கம். அதாவது சிலர் நெருப்புச் சட்டிகளை எடுப்பார்கள். சிலர் நெருப்புச் சட்டிகளை எடுப்பதுடன் தேகங்களில் ஊசிகளைக் குத்திக்கொள்ளுவார்கள். அந்த ஊசிகளில் பழம், தேங்காய், பன்னீர் புட்டி, இளநீர்போன்ற பொருள்கள் கட்டித் தொங்கவிடப்படும். மற்றும் சிலர் முதுகுகளில் பெரிய இரும்புக் கொக்கிகளைக் குத்திக்கொண்டு அவைகளில் சிறு தேர்களைக் கட்டி இழுப்பார்கள். இப்படிச் செய்தால்தான் மாரியம்மன் திருப்தியடைந்து திருவருள் பொழிவாள் என்பது இந்தப் பாமர மக்களின் நம்பிக்கை. ஆனால் அறிவுடையவர்கள் இக்கோலங்களைக் கண்டு அருவருப்படைந்து மனம் பதைப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. இந்தக் காட்டு மிராண்டி வழக்கம் ஒழியவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அரசாங்கத்தார் மாரியம்மன் திருவிழாவில் "செடில் குத்தல்"போன்ற காரியங்களை செய்யக்கூடாது என்று 144 வது பிரிவுப்படி தடையுத்தரவு பிறப்பித்தனர். மாரியம்மன் பக்தர்கள் இந்தத் தடையுத்தரவை லக்ஷியம் செய்யவில்லை. இதை மீறிவிடவே துணிந்தனர். அங்கே சென்றிருந்த மாஜிஸ்ட்ரேட் நெல்லையப்ப முதலியாரையும் போலீஸாரையும் கற்களால் தாக்கினர். மாஜிஸ்ட்



நெல்லையப்ப முதலியார் அங்கேயே உயிர் துறந்தார். பின்னர் ஒரு ஹெட் கான்ஸ்டேபிளும் ஒரு சப்இன்ஸ்பெக்டரும் மாண்டார்கள். இதனால் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. இருதரப்பிலும் பலர் படுகாயம் அடைந்தனர். சித்திரவதைக்கொப்பான இந்த அநாகரிக மூட வழக்கத்தை ஒழிக்க முயன்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உயிரிழக்க நேரிட்டதைக் குறித்து நாம் பெரிதும் வருந்துகின்றோம். எந்தச் சமயமும் இத்தகைய சித்திரவதை பக்தியை அநுமதிக்கிறது என்று சொல்ல முடியாது. எல்லாச் சமயங்களும் அன்பையே அடிப்படை யாகக்கொண்டு விளங்குகின்றன. ஒழுக்கத்தை உயிராகப் போற்றவேண்டும் என்று வற்புறுத்துகின்றன. இக்காலத்தில் சிறு தெய்வங்களின் பேரால் நடைபெறும் திருவிழாக்களில் அன்பு உண்டா? ஒழுக்கம் உண்டா? என்று கவனிக்குமாறு நேயர்களை வேண்டுகின்றோம்.

சாதாரணமாகச் சிறு தேவதைகளின் திருவிழாக் காலங்களில் புண்ணியத்திற்கு மாறாகப் பாவங்களே மக்களைச் சார்கின்றன என்று கூறவேண்டும். ஆடு கோழிகளைப் பலியிடுவதால் கொலைப்பாவம் அடைகின்றது. கள்ளுண்டு களிப்பதால் மற்ற எல்லாப் பாவங்கட்கும் அது மூல காரணமாய்க் கேடு விளைக்கின்றது. கொலையும் புலையும் குடியும் சேர்ந்தால் மக்களிடையே நல்லொழுக்கம் குன்றித் தீய ஒழுக்கம் மேலோங்கி விடும் என்பதை நாம் விரிக்க வேண்டியதில்லை. எனவே இந்தத் திருவிழாக்கட்கும் அன்பு ஒழுக்கம் முதலிய நற்குணங்கட்கும் வெகுதூரம் என்பது வெட்ட வெளிச்சமான விஷயமாகும்.

சமயங்கட்கும் சாஸ்திரங்கட்கும் பிறப்பிடமான நமது நாட்டில், கோடிக்கணக்கான மக்கள் சமய சாஸ்திர உண்மை நோக்கங்கட்கு முரணான வழியில் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பது வருந்தத்தக்கதாகும். சிறுதேவதைகளின் திருவிழாக்களில் ஈடுபடுவோர் கல்வி வாசனையற்ற பாமரமக்கள் மாத்திரம் அல்ல உயர் வகுப்பினர் என்பவர்களும், அறிஞர்கள் என்று கருதத்தக்கவர்களுங் கூடச்சேர்ந்து கொண்டாடி மகிழ்கின்றனர். மாமிசபக்ஷணம் செய்யாத மக்களும் நேர்ச்சிக்கடன் என்று சொல்லிக்கொண்டு சிறுதேவதை கட்குப்பலியிடப் பின் வாங்குவதில்லை. தமிழ்நாட்டில் அநேக கோவில்களில் பிராமணர்களும், சைவர்களும் ஆடு கோழிகளை வாங்கிப் பலியிட்டு மற்றவர்களுக்குத் தானம் செய்யும் வழக்கம் வெகு சகஜமாய் இருந்து வருகிறது. திரிச்சி ஜில்லாவில் குழுமாயி அம்மன் குட்டிகுடிக்கும் திருவிழா வெகு பிரசித்தி பெற்றது. இக்கோவில் பிராமணர்களின் நிர்வாகத்திலும் ஆதிக்கத்திலும் இருப்பதாகத் தெரிகின்றது. கோவை ஜில்லாவில் நாட்டுராயன் கோவில் பேர் பெற்றது. இது பிராமணத் தெய்வம் என்று சொல்லப்படுகின்றது. இந்தத் தெய்வத்தின் முன்னிலையில் நடைபெறும் கொலைகட்கு எல்லை இல்லை என்றே சொல்ல வேண்டும்.

"அன்று பிறந்த குட்டியும் அழுக்குப்படாத வெண்ணெ"யும் தான் இந்தத் தெய்வகணத்திற்குப் பிரீதி என்று சொல்லப்படுகிறது. மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் கிராமங்களிலும் மற்ற விடங்களிலும் "பயங்கா துஷ்டதேவதை"களைப் பற்றிய பீதி அதிகம் என்பதில் ஐயம் இல்லை. நாகரிகமும் அறிவு வளர்ச்சியும் பெற்று விளங்குவதாகச் சொல்லப்படும் சென்னைமாநகரிலும், அதைச் சேர்ந்த சுற்றுப்பக்கங்களிலும் சிறு தெய்வ பூஜைகளும் விழாக்களும் வெகு உற்சாகமாய்ப் போற்றிக் கொண்டாடப்படுகின்றன என்றால் மற்ற நாட்டுப்புறங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? சென்னையை அடுத்த பெரிய பாளையத்தம்மன் உற்சவம் எங்கும் பேர்போனதா யிருக்கின்றது. அவ்விடத்தில் பலிக் கொடுமையோடு வேப்பஞ் சேலை உடுக்கும் நிர்வாண ஆபாஸமும் காட்சி அளிக்கும். பிராமணர்களுங்கூட அங்கே வேப்பஞ் சேலையை உடுத்துக்கொண்டு நிர்வாணப் பிரதக்ஷிணம் செய்கின்றனர். இவை யெல்லாம் தெய்வப் பிரீதியாகும் என்பது மூட மக்களின் நம்பிக்கை. பலிக் கொடுமையை நிறுத்தச் சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சங்கத்தார் அல்லும் பகலும் அரும்பாடு பட்டு வருகின்றார்கள். ஜீவகாருண்ய உள்ளம் படைத்த மக்கள் இச்சங்கத்தாருக்கு ஆதரவு நல்கி ஆங்காங்கு பிரசாரம் செய்வித்தால் தக்க பயன் விளையும் என்று நம்புகின்றோம்.

தெய்வங்களின் பேரால் மேற்கண்ட அக்கிரமங்களைச் செய்யும் மக்களிற் பெரும்பான்மையோர் சைவம், வைஷ்ணவம், அத்வைதம் என்னும் மாட்சி மிக்க உயரிய சமயங்களைச் சேர்ந்தவர்கள் என்றே தங்களைச் சொல்லிக்கொள்ளுகின்றார்கள். இந்த மூன்று சமயங்களிலும் பலி என்னும் கொலையை நிகழ்த்துமாறு எங்கேனும் சொல்லப்பட்டிருப்பதாக எமக்கு விளங்கவில்லை. நமது நாட்டில் அநேக சைவ மடங்களும், வைஷ்ணவ மடங்களும், அத்வைத மடங்களும் இருக்கின்றன. இம்மடங்கட்கு ஏராளமான மானியங்களை நமது முன்னோர்கள் உதவி யிருக்கின்றனர். எதற்காக மடங்களையும் அவற்றிற்கு மானியங்களையும் நம் முன்னோர்கள் ஏற்படுத்தினர்? மடாதிபதிகள் எல்லோரும் போக போக்கியங்களை அநுபவித்துக்கொண்டு வீண்காலம் கழிக்கவா என்று கேட்கின்றோம்? சமயங்களின் உண்மைத் தத்துவங்களை நாட்டில் பரப்பி மக்கள் வாழ்க்கையை வளம்படுத்தவே நம் முன்னோர்கள் மடங்களை நிறுவி மடாதிபதிகட்கு ஆக்கம் அளித்தனர். நாட்டு மக்களின் வாழ்க்கை நலங்கருதி உழைக்க வேண்டிய மடாதிபதிகள் மானியப் பொருள்களை யெல்லாம் கோர்ட்டு விவகாரங்கட்கும், தாசி வேசிகட்கும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் உபசரிப்பு வைபவங்கட்கும் பாழ்படுத்திக் கொண்டிருக்கின்றனர். தங்களைச் சார்ந்த மக்கட்குக் கல்வி யறிவும், சமய அறிவும் அளித்து நல்வழிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுதுள்ள மடாதிபதிகட்கு எள்ளளவும் இல்லை என்றே சொல்ல வேண்டும். ஒரு சில மடங்கள்

கொலைக் களங்களாய் இருப்பதும் உலகப் பிரசித்தம். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் அந்நிய சமயங்களைத் தழுவிக்கொண்டு வருகின்றனர். மேனாட்டுக் கிறிஸ்தவ குருமார் இந்நாட்டில் எத்தகைய வேலை செய்து வருகிறார்கள் என்பதுங்கூட நமது மடாதிபதிகளின் கண்களிற் படுவதில்லையே—இதற்கு என்ன செய்வது? மக்களை நல்வழிப்படுத்தும் கடமை பூண்ட மடாதிபதிகள் வாளா உறங்கிக் கிடக்கும்போது சாதாரண மக்கள் பொருளற்ற மூடப் பழக்கவழக்கங்களில் கட்டுண்டு தெய்வங்களின்பேரால் கொலை செய்தலையும், செடில் குத்தி ஆடலையும், கள்ளுண்டு களிப்பதையும் கண்டியாரும் ஆச்சரியம் அடைவதற்கில்லை.

நமது நாட்டில் பொதுநலத் தொண்டர்கள் பலர் இருக்கின்றனர். அரசியல், சமூகவியல் முன்னேற்றங் கருதி உழைக்கும் அறிஞர் பலர் இருக்கின்றனர். அரசியல் முன்னேற்றத்திற்குச் சமூக முன்னேற்றமே அடிப்படையாய் இருக்கின்றது என்னும் உண்மை நாளுக்குநாள் வலிமை அடைந்து வருகின்றது. காந்தியடிகளுங்கூட இப்பொழுது தமது கவனத்தைச் சமூக சீர்திருத்தத் துறையில் திருப்பியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். எனவே இம்மடாதிபதிகளைத் தட்டி எழுப்பி அவர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து நடக்குமாறு தூண்டவேண்டிய பொறுப்புத் தேசபக்தர்களான பொதுநல ஊழியர்களைச் சார்ந்து நிற்கின்றது என்று எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

சென்ற மாதம் திருவையாற்றை அடுத்த வீரசிங்கம்பட்டித் திருவிழாக் கலவரத்தில் மூன்று சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உயிர் துறந்தது சைவ மடங்களும், சமய அறிஞர்களும் நிறைந்த தஞ்சை ஜில்லாவுக்கே பெரும் பழியாகும் என்று நாம் கருதுகின்றோம்.

சென்ற ஆண்டில் நாகபட்டினம், தாராபுரம் போன்ற சில விடங்களில் அலகுகுத்தி ஆடக்கூடாது என்று அரசாங்கத்தார் தடை யுத்தரவு பிறப்பித்தனர். அது தக்க பயன் அளித்தது. இவ்வாண்டில் விருதுநகர்த் திருவிழாவிலும் 144-வது பிரிவுப்படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதுவும் தகுந்த பயனை அளித்திருக்கிறது. வீரசிங்கம்பட்டி கோர சம்பவத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அரசாங்கத்தார் இந்தக் காட்டுமிராண்டி வழக்கத்தை ஒழிக்கும் விஷயத்தில் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுவார்கள் என்று நம்புகின்றோம். நம்முடைய சட்டசபை அங்கத்தினர்கள் தெய்வங்களின் பேரால் பலி யிடுதல், அலகு குத்தி ஆடல், நெருப்புக் குழியில் இறங்கல் போன்ற மூடவழக்கங்களை ஒழிக்க விரைவில் சட்டம் இயற்ற முற்படவேண்டும் என்று அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஓம் தத் ஸத்.




# கொக்கு வேட்டை

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி. எல்.)

விலங்கும் பறவையும் விரும்பி யுறையும் வளமார்ந்த மலையில் வேட்டையாடி மகிழுமாறு ஒரு வேடன் புறப்பட்டான். கொக்கிறகு தலையில் முடித்து, வக்கா மணியைக் கழுத்தில் அணிந்து, வரித் தோலைக் கச்சையாய் வரிந்து, ஈட்டியும் கோலும் கையி லெடுத்து, வேட்டுவன் மலையினுள்ளே புகுந்தான். இவ்வாறு வெளிப்பட்ட சிங்கன் என்னும் வேடனது சிறந்த கோலத்தை,

"கொக்கிறகு சூடிக்கொண்டு குருவி வேட்டை யாடிக்கொண்டு
வக்காமணி பூட்டிக்கொண்டு மடவார்கண்போல் ஈட்டிகொண்டு
தொக்காக்கச்சை யிறுக்கிக்கொண்டு துள்ளுமீசை முறுக்கிக்கொண்டு
திக்கடங்காக் குளுவசிங்கன் திரிகூடச் சிங்கன் வந்தான்"

என்று குறவஞ்சிக் கவிஞர் அழகுறக் கூறிப்போந்தார். நல்வேட்டை யாடும் நாய்போல் தடம்பிடித்துப் பூனைபோல் ஒளிபோட்டு, நரிபோல் பம்மி, அரிபோல் அறையும் ஆற்றல்வாய்ந்த சிங்கன், ஆடிப்பாடி அகங் களிப்பானாயினான். அப்போது அவ்வழியாகக் கண்ணியும் பொறியுட் கையிலேந்திக் கானகப் பறவையைக் கருத்தி லமைத்து நூவன் என்னும் குளுவன் அங்கு விரைந்து வந்தான்.

"ஊர்க்குருவிக்குக் கண்ணியும் கொண்டு
உள்ளானும் வலியானும் எண்ணிக்கொண்டு
மார்க்கமெ லாம்பல பேசிக் கொண்டு
கோட்கார நூவனும் வந்தானே"

என்று கவிஞர் நூவன் வருகையை எழுதி யமைத்தார். இவ்வாறு குற்றால மலையிற் கூடிய வேடர் இருவரும் மனம் களித்து வேட்டையாடத் தொடங்கினார். பறவைபோல் ஒலிக்கும் பான்மை வாய்ந்த நூவன், புதரில் மறைந்து புள்ளொலி எழுப்பினான். அவ்வொலியை இனவொலி என்று கருதி ஏமாந்து பறவைக ளெல்லாம் அங்கு பறந்து ஓடி வந்தன. சிங்கன் அருகே இருந்த மரத்திலேறிப் பறந்து வரும் பறவைகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான். மாடப் புறாவும், மடமயிலும், காடையும், காக்கையும், கிள்ளையும் கொக்கும் குழாம் குழாமாய் வரக்கண்டு குறவன் மனம் களித்து,



"கண்ணி கொண்டுவாடா—குளுவா
பண்ணவர் குற்றாலர்
காரார் திரிகூடச்
சாரலிலே வந்து
பண்ணிய புண்ணியம்
எய்தினாற் போலப்
பறவைக ளெல்லாம்
பறந்தேறி மேயுது
கண்ணி கொண்டுவாடா—குளுவா
கண்ணி கொண்டுவாடா"

என்று கூவினான். அவ்வுரை கேட்ட நூவன் "இறுமாந்து கண்ணியைக் கையி லெடுத்து அதன் கணக்கை நுணுக்கமாய்க் கூறலுற்றான்.

"கலந்த கண்ணியை
நெருக்கிக் குத்தினால்
காக்கையும் படுமே—குளுவா
காக்கையும் படுமே
மலர்ந்த கண்ணியைக்
கவிழ்த்துக் குத்தினால்
வக்காவும் படுமே—குளுவா
வக்காவும் படுமே
உலர்ந்த கண்ணியை
இறுக்கிக் குத்தினால்
உள்ளானும் படுமே—குளுவா
உள்ளானும் படுமே
குலைந்த கண்ணியைத்
திருத்திக் குத்தடா
குற்றால மலைமேல்—குளுவா
குற்றால மலைமேல்."

என்று கண்ணியின் பெருமையைப் புகழ்ந்து கூத்தாடத் தொடங்கினான். அப்பொழுது பறந்தோடிவந்த பறவைகள் வேடன் விரித்த வலையை நோக்கி வரக்கண்ட சிங்கன் மனம் களித்து,

"ஏறாத மீன்களும் ஏறி வருகுது
எத்திசைப் பட்ட குருகும் வருகுது
ஆலாவும் கொக்கும் அருகே வருகுது
ஆசாரக் கள்ளர்போல் நாரை திரியுது"

என்று குதித்துக் குதித்துக் கூறினான். அறியாப் பறவைகள் அருங்கண்ணியிலகப்பட்டு மீள இயலாது சிக்கிய தன்மையைக் கண்ட சிங்கன் அப்பறவை

களைப் பொதுமாதாது கண் வலையிற்பட் டுழலும் காமுகருக் குவமை கூறும் நயம் கற்றோர் கருத்தைக் கவர்வதாகும்.

"பூசி யுடுத்து முடித்து
வளையிட்டுப் பொட்டிட்டு
மையிட்டு பொன்னிட்டுப் பூவிட்டுக்
காசுபறித்திடும் வேசையர்
ஆசாரக் கண்ணுக்
குள்ளே படும்
காமுகர் போலவே
தேசத்துக் கொக்கெல்லாம்
கண்ணிக்குள் ளேவந்து
சிக்குது பார்கறி
தக்குது பார்."

என்று வேடன் கூறும் மொழிகள் வியப்பைத் தருவனவாம். மங்கையர் கையிலமர்ந்து மழலை மொழி பயின்ற ஓர் அழகிய கிளி, கூட்டினின்றும் தப்பிக் காட்டினுள்ளே போந்து குற்றாலமலையைக் குறுகிற்று. அதனைப் பெடையென்று கருதிப் பின்தொடர்ந்த சேவல்கள் ஒன்றோடொன்று பூசல் விளைத்த பேரொலியைக் கேட்டு கானகப் பறவை யெல்லாம் குழாங் குழாமாய்க் கூடி வேட்டுவன் கண்ணியைத் தட்டிப் பறந்து சென்ற பான்மையைக் கண்ட சிங்கன்,

"மேடையி னின்றொரு பஞ்சவர் ணக்கிளி
மின்னார்கை தப்பிஎன் முன்னாக வந்தது
பேடையென் றேஅதைச் சேவல் தொடர்ந்தது
பின்னொரு சேவலும் கூடத்தொ டர்ந்தது
சூடிய இன்பம் இரண்டுக்கும் எட்டாமல்
சுந்தோப சுந்தர்போல் வந்த கலகத்தில்
காடெல்லாம் பட்சியாக் கூடி வளம்பாடிக்
கண்ணியும் தட்டிஎன் கண்ணிலும் குட்டியே
போயி னுமையே—பறவைகள்
போயினு மையே."

என்று ஆடிப் பாடினான். இவ்வாறு மலையில் வேட்டையாடித் திரியும் வேடன், தேவரிற் சிறந்த மூவரொடும் முறை தொடுத்து மகிழும் தன்மை மனத்தை மகிழ்விப்பதாகும். கருமுகில் வண்ணன் காக்கை வேட்டையாடி அதன் கண்ணை யறுத்தான். செம்மேனி வாய்ந்த ஈசன் கொக்குவேட்டையாடி அதன் இறகை வேணியிற் சூடினான்.

"கானவர் வேடத்தை ஈனமென் றெண்ணாதே
காக்கை படுத்தான் கருமுகில் வண்ணனும்



மேனாட் படுத்திட்ட கொக்கிற கின்னும்
விடைமே லிருப்பார் சடைமே லிருக்குது."

என்று வேடர் தொழிலின் மேன்மையைச் சிங்கன் வியந்து கூறினான். காக்கும் தெய்வமும், அழிக்கும் தெய்வமும் கையாண்ட கானவர் தொழிலை எவரும் ஈனமென் றெண்ணலாகாது. மறையவனாய அயன் அழகிய அன்னத்தைக் கவர்ந்தான். மாயவன் பருந்தைக் கவர்ந்தான். பிரணவ வடிவாய பெருமான் பெருச்சாளி கவர்ந்தான். இவ்வாறு பெரியோர் விரும்பி யாடிய வேட்டையின் பெருமையை,

"முன்னாள் படுத்த பரும்பெருச் சாளியை
மூத்த நயினார் மொடுவாய்க் கொடுபோனார்
பின்னான தம்பியார் ஆடு மயிலையும்
பிள்ளைக் குறும்பாற் பிடித்துக்கொண் டேகினார்
பன்னரும் அன்னத்தை நன்னக ரீசர்
பரிகல மீந்திடும் பார்ப்பானுக் கீந்தனர்
வன்னப் பருந்தொரு கள்வன் கொடுபோனான்
வக்காவும் நாரையும் கொக்கும் படுக்கவே."

என்று சிங்கன் புகழ்ந்து போற்றினான்.

இன்னும் வளமார்ந்த மலையில் வளர்ந்த வள்ளியின் தேனூறு சொல்லுக்கு வாயூறி நின்ற குமரன் கொக்கு வேட்டையாடிய செயலைக் குன்றக் குறவர் பாராட்டி மகிழ்ந்தார்கள். கொடிய வேற்படை தாங்கிய குமரன் ஆறுநாள் அலைந்து திரிந்து ஓர் அரிய கொக்கை அடித்தான். இவ்வாறு வருந்தி யடித்த கொக்கை நன்றாக அவித்துச் சாறாக்கிச் சட்டியில் வைத்தார்கள். அச்சாற்றைச் செந்தண்மை வாய்ந்த அந்தணரும், சிவநெறி போற்றும் சைவரும் ஆதரித்து ஏற்றார்கள். பெருந்தவமுனிவரும் அச்சாற்றைத் தம் அருந்தவத்தின் பயனாகக் கருதி அகமகிழ்ந்தார்கள். இவ்வாறு ஆன்றோர் போற்றும் வண்ணம் அரிய கொக்குவேட்டையாடிய குறவனது பெருமையை,

"நீறு மிலஞ்சிக் குறத்தியைக் கொண்ட
செவ்வேட் குறவன்
முதல் வேட்டைக்குப் போனநாள்
ஆறுநாட் கூடி ஒருகொக்குப் பட்டது
அகப்பட்ட கொக்கை
அவித்தொரு சட்டியில்
சாறாக வைத்தபின்
வேதப் பிராமணர் தாமும் கொண்டார்
சைவர் தாமும் கொண்டார் தவப்
பேரு முனிவரு மேற்றுக் கொண்டாரிதைப்
பிக்குச் சொல் லாமலே
கொக்குப் படுக்கவே

கண்ணி கொண்டு வாடா—குளுவா
கண்ணி கொண்டு வாடா.

என்று குன்றக் குறவன் வியந்து புகழ்ந்தான். குமரனாய வேடன் கையில் வேலேந்தி அடாத செயல் செய்த சூரனை அடர்க்கப் புறப்பட்டான். வேலனைப் பாலனென்று எண்ணி இகழ்ந்த சூரன் ஆறு நாளாக அண்ட முழுவதும் சுற்றி அமர் விளைத்தான். அக்கொடியனைக் கொன்று கொடுமை அகற்றக் கருதிய குமரன் ஆறுநாளும் சலியாது அவ்வசுரனைத் தொடர்ந்து சென்றான். மாயம் பயின்ற சூரன் பாலனை மயக்க எண்ணி ஒரு கொக்கின் (கொக்கு—மாமரம்) வடிவெடுத்து நின்றான். முருகன் அக் கொக்கை வேலாலெறிந்து வீழ்த்தினான். அப்போது கொக்காய் நின்ற கொடியோன் குமரனது பெருமையை அறிந்து பணிந்தான். அந்நிலையில் அன்பர்க்கு அருள்புரியும் அண்ணலாகிய அறுமுகப் பெருமான் சூரனது ஆணவத்தை அழித்து ஆட்கொண்டருளினார். இவ்வாறு ஆறுநாள் அலைந்து அசுரனை வென்ற பெருமையைக் கந்த சட்டித் திருவிழாவாக (சாறு—திருவிழா) அமைத்து அந்தணரும் அருந்தவரும் ஆர்வமுற ஆதரித்தார்கள். ஆகவே, மாமரமாய் நின்ற மாறுபடு சூரனை வென்று அவன் ஆணவத்தை சாறாக்கி அவித்துச் சட்டியில் வைத்த சரிதையை கொக்குவேட்டையாடிய குறவன் செயலாக வேடன் வகுத்துரைக்கும் நயம் வியப்பைத் தருவதாகும். இவ்வாறு வேட்டையில் வல்லனாய வீரன் குன்றக் குறவரது மனையிலே வளர்ந்த வள்ளியை வேட்டு மணந்தது இயல்பேயன்றோ? ஆறுநாள் அலைந்து அருங் கொக்கடித்த குமரனுக்கு வள்ளியை வாழ்க்கைத் துணையாகக் கொடுத்து வளமார்ந்த மலையையும் குறவர் சீதனமாய் வழங்கினார்கள். இவ்வுண்மையை,

"வெள்ளிமலைக் குறவன்மகன்
பழனிமலைக் குறவன்
எங்கள் வீட்டிற்கொண்ட
வள்ளிதனக் கேகுறவர்
மலையாட்சி சீதனமாய்
வழங்கி னாரால்"

என்று குறமாது நயமாகக் கூறிப்போந்தாள். வேடரது மருகனாய் அமைந்த முருகன் வேட்டகத்தே விரும்பி உறைந்து குறிஞ்சி நிலக்குரிசிலாய் இன்றும் நிலவுகின்றான். இங்ஙனம் அஞ்சிறை வண்டின் அரிக் கணம் ஒலிக்கும் குன்றமர்ந்துறையும் குமரனது பெருமையை,

"திண்ணென் தடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட
சீறூரு மூரூர் தொறும்
செந்தினைப் புனமோடு தண்சாரல் பிறவுமாம்
சீதனக் காணி பெற்றுத்
தண்ணென் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்
சப்பாணி கொட்டி யருளே
தையனா யகிமருவு தெய்வநாயகன்மதலை
சப்பாணி கொட்டி யருளே"

என்று ஆன்றோர் போற்றிப் புகழ்ந்தார்கள்.

# தனித் தமிழ் உரைநடை

(வே. ஏ. சந்திரராசன்.)

சென்ற ஆண்டின் இறுதியிற் சென்னையில் நடந்தேறிய "தமிழன்பர் மகாநாட்டை"யும், அதன் தீர்மானங்களையுங் கண்டித்துத் திருநெல்வேலித் தனித் தமிழர் பெருங் குழு சில முடிவுகள் நிறைவேற்றியது. சென்னை மகாநாட்டின் தீர்மானங்கள் சிலவற்றை வெட்டியும், சிலவற்றை ஒட்டியும் திருநெல்வேலியர் பேசியிருக்கின்றனர். சென்னை மகாநாடு "பார்ப்பனர் சூழ்ச்சி" யென்று கண்டித்த தன்மதிப்பியக்கத்தினரும் அதில் ஈற்றிற் கலந்துகொண்டதிலிருந்தும், மகாநாட்டைத் திறந்து வைத்தோரும், தலைவரும் பிரபல பார்ப்பனரல்லாதாரென்பதிலிருந்தும் குறித்தமகாநாட்டில் "பார்ப்பனக் குறும்பு" தாண்டவமாடவில்லை யென்று விளங்குகிறது.

ஆனால் இது பார்ப்பனரல்லாத அரசியல் வாதிகளுக்குத் திருப்தி யளிக்குமே யன்றி செந்தமிழ் மாணவர் உளம் இதனால் மகிழ்ந்து விடாது. ஏனெனில் தமிழன்பர் மகாநாட்டைக் கூட்டுவித்தோர் உண்மையில் தமிழன்பர்களல்லர். தமிழன்பர்களாயின் தமிழகத்திலுள்ள செந்தமிழறிஞர் அனைவரையும் அவரேன் சென்னையிற் கூட்டவில்லை? ஈழத்தை யேன் மறந்தனர்? தமிழ் மொழி வளர்ச்சியே யவரது நோக்கமாயின் அதுபற்றிப் பேசினோரும், எழுதினோரும் ஏனோ புறக்கணிக்கப்பட்டனர்? தமிழன்னையின் பண்டைச் சிறப்பையும், பெருமையையும் அறியாதோரும், அதன் சிறுமைக்குக் காரணராயு முன்னோர் எங்ஙனம் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்ற வியலும்? வடமொழிக்குத் "தெய்வீகம்" கற்பித்து, அச் சொற்களின்றி தமிழ் வளராது, பரவாதென்று பிதற்றுவோர் தமிழ் மொழிக் கொலைஞரோ, அன்பரோ என்பது ஆராயத் தக்கது.

"அரசாங்கத்தில் செல்வாக்குடைய ஒரு வகுப்பார் தமது ஆங்கிலக் கல்விப் பெருக்கால் தமிழில் புதிய நூல்கள் இயற்றிப் பொருளீட்டும் நோக்கத்துடன்றான் சென்னை மகாநாடு கூட்டப்பட்டது" என்று ஒரு சாரார் கூறுங் குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லாமலில்லை. பார்ப்பனருள்ளே செந்தமிழறிஞர் பலருளர். அவர் நூலியற்றினால் எல்லாரும் ஏற்பர். ஆனால் ஆங்கிலக் கல்வி யுடையோர் தமது அரை குறைத் தமிழ்க் கல்வியுடன், தமது வீட்டிற் பேசும் சாதாரணப் "பேச்சுத் தமிழி"ல் கொச்சையாய் எழுதிடில், அவ்வாறெழுதப்பட்ட நூல்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு இடையூறாயமையுமன்றி வேறெதற் குதவும்? "பாங்கிங் அக்கவுண்டிங்" (Banking and Accounting) என்றொரு புத்தகத்தைப் படித்தேன். அதில் 100-க்கு 37 (விகிதம்) சொற்கள் ஆங்கிலச் சொற்களாய் உள்ளன. இம்மாதிரியான "நூல்"களையோ தமிழன்பர் மகாநாட்டார் எழுதப் போகின்றனர்?

"தமிழில் தக்க பதங்கள் இல்லாத விடத்து வழக்கத்திலுள்ள பதங்களை உபயோகித்தல் உசிதம்" என்ற தீர்மானத்தின் பொருளென்னையோ? "ரெயில்வே ஸ்டேஷன்", "மெஜாரிட்டி", "ஜட்ஜ்மெண்டு", "ஹைக் கோர்ட்டு" "ஷர்ட்", "டிபன்ஸ் தரப்பு" "சப் மாஜிஸ்ற்ரேட்டு" என்றவாறு போலும்.

தமிழ் உயர் தனிச் செம்மொழி யென்று நம்புவோரும், தமிழில் நூலியற்ற ஆற்றலுள்ளோரும் தமிழகத் திருக்கையில், மேலே குறித்தவாறு ஆங்கிலச் சொற்களை தமிழிற் புகுத்தித் தமிழன்னையை வெட்கப் படுத்துவோர் வாயை மூடிக்கொண்டு மூலையிற் குந்துதல் நலம். "தெய்வ தூதர் கால் வைக்கவும் அஞ்சும் பாதையில் மூடர் துள்ளியோடத் துணிகின்றனர்!" என்ற ஆங்கில மொழியை அவர்க்கு நினைப்பூட்டுகின்றேன்.

இனி, தமிழன்பர் மகாநாட்டின் போக்கையே பெரிதுந் தழுவி தமிழன்னையின் அருந்தவப் புதல்வராய திருவாளர் திரு. வி. கல்யாண சுந்தரர் "தமிழ் மொழியின் தற்கால நிலை" என்ற தலைப்பிட்டெழுதிய கட்டுரையைப் படித்ததே பெரிதுந் திடுக்கிட்டேன். அவரை யான் தனித் தமிழ் வீரரென்றே கொண்டாடுபவன். அவ்வறிஞரால் நடத்தப்பெறும் பத்திரிகைகளும், இயற்றப்பெற்றுள்ள நூல்களும் தூய தனித் தமிழிலேயே விருக்கின்றன. அவற்றுள் "மணிப் பிரவாள"மாதல், "அவியல்" தமிழ்நடையாதல் மருந்திற்குமில்லை. எனக்குத் தனித் தமிழ் உணர்ச்சியை யூட்டியவர் அவரே. தனித் தமிழ் பித்தேற்றியவை அவரது நூல்களே. எனது குருதி நாளங்களிற் செலுத்தப்பட்டுள்ள தனித் தமிழ்ப் பித்துக்கு அவரே காரணர். தமிழின் தனிமை, தொன்மை, தூய்மை, புனிதம், பண்டைச் சிறப்பு, இக் காலச் சிறுமை யாதியனபற்றிப் பன் முறை பன்னிப் பன்னிச் செந்தமிழில் படிக்குந்தோறும் தீஞ்சுவை பயக்குமா றெழுதி வந்த அப்பெரியார் இது காலை "மணிப் பிரவாள"த்தில் மயங்கி இடர்ப்படுவதேனோ?

யான் முதன் முதல் பத்திரிகைக் கெழுதின பொழுது எனக்குத் தனித் தமிழிற் போதிய பயிற்சி யிருந்ததில்லை. தனித் தமிழென்றோர் பண்ட மிருப்பதே யெனக்குத் தெரியாது. எனவே எனது முதல் கட்டுரைக்கு "மாத்ரு பாஷாபிமானம்" என்றே மகுடஞ் சூட்டினேன். பிறகு கலியாணசுந்தரரது நூற்களைக் கற்ற பின் "தாய்மொழிப் பற்று" என்றன்றோ எனது கட்டுரைக்குத் தலைப்புக் கொடுத்திருக்கவேண்டுமென் றறியலானேன். அவரது நூல்களை ஆசிரியனாக வைத்துக்கொண்டு எனது முதற் கட்டுரையைத் திருத்த முற்பட்டேன். விளைந்த பயனென்ன? எழு ஆங்கிலச் சொற்களையும், இருபத்திரண்டு வட சொற்களையும் விலக்கிவிட்டு அவற்றிற்கேற்ற தனித் தமிழ்ச் சொற்களைச் சேர்த்துக் கொண்டேன்.

இங்ஙனம் என்போன்ற பல இளைஞருக்குத் தனித் தமிழின் மாண்பை எண்பித்துதவிய கலியாண சுந்தரர் "தனித் தமிழ் நடையினாலே சமயப் பற்றையும், பிறநாட்டுக் கலை வளத்தையும் தமிழர்க்குப் புகட்டல் இக்கால நிலையில் இயலுமோ என்பதிற்றான் கவலை" யென்று கூறுவது விந்தையாக விருக்கின்றது. சாந்தப் பெருங் கடலைத் தாண்டியவன், ஒரு சிற்றோடையைக் கண்டஞ்சி "இதை யெவ்வாறு கடப்பது?" என்பதையே யிது வொக்கும். அரசியல் உலகிலும், சமய உலகிலும், ஆராய்ச்சித் துறையிலும், தத்துவ விசாரணையிலும் அன்ன பிறவற்றிலும் முதலியாரவர்கள் உழைத்து வந்திருக்கின்றனர்.



அவரது தனித் தமிழ்ப் பேருரைகளையும், பேராற்றலுடனும், வன்மையுடனும் அவரெழுதும் நெஞ்சையள்ளும் நற்றமிழ் நடையையும், உள்ளக் கிளர்ச்சியை யூட்டும் உயரிய சொற்றொடர்களையும் கேட்டும், வாசித்தும், இன்புற்றும் பயனடைந்துள்ள பல நூற்றுக் கணக்கான தமிழ் மக்களுக்கு முதலியாரின் கூற்று பெரிதும் ஏமாற்றத்தை யளிக்கின்றது. அவரது தனித் தமிழ்ப் பெரு விருந்தை இனிமேல் எங்கட் கீயமாட்டாரோ?

"நவ சக்தி" ("புதுவன்மை, புது ஆற்றல்; புதுவலிமை" யென்றேன்; அவர் பெயர் சூட்டவில்லை!)யிலும் "செந்தமிழ்ச் செல்வி"யிலும் பல அறிஞர்கள் தனித்தமிழில் பல பொருட்களைப்பற்றி யெழுதி வருகின்றார். தனித்தமிழ்ப் பித்தும், தனித் தமிழ் நடையும், மொழி வளர்ச்சிக்கும், கலைப் பெருக்கிற்கும் இடையூறாக எவ்வாறு நிற்கும்? காலஞ் சென்ற திரு பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களது தனித்தமிழ்ச் சொற் சுவடி யொன்று "செல்வி"யில் வெளியிடப்பட்டு வருகின்றது. அவரைப் பின்பற்றி நூல் வரைவோர் புதுச் சொல் லமைக்க முற்படல் நலம். தனித்தமி ழறிஞர் முயல்வரேல் பிற மொழிச் சொற்களுக் கேற்ப தூய தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடித்தல் கடினமன்று. முடியாத விடத்து தற்பவமாகவும், தற்சமமாகவும் பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப் படுத்தல் வேண்டும். அத்தகைய சொற்கள் தமிழ்மையை யெய்தல் நன்று. "பைபிள்" என்ற சொல்லை "விவிலியம்" என்றும் "டேற்" என்றதை "தேதி" யென்றும் "பிறெட்" என்றதை "உரோட்டி" யென்றும் "இச்சன்" என்றதை "தசினி" யென்றும் தமிழில் தமிழ்ச் சொற்கள் போன்று தோன்றமாற்றியதைத் தழுவிப் புதுச் சொல்லாக்கம் நடைபெறல் வேண்டும்.

திரு. கலியாண சுந்தரர் தமது கட்டுரையில் "பாமரர்" என்ற சொல்லைக் குறிப்பிட்டது என்க்குப் பெருந் துக்கத்தை யளித்தது. பண்டிதர் யார்? பாமரர் யார்? மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சோதனைகளிற் றேர்ச்சி பெற்றோர் பண்டிதரும், அங்ஙனம் பெறாதோர் பாமரருமோ? இஃது உண்மையாயின் யானோர் "பாமரன்" ஆகின்றேன். ஆகவே, கலியாண சுந்தரர் மீது யான் அவதூறு வழக்குத் தொடர வேண்டுமோ? எங்கள் நடை வழக்கில் "பண்டிதர்" "பாமரர்" என்ற இரு சொற்களும் இல்லாதொழிதல் வேண்டும். மக்களைப் பாமரர் என்று இழித்துக் கூறும் தீய வழக்கம் ஒழியுமாக. கற்றோர் கற்போருக்கு நூலியற்ற வேண்டுமே யன்றி கல்லாதாருக்கன்று. கற்கும் நிலையிலிருக்கும் என் போன்றாருக்கு நூலியற்றுவோர், கட்டுரை யெழுதுவோர் கவனிக்கவேண்டிய தென்னவெனில் தங்களது உயரிய நிலைக்கு எங்களை யுயர்த்த வேண்டுமென்பதே யாம். தாழ்ந்தோரை உயர்த்த விரும்பி யுழைப்போர் தமது உயர்ந்த பதவிக்குக் கீழிருப்போரைத் தூக்கும்படி யன்றோ தொண்டாற்ற வேண்டும்? அவ்வாறே நூலாசிரியர்கள் தம் புலமையை விடுத்து நாடோடிகளது பேச்சைத் தழுவி யெழுதுதல் பொருந்தா நியாயமாகலின், தாங் கண்ட கல்விக் கடலின் ஆழத்தை யாங்காணுமாறு செய்வதே சாலச் சிறந்த முறையாகும்.

அண்மையில், திருவாளர். உமாமகேசுவரம் பிள்ளை யவர்கள் தலைமையிற் கூடவிருக்கும் தனித் தமிழர் பேரவை கலியாணசுந்தரரது கட்டுரையைக் கவனிக்குமென்று நம்புகின்றேன். திருவாளர்கள் கா. சுப்பிரமணியப் பிள்ளை, கலியாண சுந்தர முதலியார், மறைமலை யடிகள், பூரணலிங்கம் பிள்ளை, கார்

மேகக் கோனர், வேங்கடசாமி நாட்டார், "மகிழ்நன்" சேதுப்பிள்ளை, சோம சுந்தர பாரதியார், சுத்தானந்த பாரதியார், இராகவ அய்யங்கார், சாமிநாதய்யர், சுவாமி விபுலானந்தர் ஆதியாம் தமிழ்ப் பேரறிஞர்கள் ஒருங்கு கூடி ஆலோசித்துத் தனித் தமிழ் இயக்கத்தை உறுதிப்படுத்துவார்களென்பது என் நம்பிக்கை. குறித்த பெரியார்கள் ஒத்துழைப்பால் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் கலைப் பெருக்கிற்கும் அடிகோலப்படுமேல், தமிழன்னை பெரிதும் மகிழ்வுறுவாள். தனித்தமிழ் வளர்ச்சிக்குத் தனியாக வோர் கிழமை வெளியீடு தொடங்கப்படல் வேண்டும். அவ்வெளியீடு சமயத்திற்கு அப்பாற்பட்டதா யிருத்தல்வேண்டும். தமிழகத்தில் இதுகாலை தமிழ் மக்கள், சைவ, வைணவராய் மட்டுமன்றி, கிறைஸ்தவராயும், இசுலாமியராயும், பௌத்த சமணராயும், பகுத்தறிவுக்காரராயும், ஐயங் கொள்வோர், ஆசங்கையாளராயும், நம்பிக்கையினராயும், பிரம்ம சமாசத்தினராயும், பிரம்மஞான சங்கத்தினராயும் இருப்பதால் தமிழும் சைவமும் என்ற மனப்பான்மை ஒழியவேண்டும். அன்றியும் "தமிழ் மொழிக்குத் தலைவன் சிவபெருமான்" என்ற மதப்பித்தும் போதல் நன்று. தமிழ் நெடுங்கணக்குத் திருத்தத்தைப் பற்றியும் ஆராய்தல் பயன்தரும்.

எது எப்படியாயினும் தமிழ் மொழியின் தனிச் சிறப்புக்கு ஊனம் நேரிடாவாறு **தனித்தமிழர் பேரவை** நடந்துகொள்ளல் வேண்டும். முயற்சியும், தேர்ச்சியும், முன்னேற்றமும் விழையுந் தமிழ் இளைஞர்கள் தந்தாய்மொழியின் அபிவிருத்தியிலும், முதிர்ச்சியிலும் ஆர்வங்கொண்டுள்ளனர். இம்மலாய் நாட்டிற்றானும் தனித்தமிழில் பேசவும், எழுதவும் ஆற்றலுடைய பல இளைஞர்களிருக்கின்றனர். அவர்களுக்கு "கொச்சை," "அவியல்," "அழுகல்" தமிழிலும் "மணிப்பிரவாளம்" என்றதிலும் பற்றில்லை. அவற்றை அவர் அறவே வெறுத் தொதுக்குகின்றனர். தனித்தமிழ்ப் பித்தத்தில் உரங்கொண்டுள்ள எம்போலியருக்கு எமது கல்விப் பசியைத் தணிக்கத் **தனித்தமிழர் பேரவை** அடிகோலி வழிவகை செய்யுமென்பதெம் திட நம்பிக்கை.

இக் கட்டுரை எதிர்பார்த்த அளவிற் கதிகமாய் நீண்டுவிட்டது. எனவே முடிவுரையாகச் சில வார்த்தைகள் கூறி யிதனை முடித்துவிடுகிறேன். தமிழ்க் கலைப்பெருக்கிற்குத் தனித்தமிழ் உரை நடை எவ்வாற்றானும் தடையாகாது. அதில் எட்டுணையும் ஆசங்கை வேண்டா. "எளிய நடை," "பேச்சுத் தமிழ்" என்று சொல்லிக்கொண்டு சில அரைகுறைப் படிப்பர் தமிழ் மொழியைப் பாழ்படுத்தி வருகின்றனர். அவர்களியற்றும் "நூல்"கள் கோழித் தூவல்களேபோல் குப்பை மலிவாய் விலைக்குச் சந்தைக்கு வருகின்றன. இத்தகையோர் கையில் தமிழன்னை படும்பாடு அடையும் வெட்கம் மிகமிக அதிகம். ஆனபடியால் தமிழ்மொழி வளர்ச்சியிலும், கலைப்பெருக்கிலும் உண்மையிற் பற்றும், ஆர்வமுங் கொண்டுள்ள செந்தமிழறிஞர் விரைந்து முனைந்து முன்வந்து ஆவன செய்ய முயலுவார்களாக. தனித்தமிழ் உலகினரும், செந்தமிழ் மாணவரும் தனித்தமிழ் பேரவையின் முடிபுகளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். போலி ஆசிரியர் குழாம் வெட்கித் தலை குனியுமாறு வீரத் தனித்தமிழ்ப் புலவர்கள் வீறுகொண்டெழுந்து தாய் மொழியில் பணியாற்றுவாராக; நற்கருமஞ் செய்குவாராக; திருத்தொண்டுபுரிவாராக. புனிதத் தனித்தமிழ் மணம் புவியெங்கும் கமழுமாகுக.

# மாதர் உலகம்



## பிராட்டியார்

(ஸ்ரீமதி. பண்டித-அசலாம்பிகை அம்மையார்.)

உண்மைப் பெண்மையின் திண்மைக் கற்பின் தன்மையை அவர்களைப் படைத்த பிரமனும் அப் பிரமனைத் தந்த திருமாலும் அனைத்தையும் துடைக்கும் அமலனும் கூட அறியும் ஆற்றல் பெற்றிலர் என்னும் முடிவிற்கு வந்த பிராட்டியார்,

"ஆதலிற் புறத்தினி யாருக்காக வென்
கோதறு தவத்தினைக் கூறிக்காட்டுகேன்."

என்று மனதைத் திடப்படுத்திக் கொள்கிறார். என் மாசற்ற தன்மையில் பூரண நம்பிக்கையுள்ள அந்நிய ஆடவர் பலர் இருக்கலாம். ஆயினும் அவர்களுடைய நல்லெண்ணத்தினால் நான் அடையக் கூடிய பயன் ஒன்றுமில்லை. உயிருக்கிணையாக நேசித்து வாழ்ந்த காதலர்களுக் கிடையே ஐயம் விளைந்தால் புறத்தே பிறரிடம் புகல்வது ஈனம். புகன்று அவர்களுடைய தலையீட்டினால் பிணக்ககல நினைப்பது அதைவிடச் சிறுமை. இத்தகைய தகுதியற்ற முயற்சிகளில் ஆர்வம் வைப்பதை விடச் சிறந்த செய்கை இறந்து புகழ் பெறுவதே என்று துணிந்தார். "அறிவாய் விளங்கும் ஐய," எனத் தன்னைக்கடிந்த தலைவனை நோக்கி விளித்து, "நீர் என்பால் ஐயுற்றவர்போற் கடிவதன் கருத்து, "நீ இறந்து படுதி" என்றேவிய கட்டளையின் குறிப்பாகவே கொண்டேன். கணவனாற் கைவிடப்பட்ட மாதர் உயிர் மாய்ப்பதும் தகுதியே; இஃது நேரிய முறைமையுமாகும்" என்று புகன்றருளினார். வேத, என்று விளித்தது அறிவனே என்னும் பொருள் தருகிறது. தன் பெருமையை அவர் அறியாமற்போனது ஆண்பாலின் இயற்கையாதலின் அதற்காக அவரை இழித்துரையாடாமல், அறிவனே என்று சாந்தமாகவும் மரியாதையுடனும் விளிக்கின்றார். மைதிலியின் கம்பீரமும் நீதியும் கலந்த கேள்விகளுக்கு இராமன் யாதொரு பதிலும் கூற இடமின்றி வாளாயிருந்தனர். பிராட்டியார் அக் குறிப்புணர்ந்து இளையவனை நோக்கித் தீமூட்டித் தருவீராக என வாயினாற் கூறினார். இச் சம்பவங்கள் அனைத்தினையும் நேரிற் கேட்டும் கண்டும் உளைந்து மறுகும் மனத்தினை யுடைய இலக்குவன் இராமனை அவர் கருத்தறிய வேண்டி வணங்குகின்றார். அக் கருத்தை யுணர்ந்த அண்ணல் வாயினாற் கூற நாணியோ, நாவெழாமலோ, எக்காரணம் பற்றியோ, கண்ணிற்

கூறினான் என்றனர் கவியரசர். குற்றமற்ற பெண் தெய்வம் வாயிற் கூறியது தகுதி; ஆனால் குற்றமுற்ற உள்ளமுடைய இராமன் கண் சைகையினாற் றானே கூறமுடியும். இஃது இயற்கையே யாகும். உண்மையில் பிராட்டியாரிடம் லேசமும் ஐயப்பாடு இராமன் உள்ளத்தில் அரும்பியதில்லை. இவ்வுண்மைக்குக் கண்ணிற் கூறினான் என்னும் குறிப்பு விடை ஆதரவு நல்குகிறது. இக் குறிப்பு இரக்கமற்றதும் அறக்கொடியதுமெனப் பாரமார்த்திக முறையில் எவரும் துணிந்து கூறலாம். எனினும் மற்றொரு நுட்பமான விஷயமும் சிந்திக்கவேண்டி யிருக்கிறது. அதாவது பிராட்டியார் கற்பில் தனக்குள்ள திடமான நம்பிக்கையினால் அவள் திருமேனியை அனல் சுடமுடியாதென்பதே தீயில் மூழ்கப் பணித்த துணிவாகும் என்று கொள்வதும் தவறாகாது. திக்குப்பாலகரில் ஒருவரான வருணன் தர்ப்ப சயனத்தில் சரண் புகுந்த அருளுக்கு உரியவனான சம்பவம் இன்றும் நிலைபேறாக நிறுவப்பட்டுள்ளது. அவ் வருணனை யொத்த அக்கினிக் கடவுள் தனது கிரியா சக்தியாகிய தேவியாரை யாது செய்ய முடியும் என்று கருத இடமுண்டு. சாதாரண உலகினர் நோக்கத்திற்கு அனல் அணுகக்கூடிய பொருள் அன்றென்பதுண்மை. சத்தியத்தில் உறுதி யுடையவர்களுக்கு அவ்வனல் தண்ணீரே யாகும். இன்றும் பாஞ்சாலி யென்னும் கற்புக் கடவுளின் ஆலயத்தின் முன்பு பக்தியுடைய பாமர மக்கள் நெருப்புப் பாத்தியில் அஞ்சாது நடந்து சென்று எவ்வித ஊறுமின்றி வெளியேறுவதையும் கண் கூடாகக் காண்கிறோம். அவர்களால் தீக்குழியில் இடப்படும் எலுமிச்சம் பழம் பூச்செண்டு இவைகளைக் கூட வாடச் செய்வதில்லை யெனில் நம்பிக்கையில் வல்லமைக்கு வேறு உதாரணமும் வேண்டுவதோ? இஃதோர் வகை. மற்றொன்றையும் நாம் ஈண்டு நினைவுறுதல் வேண்டும். சிறுத்தொண்டரை நோக்கிப் பெற்ற பாலகனைத் தாய் பிடிக்கத் தந்தை யரிந்து கறி யமைத்து அளித்தால் அன்னமுண்பேன் என நாவு நடுங்காது புரிசடைக் கடவுள் கேட்டதாக ஒரு சரிதம் நமது நாட்டில் நிலவுகின்றது. கொண்ட மனைவியைப் பெண்போகம் வேண்டி நிற்கும் எனக்களிப்பாயாக எனக் கேட்டதாக ஒரு வரலாறும் (இயற்பகையார்) பக்த சரித்திரத்தில் இடம்பெற்றிருக்கிறது. வல்லாளராஜன், கபீர் பலர் இந்த வரிசையில் இடம் பெற்றவர்களாகக் கருதலாம். தான் பெற்ற மகனைக் கீழே ராஜா வீதியிற் கிடத்தி அவ்விளங் குமரனது உரம் நெரியும்படி தானே தேரூர்ந்து செலுத்தியதாக உள்ள கதையைப் பொன்னேபோற் போற்றித் துதிக்கின்றோம். இவ்வகையில் விரிக்கிற் பலவுள. இன்னோரன்ன நிகழ்ச்சிகளை உண்மையென ஆதரித்து வந்திருக்கும் அறிஞர் கருத்து ஆராய்ச்சியில் சாலச் சிறந்ததே யாகும். இவைகளில் கடவுட் சோதனை ஒருவகை; மனிதனின் உறுதி மற்றொரு வகை. பிராட்டியாரை அனல் மூழ்கப் பணித்ததும், பாரதத்தில் அபிமன்னனைக் கொல்ல முன்வந்த சிந்து மன்னனுக்குக் கண்ணன் மறைமுகமாக உதவி புரிந்ததும் கடவுட் டன்மையின் பற்றற்ற இயற்கைக்குப் பெருஞ் சுட்டுகளாகவே கொள்ளல் மேலே கூறிய அனைத்தினுக்கும் மேம்பட்ட நுட்பமாகும். பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த பரம தயாளு, கரிக்குருவிக்கு முத்தி யளித்த கருணைக்கடல், பிள்ளைக்கறி கேட்டதாகச் சரித்திரம் எழுந்த பின்னரும் தயாநிதி என்றே பேரறிவுடைய பெரியார் மனமுருகி நெகிழ்ந்து பணிகின்றார். சக்குபாய் என்னும் பெண்மணிக்காக அவாது உருவத்தைத் தானே கொண்டு வீட்டிற்குரிய குற்றேவல் பலவும் புரிந்து அந்நங்கையின்



மாமிபால் வசைகளையும் தாக்குதல்களையும் அகமகிழ்ந்து ஏற்றவர் பாண்டுரங்கன் எனும் திருமாலே. ஆதலின், விரைவில் நமது சிற்றறிவுக்கு அதிர்ச்சி யெய்தக்கூடிய புராண இதிகாச சரித்திர வரலாறுகளில் மயங்காது அமைதியான ஆராய்ச்சியே இன்றியமையாத தாகின்றது. இவ்விடத்து இலக்குவன் இராமனை வணங்கியதைக் கவி "உலகம் யாவுக்கும் களைகணைத் தொழ என இராமனது எப்பொருள்களிடையும் கலந்து நிற்கும் கடவுட்டன்மையைப் படிப்போர்களுக்கு நினைவூட்டி யுள்ளார். அன்றியும் பின்பு பரதன் குறித்த நாளில் இராகவன் வரவில்லை என்று தீக்குளிக்க முயன்றக்கால் கோசலா தேவியார் தடுக்கின்றார். அதற்கு அவர் புகலும் விடைகளில் "பாசத்தன்பினைப் பற்றற நீக்கலும் ஈசற்கே கடன் யான் அதிழைக்கலேன்" என இராமனது இயல்பாகவே பாசங்களில் நீங்கிய பற்றற்ற தெய்விகநிலைமையை உணர்த்துகின்றார்.

இனி இவ்வித அநுமதி பெற்று இலக்குவன் மூட்டிய தீயினை வலம் வந்த பிராட்டியார், அமரர் மாதரும் அரக்கர் மாதரும் கண்களைப் புடைத்துக் கதறிப் பதைக்க,

"மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேன் எனில்
சினத்தினாற் சுடுதியால் தீச்செல்வா"

என அனற் கடவுளை விளித்து வீர மொழி விளம்புகின்றார். ஆனால் இந்த சந்தர்ப்பத்திலும் "வனத்துழாய்க் கணவற்கும் வணக்கம் போக்கினாள்" என்றார் கவி. தன்னை இக்கொடிய சோதனைக்கு உள்ளாக்கிய கணவனையும் மனதால் வணங்கினார் என்றருளிய பண்பினை எம்மொழி கொண்டு போற்றுவது?

அரிச்சந்திர காதையில் சந்திரமதி கொலைக் குற்றத்தைத் தானே ஏற்றுக்கொண்டு சுடலைக் காவலாளியாக அமைந்துள்ள தனது நாயகனால் வெட்டப்படும் தருணத்தில் கூட,

"பழக்கமானவக் கணவனைப் பாவி யென்னாவி
இழத்தற்கஞ்சி நீயறம் வழுவேல்"

என்று புகன்றதாக ஒரு உதாரணம் காணப்படுகிறது. கற்பிற் சிறந்த காரிகையாரின் அஞ்சா நெஞ்சும், அசையாவுறுதியும், பழிகொடு வாழாது உயிர் விடத் துணியும், தீவிரமும் ஆடவரினும் மேம்பட்டதென்றே கொள்ளவேண்டியிருக்கிறது.

'நீர்தரும் புனலிடை நிவந்த தாமரை, எய்ந்த தன் கோயிலே எய்துவா' ளெனப் பாய்ந்தனர் பிராட்டியார்.' பிராட்டியாரின் கற்புக்கனலை ஆற்றமாட்டாதவனாய் அனற்கடவுள் வருந்தி வெந்த மேனியோடும் இராமன்பால் நண்ணி அலறியதாகவும், அவ்வனற் கடவுள் கூற்றினால் இராமன் பிராட்டி இனிப் பழிப்பிலள்; அனைத்திற்கும் சர்வ சாட்சியாகிய நீயே துதித்தமையால் என்னால் கைவிடத்தக்கதில்லை என்று அங்கீகரித்ததாகவும் இது முடிவெய்துகிறது. உலகுறு மக்கள் ஒழுக்கம்பேணி நன்னெறிப்பட வேண்டுமென்னும் பெருங் கருணையைக் குறிக்கோளாகக் கொண்டே நம் நாட்டில் இருடியர் அறவோர் இதிகாசங்களையும் புராணங்களையும் நமக்கு இயற்றி வைத்தன ரென்பது அறிஞர் துணிபு. அவதாரங்களான அவனியில் உதிக்கும் தேவரு மூவரும், தொண்டர் தொகுதியும் கூட இந்நன்னோக்

கம் கொண்டே உலக மேடையில் அவ்வப்போது தோன்றிக் கடனாற்றி மறை கின்றனர். ஒழுக்கத்தின் உயிர் நாடியும், தியாகத்தின் திறவுகோலும், தாரத்தைக் கவர்ந்தவன் தாயைக் கொன்றவன், எனினும் செய்தது தவறெனச் சரண் புகுவானேல் அவனுக்கும் அபய மளிப்பேன் என்று புகலும் கருணையின் விதையுமாகிய இராகவனுடன் ஆழமான கருத்தை மேலே கண்ட நிகழ்ச்சியைக் கொண்டு தெற்றெனத் துணிவதும் கூடாமையா யிருக்கிறது. இராமனுடைய வெளி நடிப்பும் பிராட்டியாருடைய கற்பின் திடமும் மூவர்களையும் தேவர்களையும் திடுக்கிடச் செய்ததால் அவர்கள் முறையே இராமன் பக்கல் அணுகித் தனித்தனி புகழ்ந்து வியந்து போற்றிப் பிராட்டியாரையும் துதித்து வாழ்த்திச் சென்றதாகத் தொடர்ந்து கூறியுள்ளார். மனித இயல்புக்கு மேம்பட்ட இத்தகைய சம்பவத்தைப் பிரமனோடும் இருந்து அந்தரத்தில் நோக்கிப் பரவச மடைந்த தசரதரும் விண்ணவர் ஏவியபடி மண்ணில் அடைந்து காதல் மைந்தனை யணுகினார். மைந்தனும் சிந்தை மகிழ்ந்து அவர் பாதங்களில் வீழ்ந்து நெடுநாட் பிரிவின் ஏக்கம் தீர நெஞ்சம் நெகிழ்ந்து வணங்குகின்றார். அப்பெறலரு மைந்தனைப் பெற்ற பெரியோரும் உடல் குழையத் தழுவிக் கண்ணீராற் சடைமுடியைக் கழுவி உச்சி முகந்து உடல் புளகித்து விரும்பிய வரங்கள் இரண்டு கேளெனப் பணிக்கின்றார். அதற்கு இராமன் மகிழ்ந்து

> "தீயளென்றுநீ துறந்தவென் றெய்வமு மகனும்
> தாயும் தம்பியுமாம் வரம் தருகெனத் தாழ்ந்தான்
> வாய்திறந் தெழுந் தார்த்தன வுயிரெலாம் வழுத்தி"

என்று கேட்டதாகக் கவி பூரித்துப் புனைகின்றார். "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு" என்ற தெய்வ வாக்கிற்கு முற்றிலக்கணமாக நிற்கும் முறை இஃதன்றோ! வனம் புகப்பணித்த மாற்றாந்தாயை என்தெய்வம் என்றருளுகின்றார். இக்கருத் தொன்றே இராமன் குணத்தினை யலங்கரிக்கும் ஒப்பில்லா ஒப்பனையு மாகும். வனம் புகுந்து படவேண்டிய துன்பங்களை யாவும் சென்றகாலப் பழங்கதைகளாகி இன்ப சூரியன் உதயமாகி வெற்றி முரசம் ஆர்ப்பரிப்ப, அந்தர நாடரும் அக மகிழ்ந்து தன் புகழ்பாடிப் பரவும் இத்தருணத்தில் கைகை பால் வெறுப்பு நீங்கி இவ்வனைத்தும் அம்மாதாவின் கொடுமையி லிருந்தே முகிழ்த்தன வென்பதுகொண்டு **என் தெய்வம்** எனக் கொள்வதற்கில்லை. முதலில் வரம் பெற்று விடைகொண்டு இராஜ வீதியில் வருகையிலேயே தன்னை நாடி வரும் இலக்குவனது அடக்குதற்கரிய கோப எழுச்சியைக்கண்ட இராமன், அவருக்குச் சாந்தம் உண்டாக

> "நதியின் பிழையன்று நறும்புனலின்மை யற்றே
> பதியின் பிழையன்று பரிந்து நமைப் பயந்தாள்
> மதியின் பிழையன்று மகன்பிழையன் றுமைந்த
> விதியின் பிழை நீயிதற்கென்னை வெகுண்ட தென்றான்."

என்ச் சாந்தமாகப் புகன்று தாயை இதற்குக் காரண மாக்காமல், விதியைக் காரண மாக்கினார். தாயும் தந்தையும் கண்கண்ட தெய்வங்கள் ஆதலின் அன்னோர் நம்மை அல்லல் புகுத்த நினைவரோ, ஒருகாலு மில்லை. உலகோர் அவர்களைக் காரணமாக எண்ணும்படி அவர்கள் அன்பை மாற்றி வினை யியற்



றச் செய்வது விதியின் வல்லமை யாகும். ஐயனே இதற்காக உன்போன்ற அறிஞன் தலையால் வணங்குதற்குரிய தெய்வத்தை யிகழ லாகுமோ? என எடுத்துக்காட்டி யுள்ளார். இஃதன்றோ உத்தமோத்தமமான நிலை. இத்தகைய மைந்தனுடைய குணங்களை நன்குணர்ந்து உணர்ந்து மகிழ்ந்து மகிழ்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து நெஞ்சம் குளிர்ந்து பரவசப் பட்டவர் தயரதராதலின் ஈண்டும் அக்கருத்தினை யடக்கி,

> "மைந்தரைப் பெற்று வானுயர் தோற்றத்து மலர்ந்தார்
> சுந்தரப் பெருந்தோளினாய் என்றுனைத் தாளின்
> பைந்துகட்களு மொக்கிலரா மெனப் படைத்தாய்
> உய்ந்தவர்க் கருந்துறக்கமும் புகழும் பெற்றுயர்ந்தேன்"—என்றும்,

> "பண்டு நான்றொழும் தேவரு முனிவரும் பாராய்
> கண்டுகண்டெனைக் கைத்தலங் குவிக்கின்ற காட்சி
> புண்டரீகத்துப் புராதனன் தன்னொடும் பொருந்தி
> அண்டமூலத்தோ ராசனத் திருத்தினை யழகா"

என்றும் தடுப்பரிய உவகை வெள்ளம் கரைகளை வுடைத்துக் கைபரந்து பரந்த பான்மையில் உத்தம மைந்தனை யீன்றதனால் தான் பெற்ற பதவியையும் உற்றுள்ள பெருமிதமான தகுதிப் பாட்டினையும் வெளியிடுகின்றார். அடுத்தாற்போல் தன்னை வணங்கிய தலைமை மருகியாகிய பிராட்டியை உலகாசாரம் பற்றியும் ஒழுக்க வழக்கின்படியும் தீண்டாமல் கருணையாற் றழுவினார் என்றார் கவிவேந்தர். மருகி உண்மையில் மகளே யாகும். எனினும் பெண்களைப் பரிசித்தற்குத் தந்தையாயினும் கால வரையறை யுண்டு என்பதே நமது பண்டைப் பெரியார் கண்ட நுட்பம். பிறபாஷை, பிறர் கொள்கை இவைகளில் ஊறிப்போன இதயமுடைய ஒரு சில நவீன நாகரிகக் கல்வியாளர்கள், பரிசத்தால் தோஷமில்லை யெனவும், கைகுலுக்குவதாற் குற்றமற்ற நட்பு கால் கொள்ளுமெனவும் நம்பி ஈடுபடுவதுடன் விவாதிக்கவும், கூடுமாயின் பிறரைத் திருத்தவும் கூட முந்துகின்றனர். இம்மயக்க வுணர்ச்சியை மாற்றும் நன்மருந்து நமது முன்னூல்களின் ஆராய்ச்சியும் உலக அனுபவ முதிர்ச்சியு மன்றி வேறில்லை. இவ்வாறு தனது அருமைப் பெருந் திருவாகிய அணங்கினை அன்பினாற் றழுவினராய்,

> "நங்கை மற்றுநின் கற்பினை யுலகுக்கு நாட்ட
> அங்கி புக்கி டென்றுணர்த்தியது அதுமனத் தடையேல்"

என்று தனது மைந்தன் அனல் மூழ்கப்பணித்தது ஐயத்தினா லன்று; உலகில் உனது கற்பின் பெருமையைப் பொலிவுறச் செய்யும் பொருட்டே யாகும் என்று உண்மையான காரணத்தை எடுத்துக் கூறினார் பிறி தொருவர் வாக்கால் இக்கருத்து வெளிவரின் அதற்கித்துணை மதிப்பளிக்க இத்தருணத்தில் முடியாது. சத்தியம் காக்க வேண்டி உயிரினையும் உயிரினும் சிறந்த மைந்தனையும் இழக்கத் துணிந்த சக்கரவர்த்தியே இவ்வாறு இராமன் எண்ணத்தை விளக்கியபடியால் பிராட்டியார் மனமும் வாசகர்களின் எண்ணங்களும் ஒழுங்கே சாந்த மடைதல் தக்கதாகும். மேலும் உலகில்,

> "சங்கை யுற்றவர் பெறுவது முண்டது சாதம்
> கங்கைநாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல்"

என்று தொடர்ந்து புகன்றருளினார். உலகியலில் சந்தேகித்த எவரும் அன

வின் மூலம் சோதனை காண்பதும் தொன்மை வழக்காக அமைந்துள்ளது என்று புகன்றதால் அக்காலத்தில் இத்தகைய சோதனைகள் நீதிமன்றங்களில் கூட வழக்காற்றில் இருந்ததாகவும் எண்ண இடந் தருகின்றது. மெய்ம்மையில் நம்பிக்கையுடைய அக்காலத்தில் இத்தகைய சான்றுகளுக்கு உள்ளாவதைச் சாதாரணமாக மக்கள் மேற்கொண்டிருந்திருக்கக் கூடும்.

பொய்ம்மை மலிந்த இக்காலத்தில் சத்தியத்தில் சிறு நம்பிக்கையும் இல்லாத இஞ்ஞான்று மேற்கண்ட முறை ஏற்கக்கூடிய தன்று. இது நீதியே யாகும். என்னதான் உண்மையைத் திறந்து காட்டினாலும் மெய்க்காதலர்களுக்குள் இராமன் நடந்து கொண்ட விதம் (கபடமாயினும்) மன வருத்தத்தைக் கட்டாயம் உண்டுபண்ணும் என்பதைத் தசரதர் உணர்ந்த பேறிஞர் ஆதலால்,

"கங்கை நாடுடைக் கணவனை முனிவுறக் கருதேல்"

என நயந்து கோருகின்றார். இதில் முனியேல் என்று புகன்றால் அது தனக்குரிய மாதுலன் என்னும் அதிகாரம்பற்றி இடும் கட்டளைபோ லாகும். தனது வமிசத்தின் பெருமையையும், தனது புகழையும், தனது மைந்தன் கையிலேந்திய வில்லின் ஆற்றலையும் ஒருங்கே நிலை நிறுத்திய கற்புக் கடவுளை எவ்வாறு தசரதர் கட்டளை யிடுவதற்குத் துணிவர். அஞ்சிக் குறை நயந்து தானே வேண்ட முடியும். தவிர, கற்பருந்ததி உண்மையில் முனிவுற்றால் தன் புதல்வன் புகழ் யாதாகும்? இவ்வளவையும் சிந்தித்துக் கோபியாதே என்று கூறாமல் கோபிக்கவும் எண்ணாதே என்னும் பொருள்பட "முனிவுறக் கருதேல்" என்று நயம்படப் புகன்றார் போலும். அன்றியும் பிராட்டியாரின் கற்புத் தீயினால் சுடப்பட்டு தாங்காது அரற்றிய அக்கினிக்கடவுள் இராமனை நோக்கி,

"பெய்யுமே மழைபுவி பிளப்பதின்றியே
செய்யுமே பொறையற நெறியிற் செல்லுமே
உய்யுமே யுலகிவள் உணர்வு சீறினால்
வய்யமேன் மலர்மிசை யயனு மாயுமே."

என்று பகர்ந்தது தசரதர் அறிந்தவரே. பின்பு பிதாமகன் எய்தி,

"மன்னர் தொல் குலத்தவரினத் துணையொரு மனிதன்
என்ன வுன்னலை யுன்னை நீ,"

எனவும், எறமர் கடவுளு மெய்தி,

"உன்னைநீ யொன்று முணர்ந்திலை போலுமால் உரவோய்
முன்னையாதியா மூர்த்திநீ மூவகை யுலகின்
அன்னை சீதையா மாது நின்மார்பின் வந்தமைந்தாள்"

எனவும் முறையே உணர்த்திச் சென்றனராயினும் கற்புக்கடவுள்பால் அணுகி முனிவாற்றுவதற்கு உரிமை பெறாதவர்களாதலின் தன்னை எவினர் என்பதையும் மன்னர் மன்னன் உட்கொண்டு போந்தவரென்று கொள்ளல் அழகியதாகும்.

# சிதம்பர ரகசியம்—சிதாகாச மான்மியம்

(பண்டித-இராமசுப்பிரமணிய நாவலர்.)

ஆன்றோரால் நிறுவப்பட்ட மதங்களனைத்தும் வீடுபேற்றையே குறிக்கோளாக உடையனவாம். அவ்வீடுபேறு மேலுலகத்தில் உள்ளதென்றும் ஆண்டு அனுபவிக்கப்படும் புண்ணிய நுகர்ச்சிகளின் வடிவே வீடு என்றும் பலர் முரண்படக் கருதி வருகின்றனர். வீடுபேறு என்பது விடுதலை பெறுதல் என்னும் பொருளை உடையது. ஆகலின் மேலுலக இன்ப நுகர்ச்சிக்களன் அழிவுடைத்தாய்ப் போதலின் அது வீடுபேறு எனப்படாது. அது புண்ணிய கன்மத்தின் பயனை நுகருமிடமே யாகும். அதிற் சென்றார் கன்மம் தீர்ந்த பின்னர் மீண்டும் பிறத்தற்குரியர் என்பது ஆன்றோர் கொள்கை. ஈண்டு விடுதலை என்றது உயிர் மாயையினின்றும் விடுதலை பெறுவதாம். ஆகவே, மாயாகாரியமாகிய புண்ணியவுலகப்பேறு வீடுபேறு என்றல் எங்ஙனம் பொருந்தும்? எனவே, வீடுபேற்றிற்கு உரிய நிலம் யாதுதானெனின், அஃது ஒரு நிலமன்று, நிலமாயின் அழிவுடைத்தாம். விடுதலை பெறுதற்கு உரிய இடம் எதுவும் ஆதல்கூடும். இடமன்று ஈண்டுக் கருதற்பாலது. விடுதலைபெறும் பெற்றிமையே வீடுபேறு என்னப்பெறும்.

சிறையிலிருந்து ஒருவன் வீடுபெறுவது போலவே இப்பாரந்த உலகச் சிறையினின்றும் விடுதலைபெறல் வேண்டும. சிறையில் இருந்து விடுதலை பெறுதற்கு ஒருவன் தனக்கு விதிக்கப்பட்ட நுகர்ச்சிகளை நுகர்ந்து ஒழிக்க வேண்டும். மேலும் கன்மங்களால் அரச தண்டனைக் குரியனாயின், மீண்டும் சிறை வாழ்தலே பயனாய் முடியும். ஆதலால், அவன் மீண்டும் சிறைபுகா திருக்கவேண்டின், தீவினைகளை முற்றும் ஒழிக்கவேண்டும். இங்ஙனமே நாம் நமது தீவினைகளை யெல்லாம் நுகர்ந்து மேலும் நுகர்தற்கு வினையின்றி இருப்பின், இவ்வுலகத்தின் தொடர்பு நம்மைவிட்டு அகலும். ஆயினும், புண்ணிய கன்மங்களைச் செய்தாலென்னை எனின், அதுவும் இன்ப நுகர்ச்சிக்குக் காரணமாதலால், வீடு பேற்றிற்குத் தடையாம். அது எதுபோலு மென்னின், நல்லொழுக்கம், பொருட் சிறப்பு கல்விச் சிறப்பு, முதலியன ஒருவனிடத்து இருப்பக் கண்டால், அரசன் அவனைத் தன் அரமனையிடத்து வைத்து வைகலும் சிறப்புச் செய்வதுபோன்றதாம். அச்சிறப்பும் தன் விருப்பத்திற்கு இணங்க வாழ்தலுக்குத் தடையாதலால், விடுதலை யன்று. இது பற்றியே மேலோர் நல்வினையைப் பொன்விலங்கு எனவும், தீவினையை இரும்புவிலங்கு எனவும் கூறுவர். திருக்குறளிலும்,

"இருள்சேர் இருவினையுஞ் சேரா."

என இருவினைகளும் வீடுபேற்றிற்குத் தடை யென்பது படக் கூறப்பட்டது.

## சீவேசுரர் ஐக்கியம்.

இவ்வுலகச் சிறையினின்றும் விடுதலை பெறுதற்குக் கன்மங்களற்றொழிதல் இன்றி யமையாதது என்று உணர்ந்தாம். கன்மமற்ற பின்னர் நிகழ்வது என்னை? எவ்வாறு விடுதலை யுண்டாம்? என்பன கேள்வி. கன்மம் நீங்கிய பின்னர்ப் போகம் (நுகர்ச்சி) இன்மையால் ஈண்டுப் பிறத்தற்குக் காரணமில்லாது ஒழிகின்றது. பிறப்பது கன்ம நுகர்ச்சி எய்தும் பொருட்டே யாதலின், கன்மமின்றேல் ஈண்டுவரல் வேண்டாவாம். வினை நீங்கிய பின்னர்ச் சீவன் ஈசுவரனோடு இரண்டறக் கலக்கின்றது. இதனையே சீவேசுர ஐக்கியம் என்றும் சீவப்பிரம்மைக்கியம் என்றும் கூறுவர். வினை ஒழிந்த உயிர் மண்ணிய மணிபோல அழுக்கற்று அமல சச்சிதானந்த வடிவனாகிய ஈசுவரனுடன் கலத்தற்கு உரிய பெற்றியை அடைகின்றது. அப்பெற்றிமை உண்டாவது காறும் ஐக்கியம் கூடாது. இதுவே வீடுபேறுமாம்.

## உயிர் நிலை—இறை நிலை

உயிர் இதய கமலத்தில் உறைகின்றது. இதயகமலம் உடம்பின் நடுப் பாகத்தினின்று சிறிது இடது பக்கம் நீங்கி உள்ளது. உயிர் நிலைக்குத் தொண்ணூற்றாறு தத்துவங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் மனமே மாயையாய் உயிரை வீடுபேற்றில் நின்றும் விலக்கிக் கொண்டு இருக்கின்றது. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்தினையும் உயிரை இறையை யடையாது மறைப்பன என்ப. ஆகலின், இவை பஞ்சகோசங்களாம்.

இறை இயல்பாகவே அழுக்கின்றி எங்கும் ஞான வொளிவீசி முதல் நடுவீறில்லாது பேரின்ப நிலையமாய் இருக்கின்றது. ஆதலால், சச்சிதானந்த சொரூபி என்க. [சத்-எப்பொழுது முள்ளது. சித்-ஒளியுடையது. ஆனந்தம்-இன்பமுடையது.]

## வீடுபேற்றிற்குரிய நெறிகள்

இருவினை யற்றபோழ்து வீடுபேறு கைகூடுமென்று முன்னரே உரைத்தாம். இருவினைகளை நீக்குவது எளிதின் முடிவதன்று. நினைத்தலும் செய்தலும் வினையாதலால், எங்ஙனமேனும் வினைத் தொடர்பு உண்டாதலே இயற்கை. ஒன்றை நினையாமலும் செய்யாமலும் இருத்தலே வீடுபேற்று நிலையாயின் அவை முன்னர்க் கைகூடுவது எவ்வாறு? சிறுகச் சிறுகச் செய்கின்ற பயிற்சியாற் கைகூடுமென்னின், அப்பயிற்சி தானும் இடையொருவின், செய்த பயிற்சியெல்லாம் பாழாம். பற்றின்றிச் செய்கின்ற வினைகள் தொடரா எனின், அதுவும் பரிபக்குவ மெய்வதற்கே அமையும். எங்ஙனமேனும் சீவன் பிரமத்தோடு ஐக்கியமாவதே வீடுபேறாதலால், அதற்குரிய நெறிகளெல்லாம் வீடுபேற்று நெறிகள் எனப்பெறும்.

ஆதலால் கன்ம நீக்கம் செய்து கோடற்கு இயலாதவர்கள் பத்திமார்க்கம், யோகமார்க்கம், ஞானமார்க்கம் என்னும் இவற்றில் பயின்று ஆன்மாவைப் பிரமத்தோடு கலக்கும்படி செய்கின்றனர். இவையெல்லாம் இறுதியில் ஆன்மா தூய்மை எய்தி இறையோடு கலத்தற்குரிய நெறிகளேயாம். அதிதீவிர பத்தியால் உள்ளொருக்கமெய்தும். அவ்வொருக்கத்தான் ஆன்மா பிரமத்தோடு ஐக்கியமாம். யோகத்தான் உயிர் சிந்தனை நீங்கித் தூய்தாகிப் பிர



மத்தோடு இரண்டறக் கலக்கின்றது. ஞானத்தான் உயிர் தெள்ளத்தெளிந்து பரஞான வடிவாகிய இறையோடு ஐக்கியமாகின்றது.

பத்திநெறி நிற்போர் தம்தம் மதக் கோட்பாடுகளுக்கு இயையப் பிரமத்தையே வடிவுடைத்தாகக் கருதி வழிபடுகின்றார்கள். சிலர் அவ்வடிவைச் செம்பு முதலியவற்றில் வடித்து வழிபடுகின்றனர். சிலர் உள்ளத்திலேயே ஏதேனும் ஒரு வடிவை நினைந்து வழிபடுகின்றார்கள். இவ்வடிவுகளெல்லாம் குறிக்கோள்களல்ல. ஒன்றினும் பற்றி நில்லாது திரிகின்ற உள்ளத்தை ஒருவழிப்படுத்தித் தூய்மை செய்தற் பொருட்டே வடிவங்கள் கொள்ளப்படுகின்றன. ஆதலால், சிவன், திருமால் முதலியனவாகப் பெயரிடப்படும் கடவுளரெல்லாம் பிரம வடிவெனவே சுட்டப்படுகின்றனர். அறிவிலிகள் பலர் கடவுளர் உண்டென்றும் பல்வித முத்தி உண்டென்றும் மயங்கி 'மதச் செருக்குக் கொண்டு அலைகின்றனர். விக்கிரக ஆராதனையைக் கைக்கொண்ட மதங்கள் விக்கிரங்களையே குறிக்கோளாகவுடையனவல்ல என்பதை உணரல் வேண்டும்.

## விக்கிரக ஆராதனை

விக்கிரகங்கள் ஆன்மகோடிகளுக்காக ஆலயங்களிற் செதுக்கப்பெற்றுள்ளன. இவற்றைக் கடவுட்டன்மை உடையனவாக வழிபடும்போழ்து, நமது உயிர்க்கும் இறைக்கும் உள்ள தொடர்பும் உயிரின் கட்டுப்பாடும் அது நீங்கும் நெறியும் பிறவு முணராக்கால், மனவொருக்க மெய்தி வீடுபெறுதற்கு நீண்டகாலம் வேண்டற்பாலதாம். ஆதலால், முந்தையோர் கோயில்களின் வாயிலாக உடம்பு, உயிர், இறை இவற்றின் தன்மைகளை நன்கு விளக்கி உள்ளார்கள். அவையே நமக்கு ஆசாரியர்களைப்போல நின்று வீடுபேற்றின் உண்மையைத் தெரிக்கின்றன. இவற்றை யறியாது வாளா கோயில் சூழ்வார்க்கு வரும் பயன் பெரிதன்று. அக்கோயில்களின் அமைதியைக் குறித்துக் 'கோயில்' என்னும் கட்டுரையில் விளங்க உரைப்பாம். இவ்விடத்துச் சிதம்பர க்ஷேத்திர அமைதியைக் கட்டுரைத்துச் செல்வாம்.

## சிதம்பர ரகசியம்

சித் என்பது ஞானம். அம்பரம் என்பது ஆகாயம். எனவே, சிதம்பரம் என்பது ஞானாகாயமாம். சீவனும் பிரமனும் கலந்தொளிருமிடம் ஞானவெளியாம் ஆண்டு பரஞானத்தையின்றிப் பிறிது எதுவுமின்று. வெளியுலகத்தோற்றங்களெல்லாம் ஒடுங்குமிடம் அதுவே. அது ஊர் நாடு காடுபோல்வதொரு இடமன்று. உள்ளம் அற்று ஆன்மா வெளியுலகப் பற்று முற்றுமகன்று தன்னந்தனியனாய் ஞான வடிவிற்றாய் எங்கும் பரந்த இறையுடன் கலந்து நிற்பதே ஈண்டு ஞானவெளி என்று கூறப்பட்டது. இத்தகைய நிலையை எய்திய ஒருவன் சிறையில் இருப்பினும், காட்டில் இருப்பினும் அவனுக்கு வெளி உலக இன்ப துன்பங்கள் தோன்றாமையால் விடுபட்டவனே என்க. உடல் நீங்குங்காறும் இத்தகைய முத்தி நிலையில் நிற்பன். இதுவே **சீவன் முத்தி** எனப்படும். உடல் நீங்கின், அங்ஙனம் முத்தி எய்தி நின்ற உயிர் உடலாகிய கட்டும் நீங்கி எங்கும் பரந்தொளிரும் இறையோடு கலந்து ஒளிர்கின்றது. இதுவே **விதேக முத்தியாம்.**

சீவன் முத்தன் நுகரும் வீடு பேற்றின்பமாகிய ஆன்ம பரமான்ம ஐக்கிய நிலையே ஞானாகாயம் என்பர். இச்சிதாகாசத்தையே சிதம்பர க்ஷேத்திரம் விளக்கி நிற்பது. எனவே, சிதம்பர க்ஷேத்திரக் காட்சியால் எய்தவேண்டும் பயனாவது இச்சிதாகாய தரிசனத்தை ஒவ்வொருவரும் தம்முள்ளே எய்தல் வேண்டும் என்பதே. அதுவே முத்தி. ஆகலின், சிதம்பர தரிசனமே முத்தி எனப்பட்டது. இதை உணராது சிதம்பரத்தை ஒருபோழ்து தரிசித்தால் முத்தி கைகூடும் என்று பிதற்றிக்கொண்டு வைகலும் சிதம்பரம் சென்று வீண் பொருளும் காலமும் வீணாக்கித் திரிகின்றனர் சிலர். அவர்களுக்குச் சிறிதும் பயனின்றாம். அவர் சிதம்பர தரிசனம் செய்வதும் சித்திரப் பாவையைத் தரிசிப்பதும் பெரும்பாலும் ஒன்றேயாம். நடராசனை இறையென்று கருதும் மனப்பான்மை ஒன்று மட்டுமே அவர்க்கு விஞ்சுகின்றது. அங்ஙனம் கருதுதற்குச் சிதம்பரத்தைப் போலப் பிறவும் பயன்படுமாகையால், அவர்க்குச் சிதம்பர தரிசனப் பயன் இல்லை என்று கூறினும்.

## கோயில் அமைதி

சிதம்பரத்திற்குக் கோயில், சிற்றம்பலம், பொற்சபை, அம்பலம், சிதாகாசம், பரவெளி, ஞான வெளி, சபை முதலிய பெயர்கள் உள. வடமொழியாரும் கோயில் என்னும் பெயர் கருதி வட மொழியிலும் க்ஷேத்திரம் என்று சிதம்பரத்தையே சிறப்பிப்பர்.

உடம்பில் இதய கமலம் இருப்பதே போன்று இருத்தலின், மண்மகளுக்கு இதயஸ்தானம் சிதம்பரமேயாகும். உடம்பினுள்ளே இருக்கும் இதயம் தகராலயம். அதுவே கமலவீடு. அவ்விதய கமலத்து இருக்கும் இறை ஆகாயம். அதுபோன்றே தில்லை வனம். அதுவே கமலவீடு. அவ்வனத்துள்ள (சிதம்பரத்துள்ள) இறை ஆகாயம். அதுவே சிவம். ஞானாகாயத்திற்கு அழிவில்லையாதலின், சிதம்பரமும் அழியாது நிற்பதென்று கூறப்பட்டது. சிதம்பர க்ஷேத்திரத்துத் திருநடனம் செய்யும் சபாநாயகருடைய திருவுருவம் பஞ்சாக்ஷர வடிவம். சிவ சத்தி அவரது உண்மை வடிவம். அவருடைய ஆனந்த நடனம் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களாம். 'அவனின்றி ஓரணுவும் அசையாது' என்பதை வற்புறுத்தற்கு நடனம் கூறப்பட்டது. இறை யியக்கமின்றேல் எத்தொழிலும் நடைபெறாது என்பதைக் குறிப்பிக்கும் திருநடனத்திற்கு இயைய ஆன்மாக்கள் இயங்குகின்றன என்றது இறைக்கும் உயிர்க்குமுள்ள ஒற்றுமை கூறியவாறு. ஆக்கல் டமருகத்திற்றோன்றும், அளித்தல் அபயகரத்திற்றோன்றும்; அழித்தல் நெருப்பிற்றோன்றும்; மறைத்தல் ஊன்றிய திருவடியிற் றோன்றும்; அருளல் எடுத்த திருவடியிற்றோன்றும். டமருகம் (பேரிகை). ஆறுதல் பெறும் உயிர்களைத் தட்டி எழுப்பி முயற்சிகண் ஊக்குவதனால் படைத்தலுக்காயிற்று. அபயகரம் வருந்தி வந்தாரை 'அஞ்சல்' என்றுரைத்துப் பாதுகாக்கு முறையதாகலின், அளித்தலுக்காயிற்று. நெருப்பு அழுக்கற எவற்றையும் அழிப்பதாகலின் அழித்தலுக்காயிற்று. ஊன்றிய திருவடி தன் கீழ்ப்பட்ட பொருளை மறைத்தல்போல யாவற்றையும் தன்னிடத்தில் மறைத்தலுக்காயிற்று. எடுத்த திருவடி ஒன்றனையும் மறையாது வீடு எனப்படும் தன்னை யளித்து உதவுதற்கெடுத்தமையின், அருளலுக்காயிற்று. இஃதுவே நடன ரகசியமாம்.

சிதம்பரம் விராட்புருடனுக்கு இதயநிலை. கோயிலின் கண்ணுள்ள ஆயிரக்கால் மண்டபம் தலையின் புறத்ததாகிய மூளை என்னும் கமலம். சிவ



கங்கை என்னும் தீர்த்தம் அம்மூளைப் புறத்துள்ள சந்திர புஷ்கரணி என்று யோகிகளாற் கூறப்படும் 'அமுதவாவி. இவற்றின் தென்புறத்துள்ள குருமூர்த்தியும் ஜோதிர்லிங்கமும் எழுந்தருளிய விடம் விசுத்தி. விசுத்தி என்பது உடம்பிலுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களுள் ஒன்று. கோயிற்றிருப்படிகள் ஐந்தும் பஞ்சாக்ஷரங்கள். பஞ்சாக்ஷரங்களாவன சிவயநம என்பன. அப்படிகளை இன்றும் பஞ்சாக்ஷரப்படி என்று கூறுவது வழக்கு. அவற்றையடுத்த கதவு அவித்தை. இறையைப் புலப்படுக்காது மறைப்பது பற்றி அவித்தை எனப்பட்டது. (அவித்தை, அஞ்ஞானம்) தொண்ணூற்றாறு பலகணிகளும் தொண்ணூற்றாறு தத்துவங்களாம். நடுவணுள்ள நான்கு பொற்கம்பங்களும் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள் அவற்றைச் சுற்றிய இருபத்தெட்டு மரக் கம்பங்கள் இருபத்தெட்டு ஆகமங்களாம். ஆகமங்களினும் வேதம் சிறப்புடையனவாதலால், வேத கம்பங்கள் பொன்னின் இயன்றன. இவ்விருவகைக் கம்பங்களின் நடுவணுள்ள விடம் சுத்த வித்தை. சிதம்பர ரகசிய ஸ்தானம் முதல் நடராஜர் இடம் வரையுள்ள பீடம் பிரணவம். அப்பிரணவ பீடத்தில் சகளாகார ஸ்ரீ நடராஜப்பிரான் எழுந்தருளியிருக்கின்றனன். வாயு பாகத்தில் சகள நிஷ்களாகார வியக்தா வியக்த லிங்கமுள்ளது. அதன் பின்னர் யாவரானும் புகழப்படும் **திருச்சிற்றம்பலம்** என்னும் சிதாகாசம் இலங்கும். இதுவே வீடுபேற்றுண்மையை விளக்குவது. ஆன்மாவும் பரமான்மாவும் கலந்தொளிரும் ஞான வெளியே இங்குச் சிதாகாசம் என்று குறிப்பிடப்பெறுகிறது. முத்தியின் இரகசியம் இச்சிதாகாசமே. இது விளங்கின் வீடு வெளிச்சமாம். இதனை அறியாமையான் இது இரகசியமாமென்க. இச்சிதாகாச ஸ்தானத்தையே 'சிதம்பர இரகசியம்' என்பர். இதனைத் தரிசிப்பதின் பயனாவது அத்தகைய சிதாகாச வடிவாய் ஒவ்வொருவரும் நிற்றலாம்.

கர்ப்பக்கிருக விமானத்தின் மீதுள்ள ஒன்பது கும்பங்களும் நவசக்திகள் என்னப்படும். அதன்கண்ணுள்ள கைமரங்கள் அறுபத்து நான்கு கலைகளாம். மேல் வேய்ந்த செப்போடுகள் இருபத்தோராயிரத்து இருநூறும் மக்கள் நாடோறும் விடப்படுகின்ற உயிர்ப்புக்களாம். (ஒவ்வொருவரும் நாளொன்றற்கு 21200 சுவாசங்கள் விடுப) ஓட்டிற் பதித்த ஆணிகள் எழுபத்தீராயிரமும் எழுபத்தீராயிரம் நாடிகள். இதன் தென்புறத்துள்ள கனகசபையில் உள்ள பதினெண் கம்பங்கள் பதினெண் புராணங்கள். அதுவே மணிபூரக ஸ்தானம்.

இராஜ சபை அன்னமய கோசம்; தேவசபை பிராணமய கோசம்; நிருத்த சபை மனோமய கோசம்; கனகசபை விஞ்ஞானமய கோசம்; சிற்சபை ஆனந்தமய கோசம்.

உடம்பின் இடது புறத்து இருக்கும் இதய கமலத்தைப்போல ஈண்டும் கர்ப்பக்கிருகம் நடுவிலன்றிச் சிறிது இடப்பாங்கர்த்தள்ளி அமைக்கப்பட்டது. இதயத்தில் உதிரமோடும் வழி இருபுறத்துமாதலால், கர்ப்பக்கிரகத்தின் இரண்டு பக்கங்களும் வாயில்கள் அமைக்கப்பட்டன.

ஆன்மாவை மறைக்கும் மனம் முதலியவற்றைக் கடந்தவர்க்கன்றி ஆன்மக் காட்சி (சாட்சாத்காரம்) எய்தலாகாதது போன்று ஒவ்வொரு கோயில்களி

னும் இறைவனைக் காணவொட்டாது மறைக்கும் மதில்கள் உள்ளன. மன முதலியவற்றை நன்காய்ந்து அவை பொருளல்ல என்று உணர்ந்து ஆன்மக் காட்சி எய்தவேண்டுமாதலால், இம்மதில்களையும் சுற்றி அவற்றின் பெற்றிமை உணர்ந்து அவற்றை நீங்கி இறையை எய்தல்வேண்டும். ஆன்ம சாட்சாத்காரம் பெற்று இறையொடு கலந்து நிற்கும் பெற்றிமைபோல ஈண்டும் கோயிலினுட் சென்று இறையைத் தரிசித்து இரண்டறக் கலந்து நிற்றல் கருத்தாம்.

சிதம்பர க்ஷேத்திர மதில்களும் ஆன்மக்காட்சியை மறைக்கும் தத்துவங்கள்போல்வனவாம். இறையை உட்சென்று காண்டல் ஆன்ம பரமான்ம ஐக்கியக்குறி என்க. எனவே, சிதம்பர க்ஷேத்திரம் தூலமாக ஆன்ம சாட்சாத்கார சூக்குமப் பொருளை உணர்த்தி நிற்பது என்று அறிதல்வேண்டும். அத்தூல நெறிகண்டு தாமும் உள்ளே பயின்று ஆன்ம சாட்சாத்காரமெய்தி இறையோடு இரண்டறக் கலத்தலாகிய வீடுபேற்றை எய்தி ஆன்ம கோடிகள் உய்தற்பொருட்டே சிதம்பரதரிசனம் இன்றியமையாதது எனப்பட்டது. சிதாகாச மான்மியமே சிதம்பர ரகசியத்தால் வற்புறுத்தப்படுவ தென்க.


# "Funny" Magzin of India

(Bi-monthly) Published on the 5th & 20th.

*GIVES THE BEST OF EVERYTHING*

**Jokes, Stories, Serials, Humorous articles, Cartoons of great events and Competitions**

LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE
OUR ADDITIONAL FEATURES.

**Price As. 1-6.**

AVAILABLE AT ALL STALLS & NEWS AGENCIES.

*Apply to:—*

**The "Funny Magzin" Office,**
*No. 6, Lawyer Chinnathambi Mudali St.,*
**Sowcarpet, MADRAS**


# சந்திரவதனை

## (ஓர் சரித்திரக் கதை.)

(வீ. சங்கரய்யர்.)

(496-பக்க தொடர்ச்சி.)

அக்காலத்தில் இந்தியாவை அரசாண்ட மஹா அக்பருக்கு ஸலீம் என்ற ஒரு புதல்வன் உண்டு. இவன் தாயார் மஹா அக்பரின் ராஜபுத்திர மனைவியும் ஜோதிபுரத்து அரசரின் புதல்வியுமான ஜோதிபாய் என்பவள். அவள் தமது குமாரனை ஸலீம் ஒரு முனிவருடைய அனுக்கிரகத்தால் பிறந்த காரணத்தால் அவனை ஸாலிம் சிருஷ்டி என்று புகழ்ந்து சிறு வயது முதல் செல்வமாக வளர்த்துக் கெடுத்துவிட்டாள். ஆகவே அவனுக்குப் பிடிவாத குணமும் சோம்பேறித் தனமும் அதிகமாய் விட்டன. தவிர; மதுபானம் செய்வதிலும் சிற்றின்ப விஷயங்களிலும் தமது காலத்தைப் போக்கவும் ஆரம்பித்து விட்டான். ஸலீம் ஒரு நாள் கியாஸைக் காணும் பொருட்டு அவர் வீட்டுக்கு விஜயம் செய்தான்.

அங்கே தங்களுடைய வழக்கப்படி ஸ்திரீகள் அவர்களின் முகமூடியுடனேயே அரச குமாரனுக்குமுன் வந்தார்கள். அப்பொழுது மங்கைப் பருவமடைந்திருந்த சந்திரவதனையின் மீது ஸலீம் முற்றிலும் மோகங்கொண்டு விட்டான். அச் சமயத்தில் இதை யறிந்த சந்திரவதனையும் தற்செயலாய் நிகழ்ந்துவிட்டதாய் காண்போர் நினைக்கும்படி தன்னுடைய முகமூடியை மிருதுவாக நழுவி விட்டு தன் பூர்ண சந்திர வதனத்தை ஸலீமுக்கு காண்பித்து நின்றாள். ஆனாலும் அன்று அவன் மௌனமாகவே யிருந்து விட்டான்.

வேறொரு முறை ஸலீம் அவளைத் தனியாகச் சந்தித்தபொழுது ஆலிங்கனம் செய்யக்கருதி அவள் கரங்களைப் பற்றினான். ஆனால் அவள் மனம் ஷேர் ஆப்கன் என்ற வீரன் மீது சென்றிருந்தது. ஆகையால் அவள் அதற்கு இசையவில்லை. 'ஆசை வெட்க மறியாது' என்ற வண்ணம் ஸலீம் தன் எண்ணத்தைத் தன் தந்தையிடம் தெரிவித்தான். அவர் அவனபிப்பிராயத்துக்கு இணங்கவில்லை.

ஹிந்துக்களான ராஜபுத்திரர்களுக்கும் மகம்மதியர்களுக்கும் அந்தரங்க நேசத்தை உண்டுபண்ணி அதனால் ராஜ்ய க்ஷேமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது அக்பரின் கொள்கை யாகையால், மகா நீதிமானான சக்ரவர்த்தி இளவரசனை தன் குமாரனுக்காகவும் நியாய மில்லாத ஒரு காரியத்தைச் செய்ய முடியாது என்று கண்டிப்பாய் கூறிவிட்டார். அப் பெண்ணின் பெற்றோர்களும் தங்கள் அருமை மகளை அவளிஷ்டப்படியே ஷேர் ஆப்கானுக்கே விவாஹம் செய்து கொடுப்பதாக நிச்சயித்து விட்டார்கள்.

ஆகையால் அவர்கள் இஷ்டப் பிரகாரம் சந்திரவதனையை உடனே ஷேர்

ஆப்கானுக்கே மணம் புரிவித்ததுமன்றி இளவரசனை ஸலீமினுடைய பார்வையிலிருந்தும் அத் தம்பதிகளை அப்புறப் படுத்தவும் மகா அக்பர் சக்கரவர்த்தி தீர்மானித்தார். வங்காளத்திலுள்ள பர்துவான் என்னும் ஜாகீரை, ஷேர்ஆப்கானுக்கு இனாமாக அளித்து தன் மனைவியுடன் சுகமாக வாழும்படி உத்தரவளித்தார். அவ்வுத்தரவை சிரமேற் வகித்து ஷேர் ஆப்கானும் தன் மனைவியுடன் பர்துவான் சென்று சுகமாக வசித்து வந்தான். அங்கு அவருக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்தது.

ஷேர் ஆப்கானே அநேக யுத்தங்களில் முன்னின்று போர் புரிந்து அக்பர் சக்கரவர்த்திக்குப் பல வெற்றிகளை பெறும்படிச் செய்திருக்கிறான். ஆகையால் ராஜ தர்பாரில் இவன் மிகப் பெருமையுடன் பாராட்டப்பட்டு வந்தான். ஆகையால் ஸலீம் இளவரசனுக்கு இவனை ஒன்றுஞ் செய்ய முடியவில்லை.

மகா அக்பர், தன் புத்திரனான ஸலீமுக்கும் அதிரூபவதியும், ராஜா பகவான்தாஸின் புத்திரியும், ஜயபுரத்து அரசனான ராஜா பீஹாரிமாலின் பௌத்திரியுமான ஜோதிபாய் என்னும் இராஜபுத்திர ஸ்திரீயை விவாஹம் செய்து வைத்தார். ஆனாலும் இளவரசரின் மனம் சந்திரவதனாவிடம் ஆழ்ந்து பதிந்திருந்தது. ஆகையால் சந்திரவதனாவைக் கைப்பற்றுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்துகொண்டே வந்தான்.

## அத்தியாயம் 3.

அக்பருடைய அந்தியக் காலத்தில் அவருக்குப் பெரும் கவலைகள் ஏற்பட்டன. அவர் தக்ஷிணத்தி லிருந்த பொழுது அவருடைய குமாரன் சலீம் அவருக்கு விரோதமாகக் கிளம்பி தானே சக்கரவர்த்தி யென்று விளம்பரப் படுத்தினான். ஆனால் சக்கரவர்த்தி ஆக்ராவுக்குத் திரும்பி வந்ததும் தன் மகனின் துர் நடத்தையை எல்லாம் மன்னித்து விட்டார்.

துரைத்தன விஷயமாக அக்பருக்கு உதவி செய்துவந்த மகம்மதியருக்குள் அபூல் பாஜல், அபூல்பாஜி என்ற இரண்டு சகோதரர்கள் முக்கியமானவர்கள். இவர்கள பாரசீக பாஷையில் பெரிய கவிகள்; அக்பருக்குத் தோழர்கள். அபூல்பாஸிலின் பெருமையைக் கண்டு பொறாமை கொண்டு, அவர் தக்ஷிணத்திலிருந்து திரும்பி வரும் வழியில் ஸலீம் அவரை, 1602—ல் வஞ்சகமாய்க் கொலை செய்வித்தான். இதுகேட்ட சக்கரவர்த்தி தன் மகன் செய்த துர் நடத்தைக்காக மிகவும் வருத்தப்பட்டு இரண்டு நாள் வரையில் ஆகாரம் நித்திரை யொன்றுமே யில்லாமல் இருந்தார்.

ஸலீமுக்குத் தன் புத்தி என்பதே கிடையாது. அவன் இயற்கையிலேயே கொடியவன். சிற்றின்பப் பிரியன். ஆகையால் அந்தப்புர ஸ்திரீகளில் ஒரு ராஜபுத்திர பெண்மணியின் கற்பைக் கெடுத்து விட்டான்; ஆகையால் அவள் தற்கொலை செய்து கொண்டாள். இதை யறிந்த அக்பர் மனம் முன்னிலும் அதிக கஷ்டத்தை யடைந்தது. ஸலீம் பழக்கப்பட்ட முதிர்ந்த குடிகாரனாகவும் கொலைபாதகனாகவும் அரண்மனையில் பிரகாசித்தான்.

அக்பருக்கு ஸலீமின் மகனான குஸ்ரூ என்பவனிடம் அதிக அன்பு உண்டு. குஸ்ரூ பிரதான தளகர்த்தரான ராஜாமான சிங்கின் மருமகன். ஆகையால் ராஜாமான சிங் தன் மருமகனையே இளவரசாக்க வேண்டுமென்று எண்ணினார். ஆனால் மஹா அக்பர் இறக்கப் போகும் தருணத்தில் பல பிரபுக்கள் முன் ஸலீமை தம்முடைய பட்டத்துக்குரியவனாக்க வேண்டுமென்று



கூறி விட்டார். பிரபுக்களும் அவர் வாக்கை வேதவாக்கியமாகக் கருதினார்கள்.

அம்மஹான் 1905-ம் வருஷம் அக்டோபர் மாதம் 13-ம் தேதி யன்று இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து பரலோக சுகம் அனுபவிக்க வேண்டி இப்பாழும் உடலை விட்டு நீங்கினார். இவர் அறுபது வருஷகாலம் மஹா கீர்த்தியுடன் அரசாக்ஷி செய்து வந்தார். அவருடைய எண்ணம் இந்தியா முழுவதும் ஒற்றுமையுடன் இருக்கவேண்டு மென்பதுதான். அதற்காகவே மகம்மதிய மதத்தைச் சேர்ந்தவராக யிருந்தும் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் ராஜபுத்திர ரத்னங்களை விவாஹம் செய்துகொண்டு அவர்கள் நட்பை விருத்தி செய்தார்.

## அத்தியாயம் 4.

அக்பர் சக்கரவர்த்தி தேகவியோகமான சில நாட்களுக்குப் பின், ஸலீம் 'உலகத்தை ஜயித்தவன்' என்னும் பொருள் தரக்கூடிய 'ஜிஹாங்கீர்' என்னும் பட்டப் பெயர் தரித்தார். அவர் ராஜபுத்ரர்களில் ரத்னமாக விளங்கியவனும் அக்பரின் தளகர்த்தருமான ராஜாமான சிங்கின் ஆதரவைப் பல விதமான ஸ்தோத்திரங்களால் பெற்று, அவரிடமே சேனாதிபதி உத்தியோகத்தை ஒப்படைத்தார்.

தன் மாமனான ராஜாமான சிங்கின் உதவி குஸ்ரூவுக்கு இல்லாமற் போனபடியால் குஸ்ரூ செய்த கலகம் சிறிதும் பிரயோசப்படவில்லை. ஜிஹாங்கிர் அக்கலகத்தை அடக்கினதுமன்றி அதில் கைதிகளாக்கப்பட்ட எழுநூறு பேர்களையும் லாஹூரில் கழுவி லேற்றும்படியும் கட்டளை யிட்டு விட்டார். பிறகு தன் மகனையும் யானைமீதேற்றி மரண வேதனையால் அலறுகிற அவ்வீரர்கள் இருக்கு மிடம் முழுதும் அழைத்துச் செல்லும்படிக் கட்டளை யிட்டார். இதை கண்ணால் பார்த்த குஸ்ரூ நெடுநாள் வரையிலும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவே யிருந்தான்.

ராஜாமான சிங் ராஜ்யத்தின் பலபாகங்களுக்குச் சென்று எங்கும் சமாதானத்தை நிலைநாட்டினார். ஆகையால் அவரை வங்காள கவர்னராக நியமித்தார். ஆனால் நியமித்த எட்டு மாதத்திற்குள் வங்காளத்தி னின்றும் அவரை டில்லிக்கு வரவழைத்து வேண்டிய மட்டும் உபகாரச் சம்பளம் கொடுத்து தம்முடை பிதுரார்ஜித ஜாகீருக்கு சென்று சுகமாக வாழும்படி உத்தரவு கொடுத்து அனுப்பி விட்டார்.

## அத்தியாயம் 5.

ஜிஹாங்கீர் பட்டத்துக்கு வந்ததும் சந்திரவதனாவை அடைவதற்கு வேண்டிய வழிகளைத் தேடினார். அதற்காகவே ராஜா மானசிங்கை வங்காளத்திலிருந்து வரவழைத்தார். அவருக்குப் பதிலாகத் தன் சிநேகிதனான குத்புதீனை 1606-ம் வருஷம் ஜிஹாங்கீர் வங்காள கவர்னராக நியமித்தார்.

குத்புதீன் ஷெர்ஆப்கானுடன் சமாதானம் செய்துகொண்டு எவ்விதமாவது சந்திரவதனாவை டில்லிக்கு அனுப்ப முயன்று பார்த்தான். ஆனால் 'பிராணனை விட்டாகிலும் மானத்தைக் காப்பாற்றவேண்டும்' என்பதை நன்குணர்ந்த ஷெர் ஆப்கானிடம் அது பலிக்கவில்லை.

18757

ஆகையால் ஜிஹாங்கீர் ஷேர் ஆப்கானை நேரில் டில்லிக்கு வர வழைத்தால் அச்சமயம் எதாவது யோஜனை செய்து கொள்ளலாமென்று தீர்மானித்தார். அவர் உத்தரவு பிரகாரம் ஷேர் ஆப்கானும் டில்லிக்கு வந்து சேர்ந்தான். சக்கரவர்த்தியும் அதிக மரியாதையுடன் அவனைப் பலவிதமாக உபசரித்தார்.

ஷேர் ஆப்கானோ கபடமற்ற பரம யோக்கியன். ஆகையால் சக்கரவர்த்தியின் கபடமான சூழ்ச்சிகளைக் குறித்து சிறிதும் சந்தேகப்படவில்லை நமது வீரன். இவன் முன்னொரு முறை காட்டில் ஆயுதம் ஒன்றுமே யில்லாமல் தனிமையாக ஒரு சிங்கத்தைக் கொன்று அதனால் சிங்க சங்காரன் என்ற பொருளுள்ள ஷேர் ஆப்கன் என்ற பெயரைப் பெறும்படியான அவ்வளவு வீரனாக இருந்தான். அவனை ஜனங்களெல்லாரும் நேசித்தார்கள். சக்கரவர்த்தியும் இவனது புகழையும் தைரியத்தையும் உத்தேசித்தே இவனை உடனே ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும் இவன் உயிரோடிருக்கும் வரை சந்திரவதனாவை அடைய முடியாது என்று சக்கரவர்த்திக்குத் தெரியும். ஆகையால் இவனை தந்திரமாகத்தான் கொல்ல வேண்டுமென்று சக்கரவர்த்தியம் தீர்மானித்தார்.

முடிவாக ஷெர் ஆப்கனுடன் வேட்டைக்குச் சென்று காட்டில் வைத்து தன்னை யாரும் சந்தேகிக்கா வண்ணம் வஞ்சகமாக அவனைக் கொல்ல அச்சக்கரவர்த்தி தீர்மானித்தார். பரிவாரங்களுடன் யானைகளின் மீது ஏறிக் கொண்டு காட்டிற்கு வேட்டைக்குச் சென்றார்கள். அக்காட்டில் புலியொன்று இவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது.

இதைக் கண்ணுற்ற சிலர் அதை வேட்டையாடிக் கொல்ல ஓடினார்கள். ஆனால் ஷேர் ஆப்கான் அவர்களை நிறுத்திவிட்டு எங்கே தன் சிங்க சங்காரன் என்ற பட்டம் மங்கி விடுமோ என்று யோசித்து யாதொரு ஆயுதமுமின்றி அப்புலி எதிரே சென்று கடும் போர் புரிந்தான். ஜிஹாங்கீரும் ஒவ்வொரு நிமிஷமும் ஷேர் ஆப்கானின் முடிவை எதிர்பார்த்த வண்ணமே யிருந்தார். ஆனால் கடவுள் அபிப்பிராயம் அப்படி யன்று. நமது வீரன் அப்புலியின் கால்களைப்பற்றி கர கரவென்று சுற்றி வீசி யெறியவே, அது புரண்டு புரண்டு உயிர் துடித்து இரண்டு கைகளால் ஓங்கி பூமியில் அறைந்து இரத்தத்தைக் கக்கிக்கொண்டு உயிர் துறந்தது.

வேட்டையின் உத்தேசம் நிறைவேறாததை நினைத்து அச் சக்கரவர்த்தி மிகவும் மனம் நொந்து தன் யானைப்பாகனை வரழைத்து சமயம் பார்த்து ஷேர் ஆப்கானை யானைக்காலிலிட்டு கொல்லும்படி ஏற்பாடு செய்தார். அந்த யானைப்பாகனும் ஒருநாள் தன் யானையுடன் ஒரு குறுகலான வழியின் மத்தியில் ஷேர் ஆப்கானை சந்தித்தான். ஷேர் ஆப்கானும் தனக்கு அச்சமயம் நேர்ந்திருக்கும் ஆபத்தை நன்குணர்ந்தான். தன் சிறு கட்டாரியை எடுத்தான். யானையைக் குத்தி கீழே வீழ்த்தினான். இதைக் கண்ணுற்ற மன்னனுக்கு முன்னிலும் அதிகமான வருத்த முண்டாயிற்று. டில்லி நகர வாசிகள் அனைவரும் ஷேர் ஆப்கானின் பிரதாபத்தையே பாராட்டினார்கள்.

சக்ரவர்த்தியிடம் விடைபெற்றுக்கொண்டு மறுபடியும் ஷேர் ஆப்கனும் பர்த்வான் வந்து சேர்ந்தான். வங்காள கவர்னரிடம் தன் சிற்றின்ப சித்த விகார[illegible] மருந்தை சீக்கிரம் தயாரித்துக் கொடுக்கும்படி மன்னன் [illegible] அந்த அயோக்கியனும் தன் யஜமானன் நோக்கத்தை அறிந்து அவரைச் சந்தோஷப்படுத்த எண்ணி ஷேர் ஆப்கானைக் கொலை செய்யவும் தீர்மானித்து விட்டான்.

ஒருநாள் இரவு மணி ஒன்று இருக்கும். நாற்பது வீரர்கள் நல்ல கறுப்பு உடை தரித்து சரியான ஆயுதங்களுடன் பர்த்வான் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அன்று அமாவாஸ்யை தினமாகையால் அவர்களை ஒருவராலும் காண முடியவில்லை. அதி விரைவில் நமது சிங்கம் நிர்பயமாக படுத்துறங்கும் அறைக்குள் பிரவேசித்தார்கள். தெய்வானுகூலமாய் ஷேர் ஆப்கானும் அச்சமயத்தின் கண் விழித்தான். உடனே எழுந்து தன் பக்கத்திலிருந்த கை வாளால் வெள்ளரிக்காய் அரிவதுபோல் அரிந்து வந்தவர்களில் 39 போகளையும் யமனுலகத்துக்கு அனுபிவிட்டான். ஒருவன் தப்பித்து விட்டான். வேறொருவன் அதிக வயதானவனாகையால் அவனுக்கு அபயம் அளித்து நடந்த சங்கதிகள் பூராவும் அவனிடமிருந்து தெரிந்துகொண்டான். இச் சங்கதியை அறிந்த சக்கரவர்த்தி அதிகம் வருத்தப்பட்டார்.

ஜிஹாங்கீரும் வங்காள கவர்னருக்கு இரகஸ்யமாக தன் காரியத்தை அதி சீக்கிரத்தில் முடித்துத் தரும்படி வேறொரு கடிதம் எழுதினார். வங்காள கவர்னரும் பர்த்வான் வந்தார். ஷேர் ஆப்கானும் அவ்வதிகாரியை விருந்துக்கு அழைத்தான். அன்றிரவு வெகுநேரம் யோக க்ஷேமங்களைப் பற்றித் தனிமையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். மறுநாள் கவர்னரும் தன்னிருப்பிடத்துக்குச் செல்ல புறப்பட்டார். ஷேர் ஆப்கானும் வழியனுப்ப சிறிது தூரம் கூடவே சென்றான். யாதொரு தீங்கையும் எதிர் பாராத ஷேர் ஆப்கானைக் கவர்னரின் சேனை பொன்று வளைந்துவிட்டது. அவர்களில் அனைவரை நமது வீரன் தன் கத்திக் கிரையாக்கினான். இனித் தமக்கும் முடிவு சமீபித்து விட்டது என்றுணர்ந்து மேற்கு நோக்கி நின்றுகொண்டு பகவத்தியானம் செய்தான். அப்பொழுது ஆறு குண்டுகள் ஒரே காலத்தில் அவன் தேகத்தில் பற்பல பாகங்களில் விழவே அவனும் கடவுளடிபோய்ச் சேர்ந்தான்.

கொலைபாதர்கள் இச்செய்தியைச் சக்கரவர்த்திக்கு உடனே தெரிவித்தார்கள். அவரும் அகத்தில் ஆனந்தமும் புறத்தில் துக்கமும் உடையவராக விளங்கினார். சந்திரவதனாவும் அவள் குமாரியும் உடனே ரகஸ்யமாக டில்லிக்கு அனுப்பப்பட்டனர்.

## அத்தியாயம் 6.

சந்திரவதனாவுக்கென்றே அரண்மனையில் ஒரு அழகிய இடம் தயாரிக்கப்பட்டது. ஜிஹாங்கீரும் அவளை அங்கு வசிக்கும்படி கட்டளை யிட்டார். அவளுக்கு வேண்டிய உண்டி உணவுகள் சரிவர உதவப் பெற்றன. வேலைக்காரிகளும் அவள் விரும்பியபடி உடனே செய்து முடிக்க சித்தமாக இருந்தார்கள். அவ்வழகிய இடத்தில் வசிக்கும் யாவருக்கும் துக்கம் என்பது இன்ன விதம் இருக்கும் என்று அறிய முடியாத விதம் அவ்வளவு ரமணீயமும் மனோஹரமுமாக இருந்தது.

இதில் வசித்து வந்த சந்திரவதனாவின் துக்கங்கள் எல்லாம் காலக்கிரமத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்துவிட்டன. தன் சிங்க சங்காரனையும் மறந்துவிட்டாள். எச்சமயம் சக்கரவர்த்தியின் கரங்களைப் பற்றலாம் என்ற எண்ணமே அவள் மனதைப் புண்ணாக்கியது. ஜிஹாங்கீரும் ஒருவாறு இதை அறிந்தார். ஆனாலும் தங்களுடைய சேர்க்கையை உடனே பகிரங்கப்படுத்த அவர்கள் மனம் இடம் கொடுக்கவில்லை.

ஜிஹாங்கீரும் அக்பரின் மனைவிகளில் ஒருத்தியான ருகையா என்பவளின் அரண்மனைக்கு அடிக்கடி போய் அவளுடன் ஸல்லாபமாகக் காலம் கழித்து வந்தாள். அவள், இவ்விருவர்களின் இஷ்டத்தை எவ்விதமாவது பூர்த்தி செய்வது தன் பொறுப்பென்று நினைத்தாள். ஆகையால் சந்திரவதனவுக்கு 'அரண்மனையின் ஜோதி' என்ற பொருளுள்ள 'நூர் மஹால்' பெயரிட்டு தன்னுடன் வசிக்கும்படி கூறினாள். இது நூர்மஹாலுக்கும் அதிகப் பிரியமாகவே யிருந்தது. ருகையாவின் அரண்மனையானது நூர் மஹாலின் அழகினாலும், தீரத்தனத்தாலும், ஆடல்பாடல்களாலும் அதிகம் சோபித்தது.

ஒரு நாள் இரவு சுமார் மணி எட்டிருக்கும். இரண்டு சோபாக்கள் அவ்வரண்மனையின் ஓர் தனியறையின் மத்தியில் காணப்பட்டன. அவைகளில் ஒன்றில் ருகையாவும் மற்றொன்றில் நமது நூர்மஹாலும் உட்கார்ந்துகொண்டு ஏதோ சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். அறையோ வழக்கம்போல் நல்ல நறுமலர்களாலும் மற்ற வாசனைத் திரவியங்களாலும் அலங்கரிக்கப்பட் டிருந்தன. அவ்வறையின் வேறொரு பாகத்தில் இரண்டு ஹம்ஸதூளிகா மஞ்சங்களும், மற்றொரு பாகத்தில் சிற்றுண்டிகளை (தங்கக் கிண்ணிகளில் வைக்கப்பட்ட)யுடைய ஒரு பெரிய மேஜையு மிருந்தன. நூர்மஹாலும் வழக்கம்போல் மெல்லிய நூலா லிழைக்கப்பட்ட வெண்மையான டக்கா மஸ்லின் உடையை அணிந்திருந்தாள். விளக்குகள் அதிப் பிரகாசமாக ஜ்வலிக்கின்றன.

அச்சமயம் சக்கரவர்த்தி அவ்வறைக்குள் நுழைந்தார். கண்டார் நூர் மஹாலை. அவளும் ஒன்றும் பேசாமல் எழுந்து தலை குனிந்து நின்றாள். முப்பது வருஷங்களுக்கு முன் தன் கண்ணுக்கு முன் நின்றவள்தானோ இவள் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. அப்பொழுதிருந்த வடிவழகில் லக்ஷம் மடங்கு அதிகமான வடிவழகுள்ளவளாக காணப்பட்டாள். சக்கரவர்த்திக்கு இன்னது செய்வது என்று தெரியாமல் பரிதபித்தார்.


## ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்,

மானேஜர்.


# நாடகமேடையில் தேர்ச்சிபெறுவ தெப்படி?

(ராவ்பகதூர். ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.)

(காபிரைட்.)

(456-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி ஒவ்வொரு நடிகனும், மேடையின்மீது நடிக்கும்பொழுது, தான் பேசும் வார்த்தைகளுக்கோ பாடும் பாட்டுகளுக்கோ தக்கபடி அபிநயமுடையவனா யிருத்தல் வேண்டும். இதுதான எல்லாவற்றிற்கும் முக்கியமானது. இதில் தக்கபடி பெயரெடுக்காவிட்டால் எந்த ஆக்டரும் நாடகமேடையின் மீது கீர்த்தி பெற முடியாது. ஆகவே இதைப் பற்றி சற்று விரிவாக எழுத விரும்புகிறேன்.

அபிநயம் என்பது மனோபாவத்திற்குத் தக்கபடி அங்கபாவங்களிருப்பது என்று பொதுவில் கூறலாகும். அதாவது மனக் கருத்தைத் தக்கபடி பார்ப்போர்க்கு வெளிப்படுத்தக்கூடிய அங்கச் செய்கை. இவ்வாறு வெளிப்படுத்துவதில் கால் முதல் தலை வரையில் ஒவ்வொரு அங்கமும் உபயோகப்பட்டபோதிலும், கரங்கள் அபிநயத்திற்கு மிகவும் உபயோகப்படுகின்றன. கால்களைவிட முக்கியமானது முகமாம். அம்முகத்தில் முக்கியமானது கண்களாம். இவ்வுண்மையை ஏறக்குறைய ஆயிரத் தைந்நூறு வருடங்களுக்கு முன்னரே தமிழ் கிரந்தகர்த்தா மிகவும் அருமையாகவும் அழகாகவும் அடியில் வருமாறு தெரிவித்திருக்கிறார்:—"அச்சுவைகளில் எண்ணம் வந்தால் தோற்றுமுடம்பில், உடம்பின் மிகத் தோற்றும் முகத்து; முகத்தின் மிகத் தோற்றும் கண்ணில்; கண்ணின் மிகத் தோற்றும் கண்ணிற் கடையது."

ஆகவே முகபாவம் சரியா யிருக்கிறதா வென்று முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அதிலும் கண்களின் பாவம் மிகவும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயமாகும். சிலருக்கு முகமானது பல்வேறு செயல்களைக் காட்ட சக்தியற்றதா யிருக்கும்; அப்படிப்பட்டவர்கள் நாடக மேடையின்மீது ஏறாதிருத்தல் நலமாம். முகம் ஒன்றைக்கொண்டே பல செயல்களையும் காண்பிக்கலாமென்பது என் துணிபு. சிறந்த நடிகன் தன் கைகால்களைக் கயிறு கொண்டு கெட்டியாய்க் கட்டிவிட்டாலும் தன் முகமொன்றினால் எல்லாவித செயல்களையும் நடித்துக் காட்டலாம். இந்த முகபாவத்தில் கண்ணின் செய்கை இன்றியமையாதது என்பதைப் பற்றி நான் மறுபடியும் கூறவேண்டியதில்லை. சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர் இந்த அபிநயமானது 32 வகைத்து என்று கூறி அவைகளில் ஒவ்வொன்றையும் காட்ட வேண்டிய மார்க்கத்தையும் எழுதி யிருக்கிறார். சம்ஸ்கிருதத்தில் பரத சாஸ்திரமானது இதை மிகவும் விரிவாய்க் கூறி யிருக்கிறது. நாடக மேடையில்

பெயர் பெற விரும்பும் ஒவ்வொரு நடிகனும், இப்பரத சாஸ்திரத்தைப் படித்தல் மிகவும் பிரயோஜனத்தைத் தருவதாகும். இதைப்பற்றிக் கூறும் தமிழ் நூல் சுந்தாநந்தப் பிரகாச மென்பது ஒன்றுளது. அது எனக்குத் தெரிந்த வரையில் அச்சிடப்படவில்லை. அதை யாராவது கல்விமான்கள் அச்சிடுவார்களானால், நாடகத்தில் நடிக்க விரும்புவோர்களுக்கு மிகவும் பயன்படுவதாகும். இந்நாட்டிய நூல்களில் நடிக்குங்காலை இன்னின்ன சந்தர்ப்பங்களில் கைகள் இன்னபடி யிருக்க வேண்டு மென்றும் கால்கள் இன்னபடி இருக்க வேண்டு மென்றும் இன்னும் ஒவ்வொரு அங்கக் கிரியையும் இப்படி இருக்க வேண்டு மென்றும் விவரமாய் நமது முன்னோர் எழுதி யிருக்கின்றனர். ஆகவே கூடியவரையில் ஒவ்வொரு நடிகனும் இவற்றை அறிவது மிகவும் நன்மை பயப்பதாகும்.

இந்நூல்களைக் கற்க அவகாசமில்லாதார் இப்பரத சாஸ்திர முணர்ந்தவரைப் பார்த்தாவது கற்றுக்கொள்வது நலமாகும்.

ஆயினும் இச் சந்தர்ப்பத்தில் பரத நாட்டியத்திற்கும் நாடக மேடையில் தற்காலம் நடிக்க வேண்டிய மார்க்கத்திற்கும் இருக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயத்தை இதை வாசிக்கும் எனது நண்பர்கள் கவனிப்பார்களாக. பூர்வ காலத்தில் தென் இந்தியாவில் நாடகங்கள் நடிக்கப்பட்டபொழுது பெரும்பாலும் சங்கீதமும் பரத நாட்டியமுமே அடங்கியதா யிருந்தது. அக்காலங்களில் பரதசாஸ்திரத்தில் குறிக்கப்பட்ட அங்கக் கிரியைகளை யெல்லாம் நாடக மேடையின் மீது உபயோகப்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. தற்காலம் சங்கீதம் குறுகி வசனம் புகுந்தபின், பரத நாட்டியத்திற் குரிய அபிநயங்களை அப்படியே நடித்துக் காட்டுதல் தவறாகும். இதற்கு ஒரு உதாரணம் எடுத்துக் காட்டுகிறேன். முற்காலத்திய நாடக மொன்றில் ஒரு நாயகி தன் காதலன் நித்திரை செய்கிறான் என்று சபையோர்க்குத் தெரிவிக்க வேண்டி யிருந்தால் அதற்கு ஒரு அடி பாட்டைப் பாடி அதற்கு, நாயகன் என்கிற பதத்திற்கும் நித்திரை செய்கிறார் என்பதற்கும் தக்கபடி அபிநயம் பிடிப்பாள். இந்த வழக்கமானது, தற்காலம் அந்த சந்தர்ப்பத்தில் பாடாவிட்டாலும் பழையபடி அபிநயம் பிடிக்கும் பழக்கம் சில ஆக்டர்களிடம் இருக்கிறது; தற்காலத்திய நாகரிக மடைந்த ஆக்டர்கள் அதை வசனத்தினால் கூறி கையின் சமிக்ஞையால், கண் சாடையாலும் தெரிவிக்கிறார்கள். இன்னொரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளுகிறேன். எனது நாடகங்களிலொன்றாகிய "லீலாவதி—சுலோசனா"வில், கமலாகரன் எனும் ஒரு ஆக்டர் தன் நண்பனாகிய கதாநாயகன் ஸ்ரீதத்தனிடம் "மதுரமான மாங்கனி, கிளையினின்றும் நழுகி பாலில் வீழ்ந்தது போலும்" என்று சொல்லுகிறான். இதற்குப் பழயகாலத்து பழக்கத்தின்படிக் கண்டக்டர் (Conductor) இந்த வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு பதத்திற்கும் அபிநயம் பிடிக்கும்படி கற்றுக்கொடுத்ததை நான் அறிவேன். ஆயினும் தற்காலத்திய நாகரீகத்திற்கு ஏற்ற மார்க்கம், சொல் நயத்தினாலும், முகபாவத்தினாலும், கண்சாடையாலும், அந்த வாக்கியத்தின் பாவத்தை தெரிவிப்பதாகும். ஆகவே பரத நாட்டியத்திற்குரிய அங்கக் கிரியைகளையும், நாடக மேடையின் மீது நடிக்குங்கால் செய்ய வேண்டிய அங்கக் கிரியைகளையும், பகுத்தறிந்து நடிப்பதே உத்தம மாகும்.

மேற்சொன்ன விஷயத்தைக் குறித்து, எனது பல நண்பர்கள், "முகக்குறிப்பு முக்கியமா யிருக்க வேண்டுமென்று சொல்லி விட்டீர்கள்.



ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்படிப்பட்ட முகக்குறிப்பு இருக்க வேண்டுமென்று, நாங்கள் எப்படி அறிவது?" என்று பன்முறை கேட்டிருக்கின்றனர். ஆகவே இதைப்பற்றி சற்று விவரமாய் எழுதுகிறேன். இதைக் கற்பது மிகவும் கடினம்தான் என்று நான் முதலில் கூறவேண்டும். இது ஒருநாளில் கற்கக்கூடிய தல்ல; பலநாட் பழக்கத்தினால்தான் வரவேண்டும். இதைக் கற்பதென்றால், இன்னின்ன ரசபாவத்தில் பிரபல ஆக்டர்கள் இப்படிப்பட்ட முகக்குறிப் புடையவர்களா யிருக்கிறார்கள் என்பதை மிகவும் சாக்கிரதையாய் கவனிக்கவேண்டும். அன்றியும், தங்கள் வாழ்நாட்களில் மற்றவர்கள், கோபத்தையோ, சந்தோஷத்தையோ, துக்கத்தையோ, இன்னும் மற்ற மனோபாவங்களையோ, உலக வியவஹாரங்களில் காட்டும்பொழுது, அவர்களது முகக்குறிப்பு எத்தன்மையா யிருக்கிறதென, மிகவும் கவனமாய்ப் பார்த்து வரவேண்டும்; இவ்விஷயத்தில் உலக முழுவதுமே ஒருவனுக்குக் கற்பிக்கும் உபாத்தியாயரா யிருக்கிறது. இதைக் கற்பதற்கு வேளை யென்பதொன்றில்லை. எந்த வேளையிலும் எந்த சந்தர்ப்பத்திலும் கற்கலாம்!—கற்கவேண்டும் எனும் ஊக்கமும், இடைவிடா முயற்சியும் வேண்டும். சங்கீதம் முதலிய மற்றக் கலைகளைக் கற்பதென்றால், காலம் வேண்டும், இடம் வேண்டும், உபகரணங்கள் வேண்டும், உபாத்தியாயர் வேண்டும், பொருள் செலவழிக்கவேண்டும்; நாடகமாடும் கலையைக் கற்பதற்கு இவைகள் ஒன்றும் வேண்டாம் ஒரு விதத்தில்! இருந்த இடத்தில் உட்கார்ந்தபடியே, என்றும், எச்சமயத்திலும் கற்கலாம். வேறொன்றும் முக்கியமான வேலையில்லாத (ஒரு நடிகன்) தன் வீட்டின் தெருத் திண்ணையில் சில மணி நேரம் சும்மா உட்கார்ந்துகொண்டு, வீதியில் போய்க்கொண்டிருப்பவர்களைக் கவனிக்கட்டும். ஒரு மணி நேரத்திற்குள்ளாக அவன் எவ்வளவு நாடகமேடைக்குதவும்படியான விஷயங்களைக் கற்கக்கூடும் என்பது சொந்த அனுபவத்தினால்தான் தெரியக்கூடும். ஒரு சிறு விஷயமாகிய நடையை எடுத்துக்கொள்வோம்; நல்ல வாலிபத்தில் இருப்பவர்கள் நடை ஒரு மாதிரியிருக்கும், வயதானவர்களுடைய நடை மற்றொரு மாதிரி யிருக்கும், கிழவர்களுடைய நடை இன்னும் வேறு மாதிரி யிருக்கும், நல்ல தேகஸ்திதியிலிருப்பவர்கள் நடக்கும் விதம் ஒன்றாம், நோயாளிகள் நடக்கும்விதம் ஒன்றாம், சந்தோஷத்துடன் போகுமவர் நடை ஒருவிதமாம், துக்கத்திலாழ்ந்திருப்பவர் நடை ஒருவிதமாம், குருடர்கள் நடக்கும் விதம் ஒரு மாதிரியாம்; அதிலும் பிறவிக் குருடர்கள் நடக்கும்மாதிரி வேறு; சரியான கண்களுடன் பிறந்து இடையில் கண் பார்வை யிழந்தவர்கள் நடக்கும் மாதிரி வேறாம். இதை நான் ஏதோ விருதாவில் வளர்த்துகிறேன் என்று இதை வாசிக்கும் எனது நண்பர்கள் எண்ணாதிருப்பார்களாக. இதற்கு ஒரு உதாரணம் எடுத்துக் கூறுகிறேன். சத்ருஜித் என்னும் எனது நாடகத்தில் கதாநாயகனான சத்ருஜித், இடையில் தன் இரு கண்களையுமிழந்து அந்தகனாகிறான். இதை முதன் முதல் எங்கள் சபையில் 1898-ஆம் வருஷம் நடித்தபொழுது நான் அந்தகனானபின் சத்ருஜித் மேடையின்மீது எப்படி நடக்கவேண்டு மென்பதைப்பற்றி அவ்வளவாகக் கவனிக்கவில்லை! அந்த நாடகத்தை 1932-ம் வருஷம் மதுரையில் நான் நடிக்க வேண்டி வந்தபொழுது, கண்ணாஸ்பத்திரிக்குப் போய், கண் சிகிச்சை (ஆபரேஷன்) செய்துகொண்டவர்கள் எப்படி நடக்கிறார்கள் என்பதை கவனித்த பிறகுதான் அவர்கள் இப்படி நடக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்தேன்; அன்றியும் சரியான கண்களுடன் பிறந்து, பிறகு ஓர் கொடிய வியாதியினால் கண் பார்வையிழந்த, எனக்கு அறிமுகமான ஒருவர் எப்படி நடந்தார் என்பதைக்

கவனித்தேன். பிறகுதான் நாடகமேடையில் சத்ருஜித் நான்காவது ஐந்தா
வது அங்கங்களில் இவ்வாறு நடக்கவேண்டுமென்று தீர்மானித்து அதைச் சாத
கம் செய்தேன். இதே நாடகத்தை மற்றொரு சபையார் நடித்தபொழுது சத்ரு
ஜித் வேடம்பூண்டவர் சுமாராகப் பாடி நடித்தபோதிலும், அந்தகனான பின்,
அவர் நடித்தவிதமானது மாத்திரம் கொஞ்சமும் சரியானதாயில்லை. அந்த
ஆக்டர் மேற்சொன்ன வித்யாசத்தை யறிந்து சிறிது கஷ்டப்பட்டுக் கற்றுக்
கொண்டிருப்பாராயின், மிகவும் நலமாயிருந்திருக்கும். இந்த வித்யாசம் என்ன
வென்று என்னைக் கேட்டால், நான் இதை எழுதி அறிவிக்க முடியாது; நடித்
துத்தான் காட்டமுடியும் என்றுதான் பதில் உரைக்கக்கூடும். ஒரு பாட்டில்
ஒரு சங்கீதமுணர்ந்தவன் ஒரு அபூர்வமான சங்கதி யுபயோகித்தால், அதை
மற்றவர்களுக்கு எப்படி எழுதித் தெரிவிக்கக்கூடும்? அதைப் பாடித்தான்
மற்றவர்களுக்கு அவன் கற்பிக்கக்கூடும். ஆயினும் ஒரு வித்யாசத்தை எழு
தக்கூடும். பிறவிக் குருடர்கள் நடக்கும்பொழுது தங்கள் தலையை எப்படி
சாய்த்து நடக்கின்றனர், இடையில் கண்ணிழந்தவர்கள் எப்படி தலை நிமிர்ந்து
நடக்கிறார்கள், என்று கவனித்துப் பாருங்கள். இதன் முக்கியமான அம்சங்
களிலொன்று உங்களுக்கும் புலப்படும். இதுபோலவே, வீதியிற் செல்பவர்க
ளுடைய நடைகளையும் மற்றும் பாஷைகளையும் கவனிக்கலாம். ஜாதிக்குஜாதி
நடையில் வித்தியாசமிருப்பதுபோலவே, பாஷைகளிலும் வித்தியாசமிருக்கின்
றன என்பதை அப்பொழுது நாம் அறிவோம். இவ்விஷயத்தில் உயர்குலம்;
தாழ்ந்த குலம் என்றும், மேம்பட்டது கீழ்ப்பட்டது என்றும் கருதலாகாது,
ஒரு நடிகன் பிராமணனாகிய வேதியனாக நடிக்கவேண்டிவரும், அல்லது பறைய
னாகிய நந்தனாக நடிக்கவேண்டி வரும்; குபேர சம்பத்துடையவனாக நடிக்க
நேரிடலாம், அல்லது குடிவெறியனாய் நடிக்க நேரிடலாம்; புத்திமானாய் நடிக்க
சமயம் வாய்க்கலாம், அன்றேல் பயித்தியக்காரனாக நடிக்க சமயம் வாய்க்கலாம்;
உலகில் எத்தனைவிதமான ஜன்மங்களுண்டோ, அத்தனைவிதமான பாத்திரங்
கள் மேற்கொள்ள சமயம் வாய்க்கலாம்; ஆகவே இப்படிப்பட்ட மனிதனைத்
தான் கவனிக்கவேண்டும், மற்றவர்களைக் கவனிக்கவேண்டியதில்லை என்பது
கிடையாது; எத்தனைவிதமான மானிடசிருஷ்டிகளைப் பார்த்து கற்கிறோமோ,
அவ்வளவும் நமக்கு நல்லதுதான்.

மேற்சொன்னபடி யார் யார் எப்படி மற்ற அங்கக் கிரியைகளை உபயோ
கிக்கின்றனர் என்பதை, நமது வீட்டிலிருந்து கவனித்தே நாம் கற்கலாம்; முக்
கியமாக முகபாவங்களினு மப்படியே. இதற்கு வீதி வரையிலும்கூடப் போக
வேண்டியதில்லை.

ஸ்திரீ வேஷம் தரிக்க விரும்புவோர், ஸ்திரீ ஜனங்களின் நடையுடை
பாவனைகளை முக்கியமாக கவனிக்கவேண்டு மென்பதைப்பற்றி நான் வற்புறுத்
தாமலே தெரியும். நமது வீட்டிற்குள்ளேயே, நமது தாய் தந்தையரோ,
அண்ணன் தம்பியரோ, சகோதரியோ, மனைவியோ, குமாரனோ, குமாரத்
தியோ இன்னின்ன சந்தர்ப்பங்களில் இன்னின்ன முகக் குறிப்புடையவர்களா
யிருக்கிறார்கள் என்று நன்கு கவனிக்கலாம். சில சமயங்களில் நாம் ரெயில்
பிரயாணம் செய்யும்பொழுது, பொழுதுபோக்க வகையில்லாமல் கஷ்டப் படு
கிறோம். அச்சமயங்களில் ரெயில் வண்டியில் தம்முடன் உட்கார்ந்திருக்கும்
மற்றப் பிரயாணிகளின் நடையுடை பாவனைகளைக் கவனிப்போமாயின் நமக்கு
நாடகாங்கத்தில் உபயோகமாகும்; பொழுதுபோக்க மிகவும் அநுகூலமாயுமிருக்



கும். சுருங்கச் சொல்லுமிடத்து காலம் ஒன்றும் வேண்டியதில்லை, இடம் ஒன்
றும் வேண்டியதில்லை; எச்சமயத்திலும் எவ்விடத்திலும் கற்கலாம்.

பிறகு நாம் மேற்கூறியபடி கற்ற விஷயங்களை நாமாக அப்யசித்துப்
பார்க்கவேண்டியது மிகவும் அவசியமாம். இதற்கு இரண்டு முக்கியமான மார்க்
கங்கள் உண்டு; ஒன்று இக்கலையில் வல்லவர் ஒருவர் முன்பாக நின்று இன்ன
சந்தர்ப்பத்தில் இன்ன ரசத்திற்காக இப்படிப்பட்ட முகபாவம் சரியாயிருக்
கிறதா என்று நடித்துக் காட்டவேண்டும்; நாம் சரியான முகபாவத்தைத்தான்
பூணுகிறோமென்று நம் மனதில் நினைக்கலாம், அது தவறாக இருக்கலாம்; சரி
யோ தவறோ என்பது மற்றவர்களுக்குத்தான் படும். என் சொந்த அனுப
வத்தில் இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். நான் நாடகமேடையில் ஆதி
யில் நடிக்க ஆரம்பித்தபோது, கோபக்குறியைக் காட்டுவதற்கு என் முகத்தை
அதிகமாய்ச் சுளிக்கும் பழக்க முடையவனா யிருந்தேன். இது அப்பொழுது
எனக்குத் தெரியாது; பிறகு என்னுடைய நண்பர்களிற் சிலர் அவ்வளவு
அதிகமாக முகத்தைச் சுளித்தல் பொருத்தமானதாயில்லை, ஒழுங்காயில்லை,
என்று தெரிவித்தனர். அவர்கள் கண்டறிந்தது என் மனதில் முதலில்
படவில்லை. பிறகு ஒருநாள் இத்தனை பெயர் கூறுகிறார்களே, இதில் ஏதா
வது இருக்கவேண்டுமென்று எண்ணினவனாய், நான் நடிக்கும்போது கொள்
ளும் கோபக்குறியுடன் கண்ணாடியில் என் முகத்தை நோக்கினேன்; அப்
பொழுதுதான் தெரிந்தது அவர்கள் கூறியது சரிதானென்று. பிறகு நான்
அதை அடக்கி சரிப்படுத்திக் கொண்டேன். கோபத்தைக் காட்ட முகத்
தைச் சுளிக்கவேண்டியதுதான், ஆயினும் அளவிற்கு மிஞ்சி செய்தால் அவ
லட்சணமாயிருக்கும். இச்சந்தர்ப்பத்தில் நான் சிலவருடங்களுக்குமுன் கேட்ட
கதை யொன்று ஞாபகம் வருகிறது. ராயர் காலத்தில் மூன்று கவிகள் பாரி
ஜாத அபஹரணம் கதையை எழுதிக்கொண்டுபோய்க் காண்பிக்க, அவைகளில்
சத்யபாமை துயரப்பட்ட கட்டத்தில் யார் வர்ணித்தது மிகவும் நன்றாயிருக்
கிறதென, ராயர், தென்னாலிராமனைக் கேட்டனராம்; அதற்குத் தென்னாலி
ராமன் அந்தக்கட்டத்தில் ஒவ்வொரு கவியும் வர்ணித்திருப்பதை ஆராய்ந்து
பார்த்து ராயரிடம் அடியில் வருமாறு பதில் உரைத்தனராம் "முதற்கவியில்
சத்யபாமை நிரம்ப அழுததாகக் கூறியிருக்கிறார்; மற்றொருவர் அவள் 'கோ'
வென்று அழுததாகக் கூறியிருக்கிறார்; மூன்றாவது கவி அவள் முத்து முத்
தாய் அழகாக அழுததாகக் கூறியிருக்கிறார்" என்று அவர்களின் தாரதம்மி
யத்தை எடுத்துரைத்தனராம். அழுவதிலும் அழகாய் அழவேண்டும்-நாடக
மேடையில்! அப்பொழுதுதான் நாடக அலங்காரத்திற்கு ஒத்திருக்கும்-ராசா
பாசமாகாது. ஆகவே முகத்தைச் சுளிப்பதிலும் அழகாய்ச் சுளிக்கவேண்டும்!
நமது முகபாவம் சரியாயிருக்கிறதா இல்லையா என்று கற்பிப்பதற்குத் தக்க
ஆசிரியர் கிடைக்காவிட்டால் முகம் பார்க்கும் கண்ணாடியை தனது ஆசிரிய
னாகக் கொள்ளவேண்டும். என் பழைய நண்பராகிய அ. கிருஷ்ணசாமி
ஐயர் தான் மேடையின்மீது நடிக்கவேண்டிய பாவனைகளெல்லாம் சரியா
யிருக்கின்றதா இல்லையாவென்பது, நிலைக்கண்ணாடியின் எதிரில் நின்று பன்
முறை நடித்துப்பார்த்துத் திருத்திக்கொள்ளுகிறார் என்பதை நான் அறிவேன்.
தாமே தம்மைப் பார்த்து திருத்திக்கொள்வது அவ்வளவு சுலபமல்ல. ஆகவே
கூடுமானவரையில், நாடகமேடையில் தேர்ச்சிபெற்ற ஒரு ஆசிரியரைக்
கொண்டே இவ்விஷயத்தில் திருத்திக்கொள்ளுதல் உசிதமாகும். ஏனெனில்
தக்க நிபுணனான ஆசிரியன், இன்ன குறையிருக்கிறதென்று எடுத்துக் கூறுவது

மல்லாமல் அம்முறையை அகற்றும் விதத்தையும் கற்பிக்கக்கூடும். வெறும் கண்ணாடியானது அது செய்யாது.

மற்றொரு விதத்தில் ஒரு நடிகர் சீர்திருத்திக்கொள்ளும்படியான மார்க்கம் என்னவென்றால், தான் நடிப்பதற்காக மேற்கொண்ட நாடக பாத்திரத்தை எழுதிய நாடகாசிரியர் ஜீவந்தராய் இருந்தால் அப்பாத்திரத்தைப்பற்றிய அவரது அபிப்பிராயத்தை நன்றாய் கிரஹித்துக்கொண்டு, அவர் முன்னிலையில் அதை நடித்துக்காட்டி, அவர் எடுத்துக் கூறும்படியான குறைகள் ஏதேனும் இருந்தால் அவைகளைச் சரிப்படுத்திக் கொள்வதேயாம். நான் மற்றவர்கள் எழுதிய நாடகங்களில் நடிப்பதாயிருந்தால் இம்மார்க்கத்தை அனுசரித்துப் பலன் பெற்றிருக்கிறேன். இதை எனது இளைய நண்பர்கள் முக்கியமாகக் கவனிப்பார்களாக. ஒருவன் எவ்வளவு சிறந்த நடிகனா யிருந்தபோதிலும் அவன் நாடக ஆசிரியனுடைய எண்ணப்படித்தான் நடிக்கவேண்டுமென்பது என் துணிவு. அவர் சொல்கிறபடியே, கேட்கவேண்டு மென்பதல்ல. தனக்கு அவர் சொல்வதைவிட, நடிக்கும்மார்க்கத்தில் ஏதாவது விசேஷம்தோற்றினால், அதை அவருக்குக் கூறி, அவர் முன்னிலையில் நடித்துக்காட்டி அவர் அனுமதியைப் பெற்றே மேடையின்மீது அவ்வாறு நடிக்கவேண்டும் என்பது என் சித்தாந்தம். புத்திமானான ஆசிரியனாயிருந்தால் எழுதிய நமக்குமேல் இவனுக்கு என்ன தெரியும் என்று நினையாது அதைச் சந்தோஷமாக அங்கீகரித்து அப்படியே நடிக்க உத்திரவு கொடுப்பான் என்பதற்கு ஐயமில்லை. ஆகவே நாடக ஆசிரியனுடைய மனப்போக்கை ஒட்டியே எந்த நடிகனும் நடிப்பது மிகவும் பொருத்தமாகும்.

ஒரு நடிகன் தன் நடிப்பை சீர் திருத்திக்கொள்வதற்கு இன்னொரு மார்க்கம் உண்டு; அதாவது ஒரு நாடக மேடையின்மீது ஒரு பாத்திரத்தை நடித்தபிறகு, அதைப்பற்றி சபையில் வந்திருந்தவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டறிந்து, அவர்கள் எடுத்துக் கூறும் குற்றங்களையெல்லாம் சீர்திருத்திக் கொள்வதேயாம். இந்தச் சந்தர்ப்பத்தில் "சபையோர்" என்ற பதத்திற்குச் சபையில் வந்திருந்த புத்திமான்கள் என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். "உலகம் என்பது உயர்ந்தோர் மட்டே" என்னும் சூத்திரத்தை எனது இளைய நண்பர்கள் கவனிப்பார்களாக. ஆயிரம் புத்தியிலாதவர்களுடைய புகழ்ச்சியை விட, ஒருபுத்திமான் எடுத்துக்காட்டும் குற்றத்தை மேலாகக்கொண்டு நடப்பது புத்திசாலிகளான ஆக்டர்களுக்கு அழகாம். இவ்விஷயத்தில் ஒரு நடன் தனது சொந்த நண்பர்களைக் கேட்பதில் பிரயோஜனமில்லை. அவர்கள் பெரும்பாலும், நட்பின் மிகுதியால் குணத்தையே எடுத்துக் கூறுவார்கள். குற்றத்தை எடுத்து தைரியமாகக் கூறக்கூடிய, எனது பால்ய நண்பராகிய வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்காரைப் போன்றவர்கள், இவ்வுலகில் சிலரேயாம். ஆகவே தன்னை அதற்குமுன் அறியாதவர்களுடைய அபிப்பிராயத்தை அறிதலே உசிதமாம். இப்படிச் செய்வதில் நேராகக் கேட்பதில் பிரயோஜனம் அவ்வளவாக இலது. ஏனெனில் யாரும் நான் நடித்தது எப்படி இருந்தது என்று கேட்டால் குற்றங்களை எடுத்துக் கூற சங்கோசப்படுவார்கள். என்னிடத்திலும் இக்குறையுண்டு. யாராவது புதிய ஆக்டர்கள் என்னிடம் வந்து "நான் நடித்தது எப்படியிருந்தது சார் ?" என்று கேட்டால், நன்றாயில்லாவிட்டாலும், அவர்கள் மனதைப் புண்படுத்தலாகாதென "அழகாகத்தா னிருந்தது" என்று சொல்வது என் வழக்



கம். பிறகு அவர்களை அன்யோன்யமாகத் தெரிந்தபிறகுதான் அவர்களிடமுள்ள பிசகுகளை எடுத்துக் கூறுவேன். ஆகவே மற்றவர்களுடைய அபிப்பிராயத்தை உண்மையில் அறியவேண்டில், மூன்றாவது மனிதர்கள் மூலமாக தெரிந்துகொள்வதே மேலாகும். அப்படி விசாரித்தறிவதில் நாடகமேடையின் அனுபவமுள்ள புத்திசாலிகளின் அபிப்பிராயங்களையே மேலாகப் பாராட்டுதல் மேன்மையாகும். மொத்தத்தில் இதைப்பற்றிச் சுருக்கிச் சொல்லுமிடத்து, ஒருவன் தன்னைப்பற்றி எல்லோரும் கூறும் அபிப்பிராயங்களையெல்லாம் சேகரித்து, அதில் சாரமானதை எடுத்துக்கொண்டு மற்றதை ஒதுக்கிவிடல், நாடகக்கலையில் பெயர்பெற விரும்பும் ஒவ்வொரு மாணவனுக்கும் அழகாம்.

நான் மேற்குறித்த மார்க்கங்களெல்லாம் வசனத்தை நடிப்பதில் மாத்திரம் உபயோகப்படுவதன்று; மேடையின்மீது ஒருவன் பாடவேண்டிய சங்கீதத்திற்கும், பொருந்தியதாம். ஆயினும் சங்கீதத்திற்கு மாத்திரம் உரிய சில அம்சங்களை இங்கெடுத்து எழுத விரும்புகிறேன்.

---

## ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்றாவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியராகிய ரெயினால்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.

அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.

உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர் :—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

அந்திப்பொழுதின் அற்புதக் காட்சிகள்



# அந்திப்பொழுதின் அற்புதக் காட்சிகள்

(ஆரியூர்—வ. பதுமநாப பிள்ளை.)

அந்திப் பொழுதின் அற்புதக் காட்சிகளைக் கண்டு சிந்தை களிப்போர் சிலர்; வெந்துயர்ப் படுவோர் சிலர். இயற்கையன்னையின் ஒப்புயர்வற்ற அற்புத சௌந்தர்யங்கள் பெரிதும் சிறந்து விளங்கும் அந்திப் பொழுதைக் கண்டு, ரவிகர்களான சதி—பதிகள் சேர்ந்திருக்கும்போது பரமானந்தமும் ஒருவரையொருவர் பிரிந்திருக்கும்போது பரம துக்கமும் அடைகின்றனர். காதலி தனது ஆருயிர்த் தலைவனோடு கூடியிருந்த காலத்தில் எந்த காட்சியைக் கண்டு சிந்தை மகிழ்ந்தாளோ, அந்த காட்சியையே தனது தலைவன் அருகிலில்லாதபோது பெரு வெறுப்போடு நோக்குகிறாள். தனது சிந்தையைக் கவர்ந்துகொண்டுவிட்ட——தனது ஹிருதயத்தில் தனியரசு செலுத்துகின்ற—காதலன் அருகில் இல்லாதிருக்கும்போது, மணம் மிகுந்த மலர்களில் படிந்துவரும் மெல்லிய பூந் தென்றற்காற்று தென் திசையிலிருந்து வரும் காலபாசமாகவும்; செக்கச்செவேலென்று சிவந்த செவ்வானம் யமனின் செம்மயிராகவும்; இருள் அவனது கருமேனியாகவும் தலைவிக்குத் தோன்றுகிறது. வானத்திலே திரியும் பலவகைப் பறவைகள் செய்யும் ஒலி பறையொலியாகவும்; பூமியிலே கடலலைகள் எழுப்பும் பெருமுழக்கம் பயங்கரமான சிலம்பொலியாகவும்; செவ்வானப் பரப்பு இரத்தமாகவும்; இருள் கருமேனியாகவும் அகத்தில் தோன்றவே, விரக வேதனை மிகுந்து தவிக்கும் காதலிக்கு, கையிற் பறையொலிக்க காலிற் சிலம்பணிந்து உடலில் கருஞ்சட்டை தரித்து இரத்தத்தைப் பூசிக்கொண்டு தோன்றும் பயங்கரமான பெரும் பூதம் போல அந்திப்பொழுது காட்சி அளிக்கிறது. தலைவனைப் பிரிந்து தவித்து நிற்கும் தலைவிக்கு அந்திப்பொழுதிலே மெல்லெனவீசிவரும் தென்றற்காற்று, 'கயங்கள் என்னும் கனல் தோய்ந்து கடிநாண் மலரின் விடம் பூசி' இன்னுயிரைக் கவரப் பாய்ந்துவரும் மன்மதனின் கொடுங்கணையாகத் தோன்றுகிறது. அந்திப் பொழுதில் தோன்றும் செவ்வானம், கொடிய விடப்பாம்பாகவும்; தகதகவென்று ஒளிரும் செஞ்சுடர்க் கதிரோன், அப்பாம்பு கக்கிய மாணிக்கமாகவும்; பால்போன்ற அழகிய மாலைப் பிறை மதி, அப் பாம்பின் வளைந்த கோரைப் பல்லாகவும்; அம்மதியைச் சுற்றிலும் மின்னும் நட்சத்திரங்கள், அப் பாம்பின் மேலுள்ள புள்ளிகளாகவும்; காதல் வெப்பத்தைப் பெருக்கும் மெல்லிய தென்

றக்காற்றாகவும், அப்பாம்பு விடும் கொடிய விடங்கலந்த மூச்சுக் காற்றாகவும் காதலியின் அகக் கண்களுக்குத் தோன்றுகின்றன. இவ்வாறு காதலனைப் பிரிந்து தனித்துத் தவித்து நிற்கும் காதலிக்கு, அந்திப்பொழுது வெந்துயரூட்டுவதாக விளங்குவதைத் தமிழ்க் கவிஞர்கள் பலவாறு வருணித்திருக்கின்றனர்.

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் பெருமான், அந்திப் பொழுதைக் குறித்து வருணித்திருப்பனவற்றில் ஈண்டு இரண்டொன்றைக் கவனிப்போம். மேகம் தோய்ந்து நிற்கும் அத்தமன மலையானது பெரிய யானையைப்போன்று விளங்கியதாம்; வெப்பம் மிகுந்த கிரணங்களுடன் கூடிய செஞ்சுடர்க் கதிரோன் சினத்தால் முகம் பெரிதும் சிவந்து அந்த யானையின்மீது பாயும் வீர சிங்கத்தைப்போல் விளங்கினானும்; செக்கச் செவேலென்று சிவந்து பரந்த செவ்வானம், அச் சிங்கத்தால் அறைந்து பிளக்கப்பட்ட யானையின் மத்தகத்திலிருந்து பெருகும் இரத்தப் பெருக்கைப்போன்று விளங்கியதாம்! அந்திப் பொழுதில் பரவும் இருளானது, சிங்கம் இருக்கும்வரையில் தலைகாட்ட அஞ்சி நடுங்கி ஒடுங்கிக் கிடந்த யானைக்கூட்டம் அது அகன்று சென்றவுடன் துணிந்து வெளிப்படுவதைப்போல், கதிரவனாகிய சிங்கம் 'அத்தமனகிரி'யாகிய வேறு மலைக்குச் சென்றுவிட்ட தறிந்தபின்பு துணிந்து வெளிப்படுவதைப் போன்று தோன்றியதாம். மீன்போன்ற கருங்கண்களை உடைய சுந்தரிகளோடு அவரவரது ஆருயிர்க் காதலர்கள் குளிர்ந்த நீரில் குடைந்தாடிக் குதூகலிக்கும் காட்சியைக்கண்டு, தானும் அத்தகைய இன்பத்தை அனுபவிக்க ஆசை மிகுந்தவனைப் போல், கதிரவன் பலவகைப்பட்ட மீன்கள் நிறைந்து கிடக்கும் கருங்கடலில் மறைந்தானும்! என்ன அற்புதக் கற்பனை! எத்தகைய வருணனை நயம்!!

ஓரிடத்தில் வாணவேடிக்கை நடைபெறுவதாகக் கேள்விப்பட்டுவிட்டால், நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஜனங்கள் கூடிவிடுகிறார்கள். அந்த வாணவேடிக்கையை நடத்தும்பொருட்டு நூற்றுக்கணக்கான பணத்தைத் தாராளமாகச் செலவழிக்கத் துணியும் பணத்திமிர் மிகுந்த செல்வர்களும் இக் காலத்தில் பற்பலர் இருக்கின்றனர். அவ் வேடிக்கையைப் பார்க்கக் கூடும் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள், பொருட் செலவைப் பொருட்படுத்தாமல் அதை நடத்த ஏற்பாடுசெய்த பணக்காரர்களைப் பலவாறு புகழ்ந்து பேசுகிறார்கள். வருஷத்திற் கொருமுறையோ இருமுறையோ அபூர்வமாக உற்சவ காலங்களில் நடத்தப்படும் வாணவேடிக்கைகள், மாதத்திற் கொருமுறையோ இருமுறையோ நடத்தப்பட்டால் எவ்வளவோ இன்பமாக இருக்குமே என்று நினைத்துப் பெருமூச்செறிகிறார்கள். சிறிது அஜாக்கிரதையாக இருந்தாலும் விபத்துக்கு உட்பட நேரும் என்பதை நன்கு உணர்ந்திருந்தும்—அவ்வாறு வாணவேடிக்கை பார்க்கச்சென்று விபத்துக்கு உட்பட்டவர்களை பார்த்திருந்துங்கூட, அவ் வேடிக்கையை அருகிலிருந்து பார்க்கும் ஆசை மிகுதியால் பற்பலர் பயத்தையும் துறந்து மிகவும் அருகில் சென்று நிற்கவும் துணிந்து விடுகிறார்கள். ஆக்கியளித்து அழிக்கும் விளையாட்டிலேயே இடையறாமல் ஈடுபட்டிருக்கும் கடவுள், ஒவ்வொருநாளும் அந்திப் பொழுதில் ஆகாயத்தில் நடத்திக்கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற அற்புத வேடிக்கையைக் கண்ணாரக் கண்டு களிக்க எவரும் ஆசைப்படுவதில்லை.

வியாழக்கிழமை மாலையிலும் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் குளக்கரையிலும் ஆற்றங்கரையிலும் கூட்டங்கூடும் கருட தரிசனப் பித்தர்கள்—இல்லை—



'பக்தர்கள்', மரத்தில் உட்கார்ந்திருக்கும் கருடன் அதைவிட்டு எழுந்திருந்து பறக்கும் வரையில் மிகுந்த பொறுமையுடனும் பேராவலோடும் பக்தியுடனும் காத்துக்கொண்டிருக்கச் சலிப்படைவதில்லை. அப்படிப்பட்ட பொறுமையாளர்கள், ஒவ்வொருநாளும் வான வெளியிலே இயற்கையன்னை காண்பிக்கும் அற்புதக் காட்சிகளைக் கண்டு களிப்பதில் சில நிமிஷங்களைச் செலவழிக்கவும் மனம் கொள்வதில்லை! நிமிஷத்திற்கு நிமிஷம் வெவ்வேறு தினுசாக மாறிக்கொண்டிருக்கும் இந்திரஜால மஹேந்திர ஜாலங்களைக் காட்டும் ஸூர்யாஸ்தமனக் காட்சிகளைப்போன்ற ஒப்புயர்வற்ற அற்புதக் காட்சிகளை, ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவழித்தாலும்—எப்படிப்பட்ட மகத்தான கீர்த்திபெற்ற வாணக்காரர்களாலும் காட்ட முடியுமோ? லட்சக் கணக்கான பணத்தை வாரிவாரிக் கொடுத்தாலும், எந்த சித்திர நிபுணனாலாவது அவ்வளவு தினுசு தினுசான அற்புத வர்ணங்களைக் கொண்டு—அவ்வளவு அழகான காட்சிகளைப் படத்தில் தீட்டிக் காட்ட முடியுமோ? இருந்த இடத்திலிருந்தே—'விபத்து விளையக்கூடும்' என்னும் பயத்திற்குச் சிறிதும் இடமில்லாமலே—கூட்டத்தில் சிக்கிக்கொண்டு அவதிப்படும் தொல்லையில்லாமலே கண்டு களிக்கக்கூடியனவாக இயற்கைத்தாயின் வாணவேடிக்கையாகிய ஸூர்யாஸ்தமனக் காட்சிகள் தினந்தோறும் வானத்தில் தோன்றுவனவாக இருந்துங்கூட, அவற்றைக் கண்டு களிக்க இக்காலத் தமிழ்நாட்டில் எவரும் விருப்பம் கொள்ளாதிருந்து வருவது எவ்வளவு ஆச்சரியம்!

ஓதுவோர் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பக்கூடியவாறு அரும்பெரும் பொருள்களை மிகமிக எளிய முறையில் விளங்கவைக்கக்கூடிய அற்புதச் சொற்சித்திரங்களாக நவரசம் ததும்பும் பாடல்களைப் பாடிச்சென்ற தேசீய கவீந்திரராகிய திரு—சுப்பிரமணிய பாரதியார், தமது 'பாஞ்சாலி சபதம்' எனும் சீரிய வீரக்காவியத்திலே, ஸூர்யாஸ்தமனக் காட்சியைப் பற்றி அமைத்துள்ள வருணனை உன்ன உன்னப் பேரின்பம் ஊட்டுவதாக விளங்குகிறது. அவ்வருணனையின் அரிய நயங்களை ஈண்டு எடுத்துக்காட்டி, தமிழ் அன்பர்களது மனத்தில் ஸூர்யாஸ்தமனக் காட்சியைக் கண்டு களிப்பதில் ஆவல் பெருகும்படி செய்ய ஆர்வம் மிகுந்து இக்கட்டுரை எழுத முன் வந்தேன். சிறியேனது முயற்சி வெற்றி பெறுமாறு இறைவனது இன்னருளை வேண்டி நிற்கின்றேன்.

திருதராட்டிரனது அழைப்புக்கு இணங்கி பாண்டவர்கள் ஐவரும் தங்கள் நகரத்தை விட்டுப் புறப்பட்டு கௌரவர்களின் நகரத்திற்குச் சென்றுகொண்டிருந்த வழியிலே, மாலையிலே ஒரு பூஞ்சோலையிலே தங்க நேர்ந்தது. அப்பொழுது ரஸிக சிரோமணியாகிய அர்ஜுனன் தனது, இன்னுயிர்க் காதலியாகிய பாஞ்சாலியை அழைத்துக்கொண்டு தனியிடத்தை அடைந்து பசும்புல் மேட்டில் அமர்ந்து, மேற்றிசையில் மறையும் கதிரவனை நோக்கித் தொழுது மகிழலாயினன். பான்மொழியாளாகிய பாஞ்சாலி, அவன் தொடைமேல் மெல்லச் சாய்ந்துகொண்டு, அவனது வீரம் செறிந்த மலர்முகத்தின் பேரழகில் கண்களையும் கருத்தையும் செலுத்தி காதற்குறிப்புடன் நோக்கலாயினள். அப்பொழுது, பார்த்தன் தனது காதலிக்கு ஸூர்யாஸ்தமனக் காட்சியின் ஒப்புயர்வற்ற அற்புத சௌந்தர்யங்களைப் பின்வருமாறு விளக்கிக் கூறத் தொடங்கினான்:—

“குயிலையும் வெட்கச் செய்யும் குரலினிமை வாய்ந்த கோமள மாதே! திருமாலைப்போலும் இந்திர நீலநிறத்தைப் பெற்றிருக்கும் அழகிய வானத்

திலே, சிவபிரானைப்போல் செக்கச் செவேலென்ற செந்நிறங்கொண்டு விளங்கும் செம்மேகங்கள் கலந்து நிற்கும் அற்புதக் காட்சியை உற்றுப்பார்! எத்தனை எத்தனை புதுமைகள்! எத்தனை எத்தனை விசித்திரங்கள்!! நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிக்கொண்டேயிருக்கும் அற்புதத் தோற்றங்களை உற்றுப் பார்! கேதி—கிரணம்—சௌ—ரச்மி—அமிசு—திதீதி—சுபஸ்தி—வனன்—உசிரன்—வசுமரீசயன்—சப்தரிஷி—சாத்யன் சுபர்ணன் முதலிய பெயர்களை உடைய ஸூர்ய கிரணங்கள் காட்டும் அதிசயக் காட்சிகளைக் கவனித்து நோக்கு! இயற்கைக் காட்சிகளின் இணையற்ற அற்புத சௌந்தர்யங்களில் பெரிதும் ஈடுபட்டு நின்ற முற்காலத்து முனிவர்கள், வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் பெரிதும் புகழ்ந்து போற்றப்படும் செழுஞ்சுடர் பரப்பும் ஸூர்யனின் அஸ்தமனக் காட்சியில் ஈடுபட்டு மனமுருகிப் போற்றி பெரிதும் மகிழ்ந்திருக்கின்றனர். அளவிறந்த பொருளை அளித்தாலும், இத்தகைய அற்புதக் காட்சிகளை எவரால் காட்ட முடியும்?

ஒவ்வொரு கணத்திலும் வெவ்வேறு விதமான புதுப்புது வியப்புகள் தோன்றுகின்றன! ஒவ்வொரு கணத்திலும் வெவ்வேறு விதமான அற்புதக் கனவுகள் தோன்றுகின்றன! ஒவ்வொரு நிமிஷத்திலும் புதிய புதிய இன்ப நினைவுகள் தோன்றுகின்றன! ஸூர்யாஸ்தமனத்தின் ஒப்புயர்வற்ற அற்புதக் காட்சிகள் எப்படிப்பட்டன என்பதை, கேவலம் எழுத்தால் எழுதி உணர்த்த முடியுமோ? சொல்லால் விளக்கிக் காட்ட முடியுமோ? அடுத்தடுத்துப் பல தினங்கள் கவனித்துக் கண்ணாரக் கண்டு களிக்கும் பழக்கத்தைக் கொண்டவர்களுக்கு மட்டுமே, ஸூர்யாஸ்தமனக் காட்சியின் அற்புத இயற்கைப் பெருவனப்புகள் நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக விளங்கக்கூடும்.

வேள்வியில் தோன்றிய வீரநாயகியே! நிமிஷத்திற்கு நிமிஷம் புதிய உருவங்களைத் தோற்றுவித்து நமது கண்களுக்குப் பெருவிருந்தளிக்கும் இவ்வற்புதக் காட்சி, அன்னை பராசக்தி கணந்தோறும் வெவ்வேறு கோலம் கொண்டு தோன்றும் உண்மையை நன்கு உணர்த்தக்கூடியதாக விளங்குவதைப் பார்! பெண்களையும் பிரமிக்கச் செய்யும் பேரழகியே! அதோ அந்த அடிவானத்தைப் பார்! தகதகவென்று ஜொலிக்கும் அந்த ஸூர்ய கோளம், கிறுகிறுவென்று மிகுந்த வேகத்துடன் சுழன்றுகொண் டிருப்பதைப் பார்! "வெடிபடும் அண்டத்து இடி பல தாளம்போட—வெறும்—வெளியில் இரத்தக் களியொடு பூதம்பாட—பாட்டின்—அடிபடு பொருளும் அடிபடும் ஒளியிற்கூட"—களித்துச் சண்ட தாண்டவமாடும் சாமுண்டி தேவி—வீரமாகாளி அன்னை—பயங்கர லீலாவினோத பராசக்தி, பளீர் பளீர் என்று மின்னும் பத்துகோடி மின்னல்களை எடுத்து, அவையனைத்தையும் ஒரு பெருஞ் சுடர்ச் சக்கரமாக உருக்கி வார்த்து அமைத்து, அச்சோதி வட்டத்தைக் கரகரவென்று வெகு வேகமாகச் சுழற்றும் அற்புதத்தைப் பார்! பார்த்தவுடனே கண்கள் சற்று கூசுவதுபோல் தோன்றுவதைக் கண்டு, கண்களை மூடிக்கொண்டுவிடாதே! அக்காட்சியை உற்று நோக்குவதால் கண்களுக்கு ஊறுநேருமென்று அச்சுறுத்தும் குருட்டு நம்பிக்கைக்காரர்களின் போலி வாதங்களைப் பொருட்படுத்தாதே! மாலைப் பொழுதிலே, கதிரொளியில் மூழ்குவது உடல் வளத்திற்குப் பெருந்துணை செய்யக்கூடியதாகும் என்னும் உண்மையை உணர்ந்துகொள்! இருவிதமான வட்டத் தகடுகள் ஒன்றின்மேலொன்று சுழன்று கொண்டிருக்கும் அற்புதக் காட்சியை உற்று நோக்கு! மேலே சுழலும் வட்டம் மரகதச்



சக்கரம் போலும், கீழே சுழலும் வட்டம் ஒளிமிகுந்த வைரச்சக்கரம்போலும் விளங்கும் விசித்திரத்தைப் பார்! இக்காட்சி, மரகதவண்ணனாகிய திருமாலை மின்னல்போன்ற திருமகள் தழுவி நிற்பதை நினைவூட்டுவதுபோல் விளங்குவதைக் காண்பாய்!

மின்போலும் இடையுடைய அழகியே! ஸூர்ய கிரணங்களைப் பார்த்தவுடனே கண்கள் கூசுகின்றனவேயென்று அவசரப்பட்டு மூடிக்கொண்டுவிடாதே! கூரிய வேற்படைகளைப் போன்று எனது ஹிருதயத்தில் ஊடுருவிப் பாயும் சக்தி வாய்ந்த உனது கண்கள், கூச்சம் உண்டானவுடனேயே மூடிக்கொண்டு விடும்படி விட்டுவிடலாமோ? உனது அகத்தில் ததும்பி நிற்கும் அமைதி, உனது கண்களிலும் அமைந்து விளங்கவேண்டியது அத்தியாவசியமன்றோ! தொடக்கத்தில் கண்கள் கொஞ்சம் கூசுவதைப்போல் தோன்றுவதைக் கண்டு சலித்து விடாமல், அவ்விரு மின் வட்டங்களையும் உற்றுப் பார்! கீழே வைரச்சுடர் வட்டம் சுழன்றுகொண்டிருக்கிறது; மேலே அற்புதமான மரகதச் சுடர் வட்டம் சுழன்றுகொண்டிருக்கிறது. எந்த நாட்டில்—எவ்வரசாது அரண்மனையில் இப்படிப்பட்ட அற்புத நிறமுடைய வைரத்தையும் மரகதத்தையும் கண்டுகளிக்க முடியும்? பூவுலகிலுள்ள பலவகைப்பட்ட பச்சை நிறமுடைய பொருள்களில் எப்பொருளின் வண்ணத்தை இப்பச்சைப் பரிதி வட்டத்தின் வண்ணத்தோடு ஒப்பிட்டுரைக்க முடியும்? "காலத்தொடு நிர்மூலம் படு மூவுலகும்—அங்கே—கடவுள் மோனத்து ஒளியே தனியாய் இலகும்—சிவன்—கோலம் கண்டுள் கனல் செய் சினமும் விலகும்"—ஜகன்மாதாவாகிய பரமேச்வரி, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒப்புயர்வற்ற அற்புதக் காட்சிச் சித்திரங்களை நோக்கி நோக்கி மகிழத்தக்க சீரிய வானக் கவிதையை, ஒவ்வொரு நாளும் வானவெளியில் அமைத்துக்கொண் டிருக்கிறாள். எனது ஆருயிர்க் காதலியே! எழுந்து நில்! அருள் வடிவினளாகிய அன்னையின் திருவிளையாடல்களைக் கண்டு, குதூகலிக்கும் உள்ளத்துடன் 'செஞ்சுடர்க் கதிரோன் பல்லாண்டு வாழ்க; பல்லாண்டு வாழ்க'—என்று பன்முறையும் வாயார வாழ்த்திப் போற்றி நிற்கக் கடவோமாக!

"பார்! சுடர்ப் பரிதியைச் சூழவே படர் முகில்
எத்தனை தீப்பட்(டு) எரிவன! ஓகோ!
என்னடீ இந்த வன்னத்(து) இயல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்!—வெம்மை தோன்றாமே
எரிந்திடும் தங்கத் தீவுகள்!—பாரடீ!
நிலப் பொய்கைகள்! அடடா நீல
வன்ன மொன்றில் எத்தனை வகையடீ!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை!—கரிய பெரும் பெரும் பூதம்!
நீலப் பொய்கையில் மிதந்திடும் தங்கத்
தோணிகள்!—சுடரொளிப் பொற்கரையிட்ட

கருஞ் சிகரங்கள் !—காணடி யாங்கு
தங்கத் திமிங்கிலம் தாம் பல மிதக்கும்
இருட்கடல் !—ஆகா ! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள் ! ஒளித்திரள் ! ! வன்னக் களஞ்சியம் !"

இவ்வற்புதச் சொற்சித்திரத்திற்கு விரிவுரையும் வேண்டுமோ ? ஸூர்யாஸ்தமனத்தின் அற்புத ஸௌந்தர்யங்கள் அவரவர் கண்ணாரக் கண்டு களிக்கத் தக்கனவேயன்றி, வர்ணனைத் திறமையால் மற்றவர்களது மனத்தில் தெற்றெனப் படும்படி எழுத்தால் எழுதி உணர்த்தக் கூடியனவன்று.

அருட்பெருஞ்சோதி வடிவினனாகிய ஆண்டவன், பூவுலகில் ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் சுடர்க் கதிரவனாகக் காட்சி அளிக்கின்றான். அக் கதிரவனின் சுடர்க் கிரணங்கள், மண்ணுலகத்து உயிர்களைக் குறிக்கின்றன. ஸூர்யாஸ்தமன சமயத்தில் வானத்தில் தோன்றும் பலவகைப்பட்ட நிறங்கள், மண்ணுலகத்திலுள்ள மற்ற பொருள்களைக் குறிக்கின்றன. இவ்வுண்மையை,

"..................................அந்தச்
சோதி அறிவு என்னும் ஞாயிறு—தன்னைச்
சூழ்ந்த கதிர்கள் உயிர்களாம்—இங்கு
மீதிப்பொருள்கள் எவையுமே—அதன்
மேனியில் தோன்றிடும் வண்ணங்கள்"—

என்று பாரதியார் தமது கண்ணன் பாட்டில் விளக்கிக் காட்டியிருப்பது நன்கு சிந்தித்து உணரத்தக்கது. ஸூர்யாஸ்தமன சமயத்தில் வானத்தில் தோன்றித் தோன்றி மறையும் பலவகைப்பட்ட அற்புதத் தோற்றங்கள், 'உலகில் தோன்றும் உயிர்கள் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து உழலும் இயல்பின'—என்னும் உண்மையை இனிது உணர்த்துவனவாக விளங்குகின்றன.

ஸூர்யாஸ்தமனத்தின் அற்புத ஸௌந்தர்யங்களில் கருத்தைச் செலுத்திப் பரவசமடைந்த நமது முன்னோர்கள், எக்குலத்தினரும் எச்சமயத்தினரும் கண்டு களிக்கும்படி விண்ணில் காட்சியளிக்கும் அருட்பெருஞ் சோதியாம் கதிரவனை வாயார வாழ்த்தி மெய்யாரப் பணிந்து மகிழ்வாராயினர்; சந்தியா வந்தனத்தின்போது, ஸூர்யாஸ்தமனக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டு கதிரவனைப் பலவாறு புகழ்ந்து போற்றலாயினர். அந்திப்பொழுதில் கதிரொளியில் மூழ்கிக் களிக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்ததன் பயனாக, நமது முன்னோர்கள் சிறந்த ஆரோக்கிய வாழ்வைப் பெற்று விளங்கினர். எல்லாவற்றிற்கும் தனிப்பெருஞ் சாட்சியாக வான வீதியில் கதிரவன் பவனி வருவதை நன்கு சிந்தித்துப் பார்ப்போர் எவரும், அசத்தியம் முதலிய தீவினைகளில் மறந்தும் தலையிடத் துணியமாட்டார்களென்பது நிச்சயம்.

அந்திப்பொழுதே ! உனது அற்புத ஸௌந்தர்யங்களுக்கு உயிர்போன்று ஒளிரும் ஒண்சுடர்க் கதிரவன், கொஞ்சங்கொஞ்சமாகக் குடதிசையில் மறைய மறைய, நீயும் உனது மனோகரமான பொன்னொளியை இழந்து கருநிறத்தை அடைகிறாய்! தெண்ணீர்க் குளத்தில் பச்சை இலைகளின்மேல் சிறப்புற்றிருந்து, அந்திப் பொழுதின் அற்புதக் காட்சிகளைக் கண்டு சிரித்துக்கொண்டிருக்கும் செந்தாமரை மலரே! உனது ஆருயிர்க் காதலனாகிய கதிரவன் சிறிது சிறிதாக மேற்றிசையில் ஆழ்ந்து மறையத் தொடங்குவதைக் கண்டு, நீயும் உனது அழகிய முகத்தைக் குவித்துக்கொண்டு உள்ளுக்குள் காதலனது பிரிவாற்றாமல் கலங்கத் தொடங்கிவிடுகிறாய்! அந்திப் பொழுதின் அற்புதக் காட்சிகளைக் கண்டு அகம் மகிழ்ந்த உன்னை—கதிரவனின் பொன்னொளி கண்டு களித்த உன்னை—வெண்ணிலவின் தண்ணொளியால் தோன்றும் மோகனக் காட்சிகளால் சிறிதளவும் மயக்க முடியவில்லை! தென்னைமரக் கிளைகளில் கீச்சிட்டுப் பாயும் செல்வப் பசுங்கிளிகளே! அந்திப் பொழுதின் அற்புத சௌந்தர்யங்களில் ஈடுபட்டு களி வெறிகொண்டு கொஞ்சிக் குலவிப் பறந்து திரிந்துகொண்டிருந்த நீங்கள், வெண்ணிலவின் காட்சியைக் காணச் சிறிதும் விரும்பாமல் மரக்கிளைகளில் அமர்ந்து உறங்கத் தொடங்கி விடுகிறீர்கள் ! 'ஜிவ்'வென்று விண்ணிடை ஊசலிட்டேகும் சின்னஞ் சிறிய வன்னக் குருவிகளே ! வெஞ்சுடரோனின் மஞ்சள் வெயிலைக் கண்டு மகிழ்ந்த நீங்கள், தண்மதியின் வெண்ணிலவைக் காணச் சிறிதும் விரும்பாமல் மரக்கிளைகளில் மறைந்துகொள்வானேன் ?

வெண்ணிலவைப் பரப்பும் தண்மதியே ! கதிரவன் எதிரிலிருந்தபோது ஒளி மழுங்கியிருந்த நீ, அவன் மறைந்தபின் அவனால் அளிக்கப்பட்ட பிச்சையாகிய ஒளியைப் பெற்றதனாலல்லவா செருக்கிச் சிரித்துக் கொண்டிருக்கிறாய்! கதிரவனின் பொன்னொளியைக்கண்டு எவ்வளவோ உயிர்கள் மகிழ்ந்து கொண்டிருந்தனவல்லவா ? நள்ளிரவில் நீ பரப்பும் வெள்ளொளியைக் கண்டு களிக்கக்கூடிய ரஸிகர்கள், இக்காலத் தமிழ் நாட்டில் எவ்வளவுபேர் இருக்கின்றனர் ? கூடியிருக்கும் காதலர்களுக்கு இன்பத்தையும் பிரிந்திருக்கும் காதலர்களுக்குத் துன்பத்தையும் விளைவிக்கும் பாரபட்சம் உன்னிடம் அமைந்திருப்பதனாலல்லவா, உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களை மகிழ்விப்பதற்கில்லாமல், மண்ணிலும் வயலிலும் காட்டிலும் ஆற்றிலும் மலையிலும் உனது பால்போன்ற வெண்ணிலவைச் சொரிந்து வீணாக்கிப் பைத்தியக்காரனைப் போல் சிரித்துக்கொண்டிருக்குமாறு கடவுள் உன்னைச் சபித்துவிட்டார்! சுவையறிந்து அனுபவிக்கக்கூடிய ரஸிகர்கள் நித்திரைப் பாத்தைக்கு அடிமைப்பட்டு தம்மை மறந்து கிடக்கும்போது, உனது வெண்ணிலவைக் கண்டு உயிரற்ற சடப்பொருள்கள்தான் களிக்கவேண்டும் ! ஸூர்யாஸ்தமனக் காட்சிகள் ரஸிக ச்ரேஷ்டர்களுக்கு அளிக்கக்கூடிய மகத்தான ஆனந்தத்தில் பத்தில் ஒரு பங்கையேனும், உனது வெண்ணிலவின் துணைகொண்டு உன்னால் விளைவிக்க முடியுமோ ? தெரிந்தது ! தெரிந்தது ! ! அந்திப் பொழுதின் அற்புதக் காட்சிகளில் தோன்றும் ஒப்பற்ற சௌந்தர்யங்களையும் கதிரவனின் பொன்னொளியையும் கண்ணாரக் கண்டு களிக்கும் ஆசையினாலல்லவா, அந்திப் பொழுதில் நீயும் உனது வெண்ணிலவை மறைத்துக்கொண்டு வானத்தில் தோன்றி விடுகிறாய் ?

இறைவனது இன்னருட் படைப்பின் திறம்முழுதும் விளங்கும் இயற்கை யழகு மிகுந்த காட்சிகளைக் கண்டு இன்புறும் ரஸிகர்களே !

"செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்—அவன்
எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக"—

எனும் சுருதிமொழி கொண்டு, கண்காண விண்ணில் உலவும் கடவுளாகிய செங்கதிர்ச் செல்வனை நாடோறும் போற்றி, அந்திப் பொழுதின் அற்புதக் காட்சிகளை ஒவ்வொருநாளும் கண்ணாரக் கண்டு களிக்கக் கடவீர்களாக.




# பிரம சூத்திரம்

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

(பிரம்மம் வேதத்தைப் பிரமாணமாக உடையது; அதாவது பிரம்மத்திற்கு வேதமே பிரமாணமாக இருக்கிறது என்பதை ஜைமினி முனிவரால் செய்யப்பட்ட பூர்வமீமாம்சையை அனுசரிப்பவர்கள் மறுக்கிறார்கள். "வேதம் கர்மத்தையும் உபாசனையையும் வற்புறுத்த வந்ததேயன்றி, பிரம்ம ஸ்வரூபத்தை உபதேசிக்க வந்ததல்ல. ஆகவே, வேதாந்தமும் கர்ம உபாசனைகளையே வற்புறுத்தி அவற்றின் பெருமையை விளக்கும் சாஸ்திரமேயாகும். ஆதலால், பிரம்மம் வேதப்பிரமாணத் தன்மை உடையதல்ல" என்பது அவர்களுடைய ஆக்ஷேபம். அவ்வாறு ஆக்ஷேபிக்கும் பூர்வ பக்ஷிகள் பட்டர், பிரபாகரர், போதாயனர் (இவர் விருத்திகாரர் என்றும் அழைக்கப்படுவர்) என்னும் மூவர். இவர்களுள் பட்டர் பிரபாகரர் என்போரது ஆக்ஷேபங்களும் அவற்றின் சமாதானங்களும் முன்பு கூறப்பபடன. இனி போதாயனரின் ஆக்ஷேபங்கள் என்ன என்றும் அவற்றிற்குரிய சமாதானங்கள் என்ன என்றும் ஆராய்வோம்.)

போதாயனரின் வாதம்:—

(1) பிரம்மத்திற்குச் சாஸ்திரப் பிரமாணத் தன்மை இருப்பது உண்மையே. ஆனாலும், அந்தப் பிரமாணமும் உபாசனா விதிகளைச் சிறப்பித்துக் கூறுவதாக மாத்திரமே சாஸ்திரங்களில் காணப்படுகிறதே தவிர, பிரம்மஸ்வரூபத்தை மாத்திரம் உணர்த்துவதாகக் காணப்படவில்லை. ஏனெனில், எல்லாச் சாஸ்திரங்களும் "இதைச் செய், இதைச் செய்யாதே." "இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்யலாகாது" என்று பிரவிருத்தி நிவிர்த்திகளைக் கூறுகின்றவைகளாகவே இருக்கின்றன. பிரவிருத்தி நிவிர்த்தி (விதி விலக்கு)களைச் சொல்லாத சாஸ்திரங்களே இல்லை. அங்ஙனமாக, வேதாந்த சாஸ்திரம் மாத்திரம் விதி விலக்குகளைக் கூறாமல் பிரம்ம சொரூபத்தை மாத்திரம் உணர்த்துகின்றதென்பது யுக்தமல்ல. சுவர்க்கம் முதலியவற்றை அடைய விரும்புகிறவன் அக்கினி கோத்திரம் முதலியவற்றைச் செய்யவேண்டும் என்று விதி இருக்கிறது. அதுபோலவே, மோக்ஷத்தை அடைய விரும்புகிறவன் ஞானத்தை அடையவேண்டும் என்று விதி இருக்கிறது. அந்த ஞானம் எதனால் உண்டாகும் என்றால் உபாசனையினால் உண்டாகும். உபாசனையால் தோன்றுவதாகிய அந்த ஞானமே மோக்ஷ சாதனமாகும். ஆகவே அந்த மோக்ஷம் தர்மத்



தின் பரிணாமமே (வேறுபட்ட நிலையே) ஆகும். "ஒரு வஸ்துவின் மாறுபட்ட ஸ்திதியாகிய பரிணாமத்தால் உண்டான பொருள் அநித்தியப் பொருளேயல்லவா? அப்படியே மோக்ஷமும் தருமத்தின் பரிணாமமானால் அதுவும் அநித்தியமேயாகுமல்லவா?" என்று சந்தேகிக்கலாகாது. ஏனெனில், ஒரு குடத்தை எடுத்துக்கொள்வோம். அந்தக் குடமானது மண்ணின் பரிணாமமாக இருக்கிறது; அதாவது, மண்ணினுடைய வேறுநிலை. ஆகவே, மண் காரணம்; குடம் காரியம். இதில் குடத்திற்கு மண் காரணம் என்னும் ஞானம் (காரியத்தினிடத்து காரணபுத்தி) நித்தியமேயன்றி அநித்தியமல்லவே. அதுபோலவே, பரிணாமியாகிய மோக்ஷமும் நித்தியத்தன்மை உடையதேயாகும். ஜீவனுக்கு சத்திய சங்கற்பம் முதலியவை உண்டாதலே மோக்ஷமாம். அதுவே தருமத்தின் பரிணாமமாகும். அன்றியும்,

(2) தர்மவிசாரம் பிரம்மவிசாரம் என்னும் இவ்விரண்டு விசாரத்தால் உண்டாகும் பலன் வெவ்வேறானவையே. எனினும், இவ்விரண்டு விஷயங்களைப்பற்றிய சாஸ்திரங்களும் வெவ்வேறானவை யல்ல. வேதங்களில் "ஆத்மா தெரிந்துகொள்ளத் தக்கது. அந்த ஆத்மா விசாரிக்கத் தக்கது; அந்த ஆத்மா உபாசிக்கத்தக்கது. பிரம்மத்தை அறிந்தவன் பிரமமேயாகிறான்" என்பன போன்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன. அந்த வாக்கியங்களைப் பார்க்கும்போது "இந்த ஆத்மா யார்? பிரம்மம் எது?" என்று ஒருவனுக்கு சந்தேகம் தோன்றுமல்லவா? அதற்காக "அந்தப் பிரம்மம் நித்தியமானது, சர்வஞ்ஞத்துவமுள்ளது, நித்திய திருப்தியுடையது, நித்திய சுத்தமாயும் நித்திய முக்த வடிவாயும் விஞ்ஞான ஆனந்த சொரூபமாயும் இருப்பது" என்னும் இதுபோன்ற வாக்கியங்களை வேதம் கூறுகின்றது. அவ்வளவேயன்றி இந்த வாக்கியங்களெல்லாம் கேவலம் பிரம்ம ஸ்வரூபத்தை நிரூபணம் செய்வதற்காகத் தோன்றவில்லை. ஆகலின், இந்த வாக்கியங்கள் உபாசனையையோ அல்லது ஞானகிரியையோ சிறப்பித்துக் கூறும் வாக்கியங்களேயல்லாமல், கேவல வஸ்து சொரூபத்தைக் கூற வந்த வாக்கியங்கள் அல்ல. ஆகவே, உபாசனையை விதிக்கும் வாக்கியங்களே வேதங்களில் முக்கிய வாக்கியங்கள்; மற்ற வாக்கியங்களெல்லாம் அவற்றின் சிறப்பை விளக்க வந்த அங்கங்களே யாகும். மேலும்,

(3) கயிற்றைக் கண்டு பாம்பு என்று மயங்கி ஒருவன் பயப்படுகிறான், வேறொருவன் "அது பாம்பல்ல; கயிறு" என்று சொல்லுகிறான். அந்தச் சொல்லைக் கேட்டவுடனே அவனது பயம் நீங்குகிறது. அதுபோல, ("அயமாத்மா பிரஹ்ம—நஸம்ஸாரி".) "நான் சம்சாரி யல்ல; நான் பிரம்ம சொரூபன்" என்று பிரம்ம சொரூபத்தைச் சிரவணம் செய்வதால் மாத்திரம் ஒருவனுக்குச் சம்சாரி என்னும் பிராந்தி நீங்குவதில்லை. பிரம்ம சொரூபத்தைக் கேட்ட பிறகும் சுகம் துக்கம் முதலாகிய சம்சாரத்தின் தன்மைகள் முன்போலவே இருக்கின்றன. தவிர, (ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாசிதவ்ய:) "பிரம்மம் சிரவணம் செய்யத்தக்கது, மனனம் செய்யத்தக்கது, நிதித்தியாசனம் செய்யத் தக்கது" என்று சிரவணத்திற்குப் பின்னர் மனன நிதித்தியாசனங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் சிரவணத்தால் மாத்திரம் சம்சார பிராந்தி நீங்காது.

ஆதலால், பிரம்மம் உபாசனா விதிக்கு விஷயமாக இருக்கிறது என்பதற்குச் சாஸ்திரம் பிரமாணமாயிருக்கிறதே தவிர, கேவல பிரம்ம ஸ்வரூப

நிரூபணத்திற்குப் பிரமாணமாக இல்லை. இவையே போதாயனரது ஆக்ஷேபங்கள்.

போதாயன விருத்திகாரரது மேற்காட்டிய மூன்று ஆக்ஷேபங்களுக்கும் சமாதானம்:—

(1) "பிரம்மத்திற்குச் சாஸ்திர பிரமாணத் தன்மை இருப்பது உண்மையாயினும் அந்தப் பிரமாணமும் உபாசனா விதிகளைச் சிறப்பித்துக் கூறுவதாக மாத்திரமே சாஸ்திரங்களில் காணப்படுகிறதே தவிர, பிரம்ம ஸ்வரூபத்தை மாத்திரம் உணர்த்துவதாகக் காணப்படவில்லை" என்னும் முதல் ஆக்ஷேபம் சரியன்று. ஏனெனில்,

உபாசனையானது, உபாசனை, உபாசிக்கப்படும் பொருள், உபாசனை செய்பவன் என்னும் திரிபுடி (மூன்று பொருள்களின் சேர்க்கை)யை அபேக்ஷிக்கின்றது. ஆதலின் துவைதத்தை ஆசிரயித்திருக்கிறது. வேதங்களில் கூறப்பட்டுள்ள பிரம்மாத்ம ஐக்கிய ஞானமோ, துவைதத்தை விரும்பாததாகவும் துவைதத்தைப் போக்குவதாகவும் இருக்கிறது. துவைதம் (இரண்டு பொருள்கள்) உள்ள வரைக்கும் உபாசனை சாத்தியமாகுமே யன்றி, எல்லாம் ஆத்மாவாகிறபொழுது உபாசனை எப்படி சாத்தியமாகும்? தன்னினும் வேறான இரண்டாவது பொருள் ஒன்று இருக்கின்றது என்னும் துவைத ஞானம் இருக்கிற வரைக்கும் சம்சார பயம் நீங்காது. "அஞ்ஞான நிலையிலுள்ள எந்த மூடன் பரப்பிரம்மத்தினிடத்து மிகச் சொற்ப பேதமேனும் காண்கின்றானோ, அவன், சம்சார பயத்தை யடைகிறான்". "பிரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி—பிரஹ்மத்தை அறிந்தவன் பிரஹ்மமே யாகிறான்". "(தரதிசோகம் ஆத்மவித்) ஆத்மாவை அறிந்தவன் சோகத்தைக் கடக்கிறான்" என்னும் வேத வாக்கியங்களாலும் இதனை யறியலாம். தவிர,

மோக்ஷமானது தானாக எப்பொழுதும் விளங்கிக்கொண்டிருப்பதேயன்றி, சுவர்க்கம் நரகம் முதலிய உலகங்களைப்போலக் கர்மத்தினால் தோன்றுவதல்ல. பிரம்மாத்ம பாவமே மோக்ஷம். "பிரம்மமோ சரீரமில்லாததும் நித்தியமானதும் பிரியம் அப்பிரியம் (விருப்பு வெறுப்பு) என்பவைகள் இல்லாததுமாக இருக்கிறது" என்றும் வேதம் கூறுகின்றது. விருப்பு வெறுப்புக்கள் விஷயங்களால் தோன்றுபவை; தவிர, சரீரத்தைச் சார்ந்தே இருப்பவை. சரீரமோ புண்ணிய பாவ வடிவ கர்மத்தாலுண்டாகி எறும்பு முதல் பிரம்மா வரைக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை யுடையதாகும். இந்த கர்மமே அதிகாரிகளின் ஏற்றத் தாழ்வுகளுக்கும் அவர்களின் சுகதுக்க வேறுபாடுகளுக்கும் காரணமாக இருக்கிறது. ஒருவன் எதுவரைக்கும் கர்மத்தைக் கைக்கொண்டிருக்கிறானோ அதுவரைக்கும் அந்த கர்மத்தின் பலனை அனுபவிப்பதற்காக அவன் சரீரம் எடுத்தே தீர வேண்டும். சரீரம் இருக்கும் வரையில் விருப்பு வெறுப்புக்கள் வராம லிருப்பதில்லை. ஆகவே சரீரமில்லாததாகவும் விருப்பு வெறுப்புக்க ளில்லாததாகவு முள்ள மோக்ஷத்திற்கு, சரீரத்தையும் விருப்பு வெறுப்புக்களையும் தருவதாகிய உபாசனை முதலிய கர்மங்கள் காரணமாக இருக்கின்றன என்பது சிறிதும் பொருந்தாது.

உபாசனை முதலிய கர்மங்களால் அசரீரத் தன்மை உண்டாகின்றது என்று சொல்லலாகாதோ? எனில்: அதுவும் பொருந்தாது. ஏனெனில், "அசரீரத்தன்மை மோக்ஷத்திற்கு இயல்பா யுள்ளது" என்று சுருதிகள் சொல்லுகின்றன. ஆகலின், கர்மத்தால் அசீரத்தன்மை உண்டாவதாகச் சொல்வது கூடாது. அன்றியும்,

"மோக்ஷம் தர்மத்தின் பரிணாமமா யிருப்பினும் நித்தியமானதே" என்னும் பூர்வபக்ஷியின் வாதம் ஒப்பத் தக்கதல்ல. ஏனெனில் பரிணாமத்தை யடைந்த பொருள் (ஒரு பொருளின் விகாரத்தால் வேறு வடிவத்தைப் பெற்ற ஒரு பொருள்) நித்தியம் என்று சொல்வது பொருந்தாது. மண் நித்தியமாயினும் (அதன் வேறுபட்ட வடிவமாகிய குடம்) அதினின்றும் தோன்றிய குடம் அநித்தியம் என்பது உலகப் பிரசித்தமான விஷயம். அன்றியும், மோக்ஷம் தர்மத்தால் தோன்றுவது என்னுமிடத்து மண்ணாகிய காரணம் நித்தியமாகவும், கடமாகிய காரியம் அநித்தியமாகவும் இருப்பதுபோல, காரணமாகிய தர்மம் நித்தியமும் அதன் காரியமாகிய மோக்ஷம் அநித்தியமும் ஆகும். மோக்ஷம் அநித்தியம் என்பதை யாரும் ஒப்பமாட்டார்கள். சுருதிகளெல்லாம் மோக்ஷத்தைப்பற்றிக் கூறுமிடத்து "அது பாரமார்த்திகமாயும் சர்வ வியாபியாயும் நிரவயவமாயும் சுயஞ்சோதியாயும் இருப்பது" என்று புகழ்கின்றன.

மோக்ஷம் கர்ம பலனாக இருந்தால், அது சுவர்க்கம் முதலியவற்றைப் போல ஒரு மேலான பதவி என்றே சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால் சுவர்க்கம் முதலியவை அநித்தியமாகலின் அந்த மோக்ஷமும் அநித்தியமென்றே கொள்ளவேண்டி வரும். இது சரியல்ல. ஆதலால், பிரம்மோபதேசம் உபாசனாவிதியை சிறப்பிப்பதாகும் என்பது யுக்தமாகாது. இதுவும் தவிர பிரம்மஞானம் உண்டான உடனே மோக்ஷலாபம் உண்டாகுமென்றும் ஞானம் உண்டானபிறகு கர்மாபேக்ஷை இல்லை என்றும் வேதம் கூறுகின்றது.

"ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி"

"பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமே யாகிறான்"

"க்ஷீயந்தே சாஸ்யகர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராபரே."

"காரண காரியங்களுக்கு அதிஷ்டானமாக இருக்கும் வஸ்துவைக் கண்டவுடனே அவனது கர்மங்கள் நாசமடையும்."

"ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்நபிபேதி குதஸ்சன"

"பிரம்மானந்தத்தை யறிந்தவன் எதற்கும் பயப்படமாட்டான்."

மேலும், "மோக்ஷத்திற்குத் தடையாகவுள்ளது எதுவோ அதன் நிவர்த்தியே ஆத்மஞானத்திற்குப் பலனாகும்." என்றும் சுருதிகள் சொல்லுகின்றன. இத்தியாதி காரணங்களால் பூர்வபக்ஷியின் முதல் ஆக்ஷேபம் நியாய விரோதமானது என்பது தெளிவாகின்றது.

(தொடரும்.)

# சந்தேகங்கள் !

—:(o):—

("இளங்குமரன்.")

மரம் முந்தியா, விதை முந்தியா? பெட்டை முந்தியா, முட்டை முந்தியா? ஒளி முந்தியா இருள் முந்தியா? இவை பழைய கேள்விகள்; சந்தேகங்கள்! இவை இன்றைக்கும் திண்ணை வேதாந்திகள் நாவில் நடனமாடிக்கொண்டுதா னிருக்கின்றன.

கேள்விகள் என்னவோ நல்ல கேள்விகள்தான். பதில்கள் என்னவோ புரியவில்லைதான்! உண்மை என்னவோ இருக்கிறதுதான்! ஏன் இந்த வாசகம் எப்படி இருக்கிறது? சந்தேக மனதிற்கு இதைவிடத் தெளிவான வார்த்தைகள் எங்கிருந்து கிடைக்கும்?

தொந்தியைத் தடவிக்கொண்டு பிரமாதமாகப் பொழிகிறார்களே, இவர்கள் இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லுவார்களாக்கும் என்று நினைத்துக் கொண்டு கேட்கப் போனாலோ, எல்லாம் மாயை என்று மூச்சுவிடாமல் பேசி, நமது புத்தியையும் ஒரு கலக்குக் கலக்கி விடுகிறார்கள். என்ன மாயையோ, மாயமோ! நமக்கேன் பெரிய இடத்துப் பொல்லாப்பு?

இம்மாதிரி திக்குத்திசை தெரியாத சந்தேகங்கள் உங்கள் மனதில் ஒரு நாளும் தோன்றிய தில்லையா? சற்றே சிந்தியுங்கள்! மறதி எல்லோருக்கும் உண்டுதான்.

நமக்காக உத்தியோகமா, உத்தியோகத்திற்காக நாமா?

இந்தமாதிரி நீங்கள் நினைத்ததில்லையா? நெஞ்சில் கையை வைத்துச் சொல்லுங்கள்! சந்தேகம் உண்டாகிறதா?

அப்பாசாமி, ஆடிடர் ஆபீஸில் உத்தியோகம் பார்க்கிறார். எதற்காக? உயிர் வாழவேண்டுமே, அதற்காகத்தான்; உண்மை. உயிர் வாழ்வதற்கு உணவு எவ்வளவு முக்கியம்? அந்த உணவை வெந்ததும் வேகாததுமா யிருக்கும் பொழுதே அள்ளி வாயில் போட்டு விழுங்கிவிட்டு, அதோ உட்காரக்கூட நேர மில்லாமல் ஓடுகிறாரே ஏன் தெரியுமா? ரயிலுக்கு நேரமாய் விட்டது. நேரம் பொறுத்துப் போனால் துரை கோபித்துக் கொள்ளுவார். 'வேலை வாயில் மண் விழுந்து விட்டால்......' என்று அவர் நினைக்கும்பொழுதே, கால்கள் அவரை உட்கார இடந் தாராமல் இழுக்கின்றன. என்ன செய்வார் பாவம்!

அவரைக் கேட்டால், "நமது சௌகரியம்போல் வேலை கிடைக்குமா" என்கிறார். நூற்றிலொரு வார்த்தை. "வேலையின் சௌகரியம்போல் நீர் நடக்கிறீரா" என்று கேட்டால், "ஆமாம்" என்பதற்கு அவர் தயங்குவ



தில்லை. நீங்கள் சொல்லுங்கள், இவர் வாழ்வதற்காக உத்தியோகம் பார்க்கிறாரா, உத்தியோகம் பார்ப்பதற்காக வாழ்கிறாரா?

சில உத்தியோகத்திற்குப் பி. ஏ. பாஸ் பண்ணியவர்கள்தான் மனுச் செய்து கொள்ள்லா மென்கிறார்கள். அப்படியானால் அந்த உத்தியோகத்திற்குப் பி. ஏ, படித்தவர்களா, பி. ஏ. படித்தவர்களுக்கு அந்த உத்தியோகமா?

பையன்கள் அதிக மில்லாததால் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்த ஒரு உபாத்தியாயர் சீட்டுக்கிழிக்கப்படுகிறது. ஆகவே, இவர் பையன்களுக்காகவே வேலை பார்த்தாரென்று தெரிகிறது. ஆனால், குருஸ்வாமி என்பவர் புதிய உபாத்தியாயராக வந்தா ரென்பதால் அதிகமான பையன்கள் வந்து சேருகிறார்கள். காரண மென்ன? அவர் கெட்டிக்காரர் என்பதுதான். இங்கு உபாத்தியாயருக்காகப் பையன்கள் வருகிறார்கள்.

உபாத்தியாயர்களெல்லாம் 'நாங்கள் இல்லாவிட்டால் பையன்களெல்லாம் படித்து முன்னுக்கு வருவதேது' என்கிறார்கள். பையன்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? 'நாங்கள் படிக்காவிட்டால் இந்த உபாத்தியாயர்களுக்குப் பிழைப்பேது?' என்று இது அவ்வளவு அர்த்தமுள்ள வாதமல்லதான். நமக்கு, "உபாத்தியாயர்களுக்காகப் பையன்களா, பையன்களுக்காக உபாத்தியாயரா" என்கிற சந்தேகம் உண்டாகிறதா இல்லையா என்பதுதான் வேண்டும்.

மிராசுதார் மாணிக்கம்பிள்ளை, "என்னால் ஆகாத காரியம் என்ன விருக்கிறது!" என்கிறார். இதில் அதிசயம் ஒன்றுமில்லை. அவரிடம் பணம் நிறைய விருக்கிறது; எதை நினைத்தாலும் அவர் செய்யக் கூடும். 'அடேய்!' என்றால் ஆயிரம் பேர் கைகட்டிக்கொண்டு வந்து நிற்பார்கள். இவரது பணத்தால் பல மனிதர்களை வரவழைப்பார். வேண்டாதவரை அழிப்பதிலும் அவர் பணம் வல்லமை யுடையதாகவே இருக்கிறது. இங்கு பணம் மனிதரை ஆட்டுகிறது.

கணபதி என்னமோ ஏழைக் குடிசையில் பிறந்தவன்தான். தட்டுக்கெட்டுப் படித்து இப்பொழுது பெரிய வக்கீலா யிருக்கிறான். பணம் அவனைத் தேடி வருகிறது. அவன் தன் சொந்தமாக இலட்சக்கணக்கில் சம்பாதித்து விட்டான்; சம்பாதிக்கிறான். அவன் வேண்டுமானால் பணம் வருகிறது. விரும்பிய வகையில், செலவில் போகிறது. இங்கு மனிதன் பணத்தை ஆட்டுகிறான். அப்படியால் "பணத்தால் மனிதனா, மனிதனால் பணமா" என்ற கேள்வி சந்தேகத்துடன் உண்டாவது சகஜந்தானே?

ஆணுக்காகப் பெண் பிறந்தாளா, பெண்ணுக்காக ஆண் அவதரித்தானா என்பதும் ஒரு நல்ல சந்தேகக் கேள்விகள்தான்! இவ்வாறே நீள நினைத்தால்......?

ரொம்ப தூரம் போவானேன். நீங்கள் வாசிப்பதற்காக நான் கட்டுரை எழுதுகிறேனா, நான் எழுதுகிறதற்காக நீங்கள் வாசிக்கிறீர்களா?

# மக்களும் சமயவாழ்வும்

பட்டுமாநகர் N. C. சாம்பமூர்த்தி.

கோடானு கோடி ஜீவகோடிகளுக்கு இருப்பிடமாகிய இவ்வுலக மானது அண்டாகார கோள வடிவ முடையதாய்த் தனக்கெனப் பின்னோர் ஆதாரமின்றித் தனிமையாகத் தன்னச்சில் நின்று சுழன்றுகொண் டிருக்கின்றது. அப்படிச் சுழலும்போது தன்னிடத்துள்ள ஆகருஷண தத்துவத்தினால் தன்னையே தஞ்சமாகவுடைய ஜீவ அஜீவ வஸ்துக்கள் ஒன்றையாவது தவறிவிழ விடுவதில்லை. இவ்வித உலகத்துள ஜீவ வஸ்துக்களுள் பல் கோடி பிறவிகளுள. அவைகளுள் "மக்கள் தாம் ஆறறி வுயிரே" எனக் கூறப்பட் டிருப்பதனால் மக்களின் மிக்கார் இல்லெனலாம். இவர்களுள்ளும் மக்கள் மாக்கள் என இரு சாதியினருளர். மாக்கள் என்பார் பகுத்தறிவென்பது சிறிதுமற்றோர். மா என்பது விலங்கு ஆதலின் இவர் விலங்கினத்தோடு சேர்க்கப்படுவர்.

"அரிதாம் பிறப்புளுயர் மானிடத்தின்" —(தணிகை புராணம்)

"அரியது கேட்கிற் றனிநெடு வேலோய்
அரிதரிது மானிடராதலரிது" —(ஔவை.)

என்னும் முது மொழிகளை ஆராயுமிடத்து மக்கட் பிறப்பி னருமை இனிது விளங்கும். இவ்வித அரிய பிறப்பின் நோக்கம் யாது? விலங்கினங்களைப் போல் உண்பதற்கும் உறங்குவதற்குமா? கீரியும் பாம்பும் போல் ஒருவர்க் கொருவர் பகையா யிருத்தலுக்கா? யாம் காண்பன யாவும் ஆணும் பெண்ணு மாய்ச் சிருஷ்டிக்கப்பட் டிருக்கின்றனவே. அப்படியானால் இவ்வாழ்க்கை மாத்திரம் நடத்தவா? தம்மைப் போன்ற பிற உயிர்களை யுண்டாக்கவா? என்னும் இவைபோன்ற பலகேள்விகளைக் கேட்குமிடத்து பலர் பல விதமான விடைகளைத் தருவர். இறைவனின் நோக்கை நிறைவேற்றவே பிறந்தோம் எனல் எவர்க்கும் யாப்புடைத்தாகும். பொதுவாக எச்சீவ ஜந்துவும் துன்ப மனுபவிக்கப் பிரியமுடையதாகக் காணப்படவில்லை. மாவும் தத்தம் தகுதிக் கேற்ப இன்பமனுபவித்தலிலேயே விருப்புடைத்தா யிருக்கின்றன. துன்ப மனுபவித்தல் ஜீவன்களுக்குப் பிரியமில்லாவிட்டால் அது கடவுளுக்குப் பிரிய மாய் இருக்குமா? இராதல்லவா. அப்படியானால் சில ஜீவன்கள் இன்பமும் சில ஜீவன்கள் துன்பமும் மாறி மாறி யனுபவிப்பானேன்? விடையாக அவ ரவர் அதது செய்து கொண்ட வினைப்பயன் எனக் கூறினால்; அவ் வினைப் பயன் முற் பிறப்பிலுளதா? இப்பிறப்பிலுளதா? எனக் கேட்பர். அதை முற் பிறப்பில் உளதாயது என்போம். வினைப் பயன் என்பது கடவுளின் நோக்கத்துக்கு மாறாய் நடப்பதினால் தீமையாகும். இராச நீதிக்கு மாறாக நடப்பவன் இராசனால் தண்டிக்கப் படுகின்றான். தகப்பனின் கட்டளைக் கடங்காத பிள்ளை தகப்பனால் ஒறுக்கப் படுகின்றான். குருவின் மொழிக்கமை யாத சிஷ்யன் துன்பமடைகின்றான். இதையே எடுத்துக் காட்டாக கொள்க.



கடவுளின் நோக்கம் யாதென அவர் சொன்னவருமல்ல. எழுதி வைத்தவரு மல்ல. உலகோரை நன்னெறிக் கண் வாழச் செய்தற்காக அவரின் அநுக்கிர கத்தினால் பல மார்க்கங்களிலும் பல மெய்க் குரவர்கள் தோன்றி மக்களது வாழ்க்கை நடை முறைகளைச் சீர்ப்படுத்தினர். அவர்களால் வெளிப்படுத்தப் பட்ட நல்வழி (மார்க்கம் சமயம் நெறி என்பன பொருளொற்றுமை யுடைய சொற்கள்) யைப் பின்பற்றி நடக்கின் அது கடவுளுக்குகக்க கடந்ததற்குச் சமானமாகும்.

சமயம் வழி அல்லது மார்க்கம் என் வேண்டப் படுகிறது. அஃதின்றி உல கில் சீவிக்க முடியாதோ? எனில்; உலக மென்பது ஓர் சிறிய பொருளல்ல. அது பல கண்டங்கள் பல நாடுகள் பல பிரிவுகள் முதலியவற்றை யடக்கியது. ஒவ்வொன்றையும் கடலோ மலையோ ஆறோ பிரித்துக் கொண்டிருக்கின்றது. தேசத்துக்குத் தகுந்த பாஷை உடை உண்டி நிறம் தோற்றம் சுவாத்தியம் முதலிய பல மாறுபாடுகள் ஆங்காங்கு காணப்படும். இவ்வித மாறுபாடுகள் மக்களைப் பிரிக்குந் தகையது. மார்க்கம் அல்லது சமயமோ கூட்டுறவினால் அன்பைப் பெருக்குவது. தேசங்கள் கண்டங்களினிடையில், வளப்பங்கள் குறையும்போதோ பெருகும்போதோ அழுக்காறவா வெகுளி முதலியன உண் டாகும்; ஆனால் சமயமோ அன்பு அருள் ஈகை ஒப்புரவு முதலியவற்றை யாண் டும் சொரிந்து கொண்டிருக்கும். கடல் மலை ஆதியன தேசங்களைப் பிரித் துக்கொண் டிருத்தலால் மக்களிடை பழக்க வழக்க ஒழுக்கம் பாஷை என்பன மாறுபடும் எனக் கூறினோம். இவை மக்களது சமயவாழ்வை எவ்வாறு மாறு படுத்தக் கூடும். சமயம் உலகில் ஆன்ம நேயத்தையும், சகோதரத்துவத்தை யும், அமைதியையும் நிலை நிறுத்தும். ஆன்ம நேயம் கைவரப் பெற்றவன் எவ் வுயிரையும் தன்னுயிர்போற் பேணி நடப்பான். பிறவுயிர்களுக்குத் துன்பம் புரிதலை பிரியமற்றதா யிருக்கும். இவ்வாறாயவைகளை யறிந்து உலகில் நல் வாழ்க்கை புரிதற்காகவே சமயம் வேண்டப்படுகின்றது.

உலகில் பல சமயங்களிருக்கின்றனவே, அதில் எதைக்கொள்வது; எதைத் தவிர்ப்பது. ஓரிடத்துள்ள பொருளை வேறுவேறிடங்களில் நின்று பார்க்கும் போது பார்ப்பவனது இடவேறுபாடுகளுக்கேற்ப வெவ்வேறு தோற்றமுடை யதாகத் தோன்றும் அவ்வண்ணமே சமயமும் எனவறிக. உண்மைப் பொரு ளின் தன்மை கண்ட கிறிஸ்துவும்,

"பரலோகத்துள்ள எங்கள் பிதாவே" எனக் கடவுளை யழைக்கின்றார். பின்னும் "பிதாவும் நானும் ஒன்றாயிருக்கின்றோம்" என்றும் "பரலோக ராச் சியம் உங்களுள் இருக்கின்றது" எனவும் தமக்கெட்டிய உண்மையைப் பிறாறி யக் கூறினர்.

சமய குரவர்களும்,

"அப்பனீ அம்மைநீ ஐயனுநீ அன்புடைய
மாமனு மாமியு நீ
ஒப்புடைய மாதரு மொண் பொருளு நீ"—என்றும்

"நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்"—என்றும்

"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்று எழுதிக்காட்டவொணாதே" என்றும்

கடவுளது நிலையைப் பிறாறிய எடுத்துக் காட்டியுள்ளார்கள். பின்னேரிடத்தில் "தோடுடைய செவியன்..." எனவழைத்தமையால் கடவுட் தன்மையை ஆணாகவும் பெண்ணாகவும் கூறிப்போந்தார். இவைகளால் அறியக்கிடப்பதென்னவெனில் சமரச நோக்குடைய சமயமே யாவர்க்கும் வேண்டுமென்பதாம். இச்சமயமோ உயர்வு தாழ்வைக் கருதமாட்டாது. அச்சமயம் எச்சமயமென்றாராய்ந்து மக்கள் அதன்வழி நடந்து சமயவாழ்க்கை புரிதல் கடனாகும். இதுவோ இலகுவான காரியமல்ல. தமிழர் முறைப்படி பிரமச்சரியம் முதலிய நாற்படிகளையும் ஒழுங்காகக் கடத்தல் வேண்டும். அஃது முடியும்வரை இருபாலாரும் தத்தமது கல்வி ஒழுக்கம் கற்பு நிலை ஆகியவைகளை நன்கு கவனித்தல் முறையாகும். கற்பென்பது மாதர்க்கு மாத்திரம் உரியதொன்றன்று. அஃதாடவர்க்கும் உரியதெனக் கொள்க. இந்நிலை கடந்தோர் இல்வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்குவர். முற்கால முறைப்படி எண்வகை மன்றல்கள் நடைபெற்றன. தற்காலத்திலோ அவைகளில் சிலவே காணப்படுகின்றன. கணவன் மனைவியர் ஒத்தகுணம் ஒத்தகுடி ஒத்த பண்பு முதலியன வுடையராய் இருக்கவேண்டும் என்பர். ஒருபெண்ணினது தன்மை அறிவு குடும்பநிலை முதலாயவைகளை யறியாதொருவனுக்கு அவளை மன்றல் செய்யின் என்னாம். இவைகளைக் கருதாமல் மன்றல் புரிந்து வைப்பதால் குடும்பங்களுள் பல இன்னல்கள் ஏற்படுவதை பன்முறைகளிலும் கண்டும் கேட்டும் இருக்கின்றோம். மனைவி என்பாள் தன் அன்பையே சாதமாகச் சமைத்துப் பர்த்தாவுக்கும் கொடுக்கிறாள். கணவன்மேற் பற்றுடையாள் தன் கையாற் சமைத்த வுண்டியையே பருகக் கொடுப்பாளன்றோ, அஃதன்றோ அன்பின் செயல். அன்பே உயிர்நிலை எனக் கூறுவதற்கும் சந்தேகமுண்டோ? ஒருவர் முத்திநிலையடைவதற்கு காடுகளுக்கோ மலைகளுக்கோ செல்ல வேண்டியதில்லை. கணவன் மனைவியிருவரும் ஒன்றுபட்ட மனத்தினாய் அன்பாகிய பாசத்தினாற் கட்டுண்டு,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்றாங்கு பிதிர்கடன் ஆற்றியும் தெய்வ வழிபாட்டின் மிக்கோராய் விருந்தினரை ஆதரித்துணவூட்டியும் சுற்றத்தினருக்கு வேண்டியன இயன்றவரையிற் கொடுத்து ஆதரித்து வாலவேண்டும். அன்பு எனப்படும் பொருள் யாவரிடத்தும் பொருந்திருக்கவேண்டும். இதனாலன்றோ,

"அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது"

என நாயனாருங் கூறிப்போந்தார்.

அன்பைப்பற்றி வியந்து கூறாதோர் ஒருவருமிலர். சமயகுரவரும் கிறிஸ்துவும் பிறரும் அன்பையே அடிப்படையாகக் கொண்டனர். ஆதலின் அன்பு அருள் ஈகை ஜீவகாருண்யம் முதலியன நன்கமைந்தும், அன்பினாற் பிணிக்கப்பட்டுப் பொருந்திய இல்வாழ்க்கையைத் தகுந்த முறையில் நடாத்தியும்வரின் இறையும் அவர்கள் மாட்டு இரங்குதல் புரியா நிற்பன். அன்னவர்க் குதிக்கும் புத்ர புத்ரிகளும் பெற்றாாது நடையுடை பாவனை ஒழுக்கம் அன்பு முதலியன கைவரப் பெற்றோராய் வாழ்வர். எல்லாம் வல்ல இறைவன் துணை செய்க.

---

# மகளிர்க்குப் பட்டப் படிப்பு அவசியமா?

("ஜீவா")

ஆண் பெண் சமத்துவம் பேசப்படும் இக்காலத்தில், பல துறைகளிலும் ஆண்மக்களோடு பெண்மணிகள் போட்டி போட்டு வெற்றிபெற்றுவரும் இவ்விருபதாம் நூற்றாண்டில், நம் இந்தியாவில் ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கான மங்கையர்கள் சர்வகலாசாலைகளில் உயர்தர பட்டங்கள் பெற்றும், மேனாடுகளுக்குச் சென்று சைன்ஸ் முதலியவைகளில் பெரிய பெரிய பட்டங்கள் பெற்றும் புகழடைந்து வரும் இக்காலத்தில் "மகளிர்க்குப் பட்டப்படிப்பு அவசியமா ?" என்ற இக்கேள்வி, பரந்த நோக்கமும், விரிந்த உள்ளமும், சிறந்த அறிவுமுடைய சீர்திருத்த வாதிகளிடையே ஒருவித பரபரப்பை யுண்டு பண்ணும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இவ்வினாவை யெழுப்பி யிருக்கும் யான், நம் இந்தியப் பெண்மணிகளுக்குப் பட்டப்படிப்பு அவசியமென்று நிலைநிறுத்தவோ அல்லது அவசியமில்லை யென்று கண்டித்து மறுக்கவோ இங்கு முன்வரவில்லை. கற்றறிந்த—கலாசாலைகளில் கல்வி பயிலும்—சகோதரிகளிடையே யான் கண்ட சில சில உண்மை நிகழ்ச்சிகளையும் அநுபவங்களையும் உங்களுக்குத் தெரிவிக்கவேண்டுவது அவசிய மென்று என் மனதில் தோன்றியதால் அவைகளை உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கவே முன்வந்திருக்கிறேன். ஆகையால் அவைகளை ஊன்றிப் படித்து உங்கள் மனத்தில் உண்டாகும் கருத்துக்களையும் முடிவையும் கூறுவீர்களாக. நம் இந்தியப் பெண்மணிகள் ஆண்மக்களுக்கு அடிமைகளாகவும், 'காமக்கழிவிடங்'களாகவும், பிள்ளைகளைப் பெறும் இயந்திரங்களாகவும் இருப்பதை விடுத்து, முன்னேற்றமடைந்து, உலகிலேயே ஓர் உயர்ந்த உன்னத நிலையை அடைந்து ஒப்பற்ற முழு மாணிக்கங்களாய்த் திகழ வேண்டுமென்ற பேராவல் உடையவன்; அந்நோக்கத்தோடு பெண்ணுலகத்திற்கு என்னாலான தொண்டைச் செய்து வருபவன் என்பதை முதலில் தெரிவித்துக்கொண்டு, யான் கண்ட உண்மைகளை விரித்துரைக்க முன்வருகின்றேன்.

இஞ்ஞான்று சீர்திருத்த வாதிகளின் பெரு முயற்சியின் பயனாக, நம் இந்தியப் பெண்மணிகளுக்குக் கல்வி புகட்டப்பட்டு வருகிறது. பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் ஆண் மக்களுக்குக் கல்வி யளிக்கப்பட்டு வருவதைப் போலவே, பெண்களுக்கும் கல்வி கற்பிக்க வேண்டியது அவசியம் என்பதை யுணர்ந்து வருகின்றனர். சென்னை நகரம் போன்ற தலைநகரங்களில் வசிக்கும் மக்களில் பெரும்பான்மையோர் தங்கள் அருமந்த செல்விகளுக்குப் படிப்பு அளித்து வருகின்றனர். தினந்தோறும் கூலி வேலை செய்து வயிறு பிழைக்கும் ஏழை மகனும், தன் வயிற்றி லுதித்த பெண்ணைப் பாடசாலைக்கு அனுப்பிப் படிக்க வைப்பதில் எவ்வளவு ஆர்வங் காண்பிக்கிறான் என்பதை நேரில் பார்த்தால் நீங்கள் ஆச்சரிய மடைவீர்கள். அவன் தன் மகளின் கல்விக்காகத் தான் நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதிக்கும் ஊதியத்தில் பெரும்பாகத்தைச் செலவழிக்கிறான். செல்வந்தர்கள் முதல் சாதாரண ஏழை வரையில், தங்கள் பெண் மக்களைக் கலாசாலைகளுக்கு அனுப்பிப் படிக்க வைப்பதில் பெரிதுங் கருத்தைச் செலுத்தி வருகின்றனர். பெண் மக்களைக் கலாசாலைகளுக்கு அனுப்பிப் படிக்க வைப்பதென்றால் அது எளி

தான காரியமல்ல. ஆரம்பக் கல்விக்கு அவ்வளவு பணச் செலவில்லையாயினும், ஹைஸ்கூலில் படிப்பதற்கும் கலாசாலைகளில் படிப்பதற்கும் ஏராளமான பொருள் தேவையாக இருக்கிறது: அவர்களுக்கு உடைகளென்ன? புத்தகங்களென்ன? ஸ்கூல் சம்பளமென்ன? போக வர வண்டிச் செலவென்ன? இன்னும் எத்தனையோ விதமான தேவைகளுக்கு ஏராளமாகப் பணஞ் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஹைஸ்கூலில் வாசிக்கும் ஒரு பெண்ணுக்குப் புத்தகங்களெல்லாம் போக, மாதந்தோறும் குறைந்தது இருபது ரூபாயும், கலாசாலைகளில் படிக்கும் ஒரு மங்கைக்கு மாதந்தோறும் குறைந்தது எண்பது ரூபாயும் செலவு செய்யப்படுகிறது. இவ்வளவு பணஞ் செலவாவதையும் பொருட்படுத்தாது தம் பெண் மக்களைப் படிக்க வைக்க பெரும்பாலார் முன்வந்திருக்கிறார்களென்றால், அது போற்றக்கூடியதொன்றல்லவா? ஆகவே, சீர்திருத்த வாதிகள் முன்போல் நம்மவரைக் குறைகூற இடமிருக்குமென்று யான் எண்ணவில்லை.

ஆனால் இவ்வளவு அரும்பாடுபட்டு, தாங்கள் நாள்தோறும் மெய்யுழைத்து வருந்திச் சம்பாதிக்கும் பொருளில் பெரும்பாகத்தைத் தங்கள் மகளிர் கல்விக்குச் செலவழிக்கும் பெற்றோர், இதனால் அடையும் நன்மையென்ன? இதனால் ஏற்படும் பயனென்ன? என்பதே இங்கு எழுப்பப்படும் கேள்வியாகும்.

இஞ்ஞான்று, கலாசாலைகளில் வாசிக்கும் பெண்களின் மனப்பான்மையும், போக்கும் மிக மோசமானதாயிருக்கின்றன. ஆரம்பக்கல்வி பயிலும் வரை நம் பெண்களிடையே எவ்வித மாறுதலுங் காணப்படுவதில்லை. ஹைஸ்கூல்களில் அடி வைத்துவிட்டார்களோ, அவர்கள் தங்களை வானலோக மகளிராகவே கருதிவிடுகின்றனர். தங்களைப்போன்று ஆங்கிலக் கல்வி பயிலாத மங்கையரை நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளென்றும், அறிவற்ற மாமிசப் பிண்டங்களென்றும் எண்ணி அவர்களைக் கேவலமாக மதித்து இகழ்கின்றனர். தங்களைப் பெற்ற தாய்மாரையும், தங்கள் உடன்பிறந்த சகோதரிகளையும் கூட (அவர்கள் ஆங்கிலக் கல்வி தெரியாதவர்களாயிருந்தால்) அவர்கள் இழிவாகக் கருதுகின்றார்களென்றால், வேறு அதிகமேதேனுஞ் சொல்லவேண்டுமோ? அவர்களது நடையுடை பாவனையில் பெரு மாறுதல் காணப்படுகின்றது. அவர்கள் சினிமா படக்காட்சிகளில் நடிக்கும் நடிகைகளிடத்திலும், மேனாடுகளில் தாழ்ந்த தகுதியுடைய பெண்களிடத்திலும் காணப்படும் போலி நாகரிகங்களைப் பின்பற்றி நடந்து வருகின்றனர் பெரும்பாலான மகளிர் தாங்கள் கற்கும் கல்வியிலும் அதிகமாகக் கருத்தைச்செலுத்துவதில்லை. ஆடம்பரமான செயல்களிலேயே அவர்கள் அறிவு செல்லுகிறது.

கலாசாலைகளில் வாசிக்கும் பெண்களோ என்றால், இன்னுஞ் சொல்லவேண்டியதில்லை. விபரீதமானபோக்கில் அவர்கள் மனம் உச்சநிலையை அடைந்திருக்கிறது. கலாசாலைகளில் படிக்கும் பெண்கள் பெரும்பாலும் அக்கலாசாலைகளைச் சேர்ந்த ஹாஸ்டல்களிலேயே வசித்துவருகின்றனர். அவர்களுக்குப்பெற்றோர்கள், கலாசாலைச் சம்பளம், ஹாஸ்டலுக்குச் செலுத்தவேண்டிய கட்டணம், உடை முதலியவைகளுக்குச் சேர்த்து மாதந்தோறும் தவறாது பெருந்தொகை அனுப்பி வருகிறார்கள். எனவே, அப்பெண்களுக்குப் பாடங்களைச் செவ்வனே படித்து பரீக்ஷையில் தேரவேண்டுமேயென்ற கவலையைத் தவிர, வேறொரு கவலையில்லை; பொறுப்பில்லை. சுதந்தரப்பெண்மணிகளாய் இருந்து வருகின்றனர். இந்தியாவில் சுகஜீவிகள்—சுதந்தர வாழ்வு வாழ்பவர்கள்



யாரென்று கேட்டால், கலாசாலை மாணவர்களென்றே சொல்லவேண்டும். கலாசாலைகளில் மாணவர்களுக்கு ஒழுங்கு முறைக்காகச் சில கட்டுதிட்டங்கள் இருக்கிறதெனினும், அவை அவர்களை அவ்வளவாகப் பாதிப்பதுமில்லை; கட்டுப்படுத்துவதுமில்லை.

கலாசாலைகளில் ஐரோப்பியப் பெண்களும், ஆங்கிலோ—இந்திய மாதர்களும், பார்ஸி மங்கையர்களும், கிறிஸ்தவ நங்கையர்களும், முகம்மதியப் பெண்களும், மலையாள மாதர்களும், வங்காளிப்பெண்களும், தமிழ் மகளிரும் முதலிய எல்லா நாட்டுப் பெண்மணிகளும் வாசித்து வருகின்றனர். ஹாஸ்டல்களிலும் அவ்வாறே கலந்திருக்கின்றனர். இவ்வாறு எல்லா நாட்டுப்பெண்களும் ஒன்றுசேர்ந்து அவரவர்களுடைய பழக்க வழக்கங்களை ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்வது நல்லதேயாகும். ஆனால் பொதுவாக, நம் நாட்டு மக்கள் பிறநாட்டினரிடத்துள்ள சிறந்த குணங்களையும், நல்ல செயல்களையும் விட்டு, இழிகுணங்களையும், கெட்ட காரியங்களையும் மட்டும் பின்பற்றி வருவதுபோல், நம் இந்தியப் பெண்மணிகளும், ஐரோப்பிய மாதர்களிடத்திலும், ஆங்கிலோ—இந்தியப் பெண்களிடத்திலும் காணும் வெறுக்கத் தக்க வழக்கவொழுக்கங்களையே கடைப்பிடித்து அவற்றை நவநாகரிகச் செயலாகக் கருதி நடந்து வருகின்றனர். கலாசாலைகளில், ஐரோப்பியப் பெண்களும், சட்டைக்கார மாதர்களும் நடந்துகொள்ளும் விதத்தைப் பார்ப்பவர்கள் இவர்களும் பெண்களா? என்றே நினைக்கவேண்டிவரும் அத்தகைய பெண்களோடு சேர்ந்திருப்பதன் பயனாக, நம் பெண்மணிகளில் பலர், பலவிதமான தீய பழக்கங்களையுடையவர்களாய் தங்கள் வாழ்க்கையையே பாழாக்கிக்கொண்டு மீளாத்துன்பத்தையடைகின்றனர். இவர்களுடைய மனத்தின் பான்மையை அளந்து கூற மனதத்துவ சாஸ்திரத்தில் வல்லவர்களால் கூட ஆகாதென்றே துணிந்து சொல்லலாம். சில பெண்கள், நவநாகரிக முறையில் உடை முதலிய தரித்து, காணும் வாலிபர்கள் மயங்கிட பெருமித நடைநடந்து செல்வதைப் பெருமையாகக் கருதுகின்றனர். மற்றும் சில மகளிர் ஆங்கிலோ இந்திய, ஐரோப்பியப் பெண்களைப்போல, நவ நாகரீக ஆடவர்களோடு சிநேகம் பூண்டு, எப்போதும் அவர்களுடன் கடற்கரைக்கும், சினிமா நாடகக் கொட்டகைகளுக்கும், ஹோட்டல்களுக்குஞ் சென்று களித்து வருவதை உயர்வாகக் கருதுகின்றனர். இதில் எத்துணை அபாயமிருக்கிறதென்பதை அவர்கள் உணர்வதேயில்லை. பொறுப்பற்ற சுயநலப் புலிகளான வாலிபர்கள், நாளடைவில் அப்பெண்களை தங்கள் வஞ்சகமான இங்கித மொழிகளால் மயக்கித் தங்கள்வயப்படுத்தி அவர்களது அருங் கற்பைக் கொள்ளைகொண்டு தியங்கியழவைத்து மெல்ல நழுவிவிடுகின்றனர். இவ்விதம் நீறுபூத்த நெருப்புப்போன்ற ஆடவர்களால் வஞ்சிக்கப்பட்டுக் கற்பையிழந்த பின்னர் தங்கள் பரிதாப நிலையை உணர்ந்து மலையாளப் பெண்ணான லக்ஷ்மி போன்ற மாணவிகள் எத்தனைபேர் தற்கொலைகள் செய்துகொண்டிருக்கின்றனர்? தாங்கள் மதியிழந்து மோசம் போனதை எண்ணி எண்ணி எத்தனை மாணவிகள் மனங்குமுறி வாணாள் முழுதும் வருந்தி வருகின்றனர்?

அதுநிற்க, மற்றுஞ் சில கலாசாலை மாணவிகள் தாங்கள் ஆண்மக்கள் உதவியை எதற்கும் நாடுவதில்லையென்று மூட வைராக்கியங் கொண்டு தங்கள் ஆங்கிலக் கல்விச் செருக்கால் அலக்ஷியஞ்செய்து வருகின்றனர். அத்தகையோர் தங்கள் உடம்பில் இயற்கையாக உண்டாகும் காம உணர்ச்சியைத்

தணித்துக்கொள்வதற்கு அருவருக்கத்தக்க செயற்கை முறைகளைக் கையாண்டு உடல் நலமிழந்து கண் குழிந்து எலும்புந் தோலுமாய்க் காணப்படுகின்றனர். இன்னுஞ் சில பெண்கள் சிகரெட்டு முதலிய லாகிரி பழக்கங்களை மேற்கொண்டு இருக்கின்றனர். நான்கைந்து வருடங்கள் கலாசாலை ஹாஸ்டல்களில் தங்கிச் சுயேச்சையாக இருந்து மனம்போன போக்கில் களியாட்டயர்ந்து வந்தவர்களாகையால், பல பெண்மணிகள் தங்கள் உயர்தரப் படிப்பின் கால அளவு முடிந்த பின்னரும், தங்கள் வீட்டுக்குச் செல்ல மன மில்லாதவர்களா யிருக்கின்றனர்; தங்களை இவ்வளவு அரும்பாடுபட்டு, கல்வி கற்பிக்கச் செய்துவரும்—தங்கள் முன்னேற்றத்துக்காகக் கஷ்டத்தையும் பாராது பெரும் பொருள் செலவு செய்துவரும்—தங்கள் பெற்றோரையும், உற்றாரையும் அறவே மறந்து விடுகின்றனர்.

உதாரணமாக ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன். சென்னையில் வசித்து வந்த ஒரு தமிழ்ப் பெண்மணி தன் தாயினுடைய அரு முயற்சியால் ஒரு ஹைஸ்கூலில் வாசிக்க வைக்கப்பட்டாள். தந்தை யிருந்தும், அவர் இவர்களை விட்டு நீங்கி யிருந்ததால், அவ்வம்மையார் தன் மகளை பி. ஏ. வகுப்பு வரை படிக்க வைக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் பலர் துணை பெற்று உபகாரச் சம்பளம் பெற்று படிக்க வைத்தார். வீட்டில் வசதி யின்மையால், மேற்படி பெண்ணை அவர் மூன்றாவது பாரத்திலிருந்தே ஒரு ஹாஸ்டலில் விட்டு வைத்திருந்தார். பெண்ணும் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் தேறிக் கலாசாலையில் புகுந்தாள். இச் சமயத்தில் அவ் வம்மையார், பணச் செலவு மிகுதியாகிறதென்ற காரணத்தால், தன் பெண்ணை ஹாஸ்டலினின்றும் அழைத்துக் கொண்டு, வீட்டிலிருந்தே தினந்தோறும் கலாசாலைக்குப் போகுமாறு ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், ஹாஸ்டலில் சுயேச்சையாக இருந்து, தன் மனத்துக் கொத்த மங்கையரோடு கூடித் திரிந்த அப் பெண்மணிக்கு இவ் வேற்பாடு சிறிதும் பிடிக்கவில்லை. அவளுக்கு வீட்டிலிருப்பதே கஷ்டமாக இருந்தது. அவளுடைய மனப்பான்மை எவ்வளவு தூரம் மாறி யிருக்கிறதென்பதை யறிய, அவள் திருச்சி பெண் போதனா முறை பாடசாலையில் பயிற்சி பெறும் தன் சிநேகிதிக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட் டிருக்கும் சில விஷயங்களை மொழி பெயர்த்துத் தருகிறேன்:—

“என் தாய் ஹாஸ்டலில் இருப்பதற்கு என்னை அனுமதிக்கவில்லை. அவர்கள் என்னைக் கலாசாலையில் படிக்க வைப்பதே அமையுமென்று என்று எண்ணுகிறார்கள். நான் வீட்டில் வசிப்பதை மிகவும் வெறுக்கிறேன். கலாசாலை வாழ்வு ஒன்றே எனக்கு இப்போது மகிழ்ச்சியைத் தருகிறது. நான் ஏகாந்தத்தையே மிகவும் விரும்புகிறேன். எனக்குப் படிப்பிலேயே மனஞ் செல்லவில்லை. என் மனத்தில் என்ன இருக்கிறதோ அதையே இதில் எழுதுகிறேன். என்னோடு படிக்கும் பெண்களெல்லாம் பணக்காரர்களா யிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கும்போது எனக்கு வெட்கமா யிருக்கிறது.”

இக் கடிதத்திலிருந்து நீங்கள் என்ன ஊகித் தறிந்திருக்கிறீர்கள். ஆங்கிலக் கல்வி பயிலும் நம் பெண்மணிகளுடைய மனப்பான்மையும் போக்கும் எவ்வளவு மோசமாக—விபரீதமாக—மாறி வருகிறதென்று தெரிகிறதல்லவா? இவ்வித நிலைமையில், நம் இந்திய பெண்மணிகளுக்கு ஆங்கிலக் கல்வி—அதாவது பட்டப் படிப்பு—அவசியமா? அவசிய மில்லையா? என்பதை முடிவு கட்டும் பொறுப்பை அறிஞர்களே! உங்களுக்கே விட்டு விடுகிறேன்.

# நன்றி மறவேல்

(தென்னாப்பிரிகா-டர்பன், சாஸ்வதி சபைத் தலைவர்
திரு. ச. முனிசாமி பிள்ளை)

நன்றி மறவேல் என்பது நமது ஔவைப் பிராட்டியாரின் அமுத வாக்கு. ஒருவர் நமக்குச் செய்த நன்றியை மறக்கலாகாதென்பதே இதன் பொருள். மக்கள் யாவரும் ஒருவர்க்கொருவர் உதவியின்றிச் சீவிக்க முடியாது. பணம், பண்டம், காணி, பூமி முதலிய ஐசுவரியமுள்ளவனும் பிறருதவியில்லாமல் காலம் போக்க முடியாது. ஆதலால் மனிதனாய்ப் பிறந்த பொழுதே நமக்கு உதவியிருந்தே தீரவேண்டும். ஆனதுபற்றி அப்படியாக ஒருவர் நன்றிசெய்த காலத்து அதை நாம் மறப்போமானால் செய் நன்றி கொன்ற பாதகராவோம். காரணமின்றிச் செய்த உதவிக்கும் காலத்தினாற் செய்த உதவிக்கும் பூமியையும் சுவர்க்கத்தையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் அவைகளுக்கு இவை ஈடாகா.

“செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் மாற்றலரிது”— (குறள்)

“காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது”— (குறள்)

காரணமின்றிச் செய்த உதவியாவது தனக்குமுன்னே ஒருதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவி. காலத்தினாற் செய்த உதவியாவது ஒருவனுக்கு இடுக்கண்வந்தபொழுது ஒருவன் செய்த உதவி. பயன்றூக்காது செய்த உதவியாவது இவருக்கு இது செய்தால் இன்ன பிரயோஜனம் கிடைக்கும் என்று கவனியாது செய்த உதவி. அறிவுள்ளவர் தமக்குப் பிறர் செய்த உதவி தினையளவினதாயினும் அதனை அவ்வளவினதாக நினையாது பனையளவினதாக நினைப்பர்.

“தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரிவார்”— (குறள்)

ஆனால் தீயார்க்குப் புரியப்பட்ட உதவி, பனையளவினதே யாயினும் அதனை அவர் தினையளவினதாய்க் கருதி,

“ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்”

என்றபடி உடனே மறந்துவிடுவர். யாவராயினும் தமக்கு நன்றி செய்தவருடைய சிநேகத்தை விடலாகாது. நன்றி செய்தவர் பின் ஒருகால் தீமை செய்தபொழுதிலும் அத்தீமையை மறந்து நன்றியை மறவாது மனத்தி

விருத்தித் தக்கநேரத்தில் அவருக்குதவி செய்தல்வேண்டும். இதனாலன்றோ தெய்வப்புலவரும்,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். பஞ்சமாபாதங்களைச் செய்தவருக்கும் பிராயச் சித்தமுண்டு; ஆனால் செய்நன்றி மறந்தவருக்கு உய்விலையாம்.

"எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"—(குறள்)

இராமாயணக் கதையில் ஓர் பாகத்தில் இலட்சுமணர் சுக்கிரீவனுக்குச் சொல்லிய செய்யுளொன்றைக் கீழே குறிப்பிடுவோம்.

"சிதைவகல் காதற்றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதை புரிகு நற்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா
வுதவி கொன்றாற் கென்றேனு மொழிக்கலா முபாய முண்டோ"

செய் நன்றி மறந்தவர் அளவில்லாத காலம் நரகங்களிலே கிடந்து துன்புற்று பின்பு பூமியிலே பிறந்து வாதம், குட்டம், சொறி, சிரங்கு முதலிய கெட்ட நோய்களினால் வருந்துவர். தற்காலத்தில் சில பிரபுக்கள், மாதா, பிதா, பாட்டன், பேரன் முதலிய பந்துக்கள் தமக்கு இளமையிற் செய்த நன்றியை மறந்து தன் மனைவியையே பெரிதென் றெண்ணி முன் சொன்னவர்களைக் கடைக் கண்ணாற்றானும் பார்க்கின்றார்களில்லை. சிலர் தம் வித்யா குருவைத் திரும்பியும் மதிக்கின்றார்களில்லை. இன்னுஞ் சிலர் தங்களுக்கோர் காரியம் வேண்டியிருக்கும்போது ஐயா வாரும், தம்பீ வாரும், உம்முடைய உத்தியோகத்திற்கும், பெருமைக்கும், உம்மாலேதான் இக் காரியம் ஆகும் என்று கபடமான உபசார வார்த்தைகளைச் சொல்லிக் காலைப் பிடித்துக் காரியம் முடிந்தபின் போய்விட்டு வாருமென்று சொல்லிப் பின் கழுத்தைப் பிடிக்கின்றார்கள். இப்படியாக உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் உத்தமர்கள் தற்காலம் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லாரும் தங்கள் தீவினைப் பயனாக அனுபவிக்கப்போகும் துன்பங்களுக்கு வரம்பு மிருக்கின்றதா? மிருகங்களிற் கடைப் பிறப்பிற் ஜனித்த நாயன்றோ தன் எஜமானன் செய்த நன்றியை மறவாது அவனுக் கேதேனும் இடுக்கணெய்திய காலத்துத் தன்னாலியன்ற உதவி புரிகின்றது. நன்றி யறிதலில்லாத இக் கபட நெஞ்சர் இந்நாயினும் கடையரே யாவர்.

ஆகையால் சகோதர சகோதரிகளே! எதைத் தானும் மறக்கலாம்; ஒருவர் செய்த நன்றியை மாத்திரம் மறக்கக் கூடாது. அப்படி நாம் மறப்போமேயானால் இம்மையிற் பலராலும் இகழப்பட்டு, பாவ மூட்டையைக் கட்டிக்கொண்டு மறுமையிற் போய் கொடிய நரகத்திற் காளாவோ மென்பது திண்ணம்.

# அழகர் ஆற்றிலிறங்கும் வைபவம்.

(வீ. சு.)

தென்னிந்தியாவி லிருக்கும் திவ்விய க்ஷேத்திரங்களில் மதுரை மாநகரும் ஒன்று. அங்கிருந்து சுமார் 12 மைல் தூரத்தில் ஒரு மலை யுண்டு. அதற்கு அழகர் மலை யென்றும், அங்கு குடிகொண்டிருக்கும் மூர்த்திக்கு சோலை அழகர், சௌந்தர்ய ராஜர் என்றும் பெயர்கள். மலையடிவாரத்திலிருந்து மேலே மூன்றாவது மைலில் ஒரு அருவி யிருக்கிறது. யாத்திரீகர்கள் இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிறகு பெருமாளை சேவிக்கச் செல்லுகிறார்கள். இவ்விடத்திற்கு மதுரையிலிருந்து ஏராளமான மோட்டார் பஸ்கள் செல்லுகின்றன.

இந்த சோலை அழகர் மதுரைக்கு வருஷா வருஷம் சித்திரா பௌர்ணமிக்கு எழுந்தருளுவது வழக்கம். வைகை ஆற்றின் கரையில் அனேக மண்டகப்படிகள் பலரால் வெகு விமரிசையாக நடத்தப்படுகின்றன. இம் மண்டகப்படிகளில் சமாராதனைகளுக்கும் குறைவே யில்லை.

சித்திரை மாதத்துப் பௌர்ணமைக்கு முந்தின நாள் காலையில் அழகர் கோவிலை விட்டு ஸ்ரீசௌந்தர ராஜர் புறப்பட்டு மதுரைக்கு வருவார். வரும் வழியில் பக்தர்களால் ஏற்படுத்தப்பட் டிருக்கின்ற பல மண்டகப்படிகளில் தங்கி பக்த கோடிகளுக்குத் தீர்த்தப் பிரசாதம் கொடுத்துக்கொண்டே வருவார். அன்று மாலை சுமார் 4 மணிக்கு மதுரைக்கு மூன்றாவது மைல் வந்து சேருவார். அங்கு மறவர் மண்டகப்படி வெகு விமரிசையாக நடைபெறும். அங்கிருந்து பல்லக்கில் பவனி வருவது மிகவும் ரமணீயமாகவே யிருக்கும். கள்ளக் கொண்டையும், நவரத்ன பூஷணாதிகளாலான அலங்காரங்களும் தரிசிப்பவரைப் பரவசப் படுத்தும்.

மறவர் மண்டகப்படியி லிருந்து தல்லா குளத்துக்கு வருவதைத்தான் எதிர் சேவை என்பார்கள். இந்த எதிர் சேவை தரிசனமும் அங்கு நடக்கும் வாண வேடிக்கைகளும் நேரில் பார்த்தால்தான் அவைகளின் மஹிமை விளங்கும்.

தல்லா குளத்திலுள்ள கிருஷ்ணன் கோவிலில் அன்றிரவு தங்கி அங்கிருந்து குதிரை வாஹனத்தில் புறப்பட்டு விடியற்காலையில் நல்ல சுப முகூர்த்தத்தில் வைகையாற்றில் இறங்குவார். அச்சமயத்தில் ஆயிரம் பொன் சப்ரத்தில் எழுந்தருளச் செய்வது வழக்கம். அப்பொழுது மதுரையிலிருந்து அங்கு ஸ்ரீ வீரராகவப் பெருமாளும் எழுந்தருளுவார்.

மதுரையிலிருந்து சுமார் 50 மைல் தூரம் தென்மேற்கில் இருக்கும் ஸ்ரீவில்லிபுத்தூரி லிருந்து அர்ச்சகர்கள் ஆண்டாளுடைய மாலையைக் கொண்டு வந்து பெருமாளுக்குச் சாத்துவார்கள். பிறகு பெருமாளின் மாலை

யை அவர்கள் பெற்றுக்கொண்டு ஆண்டாளுக்குச் சாத்தும் பொருட்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் செல்வார்கள்.

இந்தப் பிரகாரம் சௌந்தரராஜர் மூன்று தினங்கள் மதுரையி லிருக்கும் வைகை யாற்றின் கரையில் தங்குகிறார். பல மண்டகப்படிகளிலும், வந்திருக்கும் சகல ஜனங்களுக்கும் இலவசமாக போஜன மளிக்கப்படும்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஸ்ரீ வீரராகவப் பெருமாளும் தன்னிருப்பிடம் சென்றுவிடுவார். அழகரும் பல மண்டகப்படிகளிலும் தங்கிவிட்டு கிழக்கே தேனூர் மண்டகப்படிக்குச் சென்று பிறகு அன்றிரவு வண்டியூர் சென்று தங்குவார். மறுநாட் காலை சேஷவாஹனத்தில் மறுபடியும் தேனூர் மண்டகத்துக்குச் செல்வார். அவ்விடமிருந்து கருடாரூடராக ராமராயர் மண்டகப்படியில் மூன்றும் நாளாகிய அன்றிரவு தங்குகிறார். இங்கு தசாவதார அலங்காரங்கள் பார்ப்போர் கண்களைக் கவருமென்பதில் ஐயமேயில்லை. அதிலும் மோஹினி அவதார மஹிமை வெகு ரமணீயமே.

பிறகு பல்லக்கில் எழுந்தருளி பல மண்டகப்படிகளிலும் தங்கிக்கொண்டே தல்லாகுளம் அடைவார். நான்காம் நாளாகிய அன்றிரவு புஷ்பப் பல்லாக்கு சேவை மிகவும் விமரிசையாகவிருக்கும். இங்கிருக்கும் கள்ளர்களால் தூக்கப்பட்ட பல்லக்கில் மலைக்குத் திரும்பிச் செல்கிறார்.

இம்மஹோத்ஸவத்தைக் காணவரும் ஜனத்திரளுக்குக் கணக்கே இல்லை. இவ்வருஷம் அழகர் ஆற்றிலிறங்கும் வைபவம் சித்திரைமாதம் 17உ (29-4-34) ஞாயிற்றுக்கிழமை வருகிறது. இம்மஹோத்ஸவத்தைப் பக்தகோடிகள் யாவரும் தரிசித்து கடவுள் அருள் பெறுவாராக.

## முகத்தில் பூசும் பவுடரும் புராதன க்ரீஸும்

வெளுப்பான இம்முகப் பவுடர் புராதன க்ரீஸில் கிருஸ்து பிறந்த 400 வருஷங்களுக்கு முன் தற்காலத்தில் செய்யப்படும் மாதிரி போலவே செய்யப்பட்டதாக, பிரன்ஸ்டன் சர்வ கலாசாலையில் ரஸாயன ஆராய்ச்சிகளால் ஏற்பட்டதென்று, ட்ரக் அண்டு காஸ்மடிக் இண்டஸ்டிரியில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ப்ரன்ஸ்டன் சர்வகலாசாலை ஆர்கியாலஜி இலாகாவைச் சேர்ந்த ப்ரோபெஸர் டி. லெஸ்லி ஷியர் என்பவர் காரின்த் என்னும் நகரத்தில் ஒரு ஸ்திரியின் கல்லறையில் இதைக் கண்டுபிடித்தார். 1930ஷத்தில் க்ரீஸ் தேசத்துக்கு ஷியர் போயிருந்தபோது, ஒரு கல்லறையில் ஒரு பெட்டியில் அடைக்கலம் செய்து இந்தப்பவுடர் வைக்கப்பட்டிருந்தது. இத்துடன் ஒரு வெள்ளி நாணயமும் சில பாத்திரங்களும் இருந்தன. இதை டாக்டர் ஷியர் ப்ரின்ஸ்டனுக்குக் கொண்டு வந்து, ரஸாயன இலாகாவில் பரீக்ஷித்துப் பார்த்தார். இது ஈயக் கார்பொனேட் கலந்த பவடர். இப்போது வெள்ளீயம் செய்வதற்கு என்ன முறைகளோ அதே முறைகளை இது செய்வதற்கும் அனுசரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. டாக்டர் ஷியர் கண்டுபிடித்த இந்த வெள்ளைப்பவுடர் தான் முதல் முதல் கண்டு பிடிக்கப்பட்ட வஸ்து—ஜர்னல் ஆப் ஆயுர்வேதா.






எஜமானி:—“இந்தமாதிரி தெனம் நாழி கழிச்சு வந்து அரிசி குத்தினா நான் எப்போடி தளிகை பண்றது? இதே வழக்கமாய்ப் போச்சு, அய்யங்கார் வரட்டும், இரு, உன் தலைய சிரைக்கச் சொல்றேன்.”

***

உபாத்தியாயர்:-ராமா, நான் கடைக்குப்போய் 1 படி ரவை 3 அணா வீதம் ¼ படி ரவையும், 1 வீசை சர்க்கரை 7 அணா வீதம் 15 பலம் சர்க்கரையும் 1 வீசை நெய் 2 ரூபாய் வீதம் ¼ வீசை நெய்யும் காலணா ஏலக்காயும் வாங்கினால், எல்லாம் சேர்த்து எவ்வளவாகும்.—

ராமன்:—11 அணா ஆகும் சார்.

உபாத்தியாயர்:—சீ மடையா? Next, சங்கரா நீதான்சொல்லு.

சங்கரன்:—சார் பேஷான ரவாகேசரியாகும் சார்.—

***

நாகரீகத்திருடன்:—தேவடியாளை இந்த உற்சவ காலங்களில் புடவைகளை இம்மாதிரி கட்டவேண்டாம்; கட்டவேண்டாம் என்று தலை தலை அடித்துக்கொண்டேன். கேட்கின்றாளா? மூதேவி முண்டை சுளைமாதிரி ரூபாய் போடவில்லையா என்று ஓர் வீட்டின் திண்ணையில் கட்டியிருந்த பட்டுப்புடவை ஒன்றை அவிழ்த்துக்கொண்டிருந்தான்.

கொஞ்சநேரத்தில் ஓர் அம்மாமி ஈரப்புடவையுடன் வந்து கட்டியிருந்த புடவையைக் காணாது வீட்டுக்காரியைக் கேட்டாள்.

வீட்டுக்காரி:—அம்மா தேவடியாமுண்டை மூதேவி என்று வைதுக்கொண்டிருந்தார்; உங்கள் வீட்டுக்காரராய் இருக்கலாமென்று நினைத்தேன். ஐயோ பாவம்.

அம்மாமி:—ஐயோ என் புடவை போனதுமல்லாமல் முண்டை என்று வைதானா? அவன் நாசமாபோக! ஐயோ என் வயிறெரிகிறதே! பழிபாவி,” என்று ஒப்பாரிவைக்கத் தொடங்கினாள்.

உபாத்தியாயர்:—"அடே சுந்தாம், உங்கப்பா கடைக்குப் போய் ஐம்பது ரூபாய்க்கு ஒரு கடிகாரம், பத்து ரூபாய்க்கு ஒரு கோட்டு, பதினைந்து ரூபாய்க்கு ஒரு பவுண்டன் பேனா ஆகிய இவைகள் வாங்கினால் என்ன ஆகும் ?"



சுந்தாம்:—"என்ன ஆவதுங்க சார்! வீட்டில் பெரிய சண்டை தான்."

***

உபாத்தியாயர் :—(வேணுவைப் பார்த்து) "தருமம் தலை காக்கும்" என்ற பாடத்தைச் சொல்லிக் கொடுத்துவிட்டு நாம் தருமம் செய்யவேண்டும். உதாரணமாக நாம் இன்றைக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் அது நாளைக்கு இரண்டு ரூபாயாக வந்து சேரும்.

வேணு:—ஆமாம் நீங்கள் சொல்வது ரொம்ப சரி என்றான்.

உபாத்தியாயர்:—எப்படி யடா என்றார்.

வேணு:—போன மாதம் எங்கக்காவை கட்டிக் கொடுத்தாங்க. இந்த மாதம் எங்கக்கா, எங்க அத்திம்பேர் இரண்டு பேரும் வீட்டிற்கு வந்துட்டாங்க என்றான்.

***




வகுப்பில் ஓயாமல் தப்படிக்கும் சுந்தாம், சுவரில் ஒட்டப் பட்டிருக்கும் நோட்டீசை,

"எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கு ரூ. 100" என்று வாசித்துக்கொண்டு, தனக்கும் ஏதாவது கிடைக்க இடமிருக்கிறதோ என்று யோசனை செய்கிறான்.

***

ஒருவன்:—நீ என்ன தண்ணீர்போல ஒயினைக் குடிக்கிறாய் ?

மற்றவன்:—இல்லையே என்னால் தண்ணீர் இவ்வளவு குடிக்க முடியாதே!



மனைவி:—(ஓடிவந்து அவசரமாய்) "பார்த்தீர்களா! நான் கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன். ராஜன் விளையாடிக் கொண்டிருந்தவன், மைப்புட்டியை எடுத்து பசக்கென்று மைமுழுவதையும் அப்படியே குடித்துவிட்டான். இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை".



கணவன்:—"இதற்குக்கூட நான்தானா யோசனை சொல்ல வேண்டும்? மை இல்லாது போனால் பென்சிலால் காகிதத்தை எழுதி முடியேன்".

***



மனைவி:—"நீ செத்த அன்றைக்கு நான் தலை முழுகி, மஞ்சள் பூசி, தலைக்குப் பூவும் வைத்துக் கொள்வேன்."

கணவன்:—"நான் சுடுகாட்டுக்குப் போகும் வழி யெல்லாம் எனக்கு ஜே போட்டுக் கொண்டே போவேன்."

***

கணவன்:—காதலீ உன்னைப் பார்க்காமல் என் கண்கள் பூத்துப் போயின.

இளையாள்:—ஐயோ! காதா இனி என்னசெய்வேன் என்று அழத் தொடங்கினாள்.

கணவன்:—கண்மணீ ஏன் அழுகின்றாய்.

இளையாள் :—தங்கள் கண்போனால் எல்லாரும் என்னைக் குருடன் மனைவி என்பார்கள்; அதற்காகத்தான்.

***

வீட்டுக்காரன்:—(ஒரு திருடன் வீட்டினுள் நுழைந்து எதிரில் இருந்த கெடிகாரத்தைத் தூக்கிக்கொண்டு ஓடுவதைப் பார்த்து) அடே கெடிகாரத்தை எடுத்துக்கொண்டு ஓடுகிறாயே. கொண்டுவாடா. கொண்டுவாடா.

நவீன திருடன்:—நீங்கள் கேட்கிற அந்த சொற்ப விலைக்குத் தரமுடியாது. நான் சொன்ன விலை என்றால் வாங்கிக் கொள்ளுங்கள்.




**சேவலை மணந்த சீனப் பெண்:**—சீனாவைச் சேர்ந்த காண்டன் நகரில், ஷிய்-குவாங்-டுங் என்னும் பெயருடைய சீனப் பெண், சிங்கப்பூரிலுள்ள ஒரு சீனரைக் காதலித்து வந்தாளானாலும், அவரை விவாகஞ் செய்து கொள்ளமுடியாத நிலையி லிருந்தாளாம். அவளது பெற்றோர் தங்கள் பெண்ணுக்கு 18 வயது ஆய்விட்டதைக் கருதித் தாங்கள் இறக்கு முன்பு அவளுக்கு விவாகஞ் செய்ய எண்ணினராம். ஆனால் சிங்கப்பூரிலுள்ள பெண்ணின் காதலனைத் தருவித்து விவாகஞ் செய்ய அவர்களால் முடியவில்லை. எனவே, அவர்கள் தங்கள் முன்னோர்கள் வம்சத்தில் தோன்றியதாகக் கருதிய ஒரு சேவலைத் தேடி வாங்கி அதற்குத் தங்களது அழகிய மகளை விவாகஞ் செய்வித்தனராம்.

***

**6 கால்களுள்ள பூனையும் தவளையும்:**—மிச்சிகான் தேசத்தைச் சேர்ந்த லான்சிங் என்னுமிடத்திலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு நாள் பூனையொன்று ஓடி வந்ததாம். அதற்கு முன்னங் கால்கள் நான்கும், பின்னங் கால்கள் இரண்டும் இருந்தனவாம். இவ்வாறுகால் பூனை எலிகளைப் பிடிப்பதில் சமர்த்தாயிருக்கிறதாம். இவ்வாறே ஒன்டாரியோ பிரதேசத்திலுள்ள ஹாமில்டன் என்னுமூரில் திரு. ஆர்தர் ஹார்வி 6 கால்களையுடைய ஒரு தவளையைக் கண்டுபிடித்தாராம். ஒருகால் பின்னங்கால்களின் மத்தியில் வாலைப்போல வளர்ந்திருக்கிறதாம். மற்றொருகால் இதர கால்களைப்போல் வன்மையாக இருக்கிறதாம்.

***

**கைவிரல்களில்லாது எழுதுங் குமாஸ்தா:**—டர்காம் என்னுமிடத்தைச் சேர்ந்த டன்ஸ்டன் கிராமத்தில் உள்ள கட்டிடங் கட்டுவதில் பெயர் பெற்ற கம்பெனியொன்றில், இரு கைகளிலுமுள்ள விரல்களை இழந்த குமாஸ்தா ஒருவர் 14 வருஷங்களாக வேலை செய்து வருகிறாராம். அவர் தம் மணிக் கட்டினால் கணக்குகளை ஒழுங்காக எழுதிவைக்கிறாராம். அவர் க்ஷவரம் கொள்வதும் இவ்விதமே. சுமார் 41 வருடங்களுக்கு முன் கைவிரல்களையிழந்ததிலிருந்து, மணிக்கட்டையே எழுதுவது முதலிய எல்லா காரியத்துக்கும் உபயோகப்படுத்தி வருகிறாராம்.

***

**எட்டு ஆண்டு தூங்காதவர்:**—மான்செஸ்டரில் வில்லியம் பிளாக்பர்ன் என்பவர் ஏதோ நோய் காரணமாக, 8 வருடங்களுக்கு முன் ஆபரேஷன் செய்யப்பட்டார். அதிலிருந்து அவர் தூக்கத்தை இழந்தார். உறக்கத்தை வருவிப்பதற்காக, அவர் மோர்பியா என்னும் மயக்கமருந்தை நாடோறும் இராக்காலங்களில் சாப்பிட்டு வந்தார். அப்போதும் தூக்கம் வரவில்லை. தூக்கம் வராததால் அவருக்கு அயர்ச்சி ஏற்படுவதுங் கிடையாது.




நார்வே என்னுமிடத்தில் ஒரு டாக்டர் குடல் கோளாறுள்ள ஒரு மனிதனைச் சஸ்திர சிகிச்சை செய்கையில், அந்நோயாளியின் குடலில் மூத்திரப் பையினருகில் பளபளப்பான சிறு முத்துக்கள் பல இருந்ததைக் கண்டு வியப்படைந்தாராம்.

* * *

பசிபிக் மகா சமுத்திரத்தில் இருக்கும் பௌசியோ என்னுந் தீவில் பெண்கள் மட்டுமே வசிக்கிறார்களாம். தப்பித் தவறி ஆடவர்கள் அங்கு சென்றுவிட்டால், அவ்வரக்கிகள் அவர்களைக் கொன்று தின்றுவிடுகிறார்கள்.

* * *

அல்போனியா நாட்டில் மகளிர்க்கு விவாகம் உறுதி செய்யப்பட்டதும், சிங்காசனம் அமைத்து அதில் அம்மணமகளை அரசியாகப் பாவித்து உட்கார வைத்து சுற்றத்தார்களும் தோழர்களும் அவளை வணங்கிப் பல்வகையான பொருள்களைப் பரிசளிப்பது வழக்கமாம்.

* * *

போலண்டு சர்க்கார் இராணுவக் குதிரைகளுக்கு மீன்களை உணவாக அளிக்கிறார்களாம்.

* * *

சீனாவில் 8 டன் நிறையுள்ள ஒரே பச்சைக் கல்லினால் புத்தர் கோயிலொன்று செய்து நியூயார்க்கில் நடக்கும் உலகப் பொருட்காட்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 150 சீன சிற்பிகள் 14 ஆண்டுகள் வேலை செய்து இக்கோயிலை அழகாக அமைத்தனராம்.

* * *

துருக்கி போலீஸ் இலாகாவில் இனி சேருபவர்கள் பிரம்மசாரிகளாக இருக்கவேண்டுமென ஒரு சட்டம் செய்யப்பட்டிருக்கிறதாம்.

* * *

வானம்பாடி, கழுகு, காக்கை ஆகிய பறவைகள் வானத்தில் 6,000 அடி உயரம் பறந்து செல்லக்கூடுமாம்.

* * *

நமது இந்திய நாட்டில் மொத்தம், 15,000,000 இளம் விதவைப் பெண்கள் இருக்கின்றனராம்.

* * *

லண்டனில் ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்த குற்றத்திற்காகக் கைது செய்கையில், அவனிடத்தில் பாங்கி பாஸ் புத்தகமொன்று இருந்ததால் அதில் அவன் கணக்கில் 360 பவுன் இருப்பதாகக் குறிக்கப்பட்டிருந்ததாம்.

* * *

1932-ம் வருஷத்தில் பர்மாவில் 24,70,50,000 காலன் மண்ணெண்ணெய் எடுக்கப்பட்டிருக்கிறதாம்.

# ஆசிரியர் குறிப்புக்கள்

## பக்தியா ? சித்திரவதையா ?

நமது நாடு சமயப் பற்றில் சிறந்தது; பக்தியிற் சிறந்தது என்று புகழப்படுகிறது. ஆனால் மூட வழக்கங்களிற் சிறந்தது என்று கூறுவதே இக்காலத்தில் பொருந்துவதாகும். சென்ற மாதம் தஞ்சை ஜில்லா திருவையாற்றை அடுத்த வீரசிங்கம்பட்டியில் நிகழ்ந்த கொலைக் கொடுமை தமிழ் மக்களைத் திடுக்கிடச் செய்திருக்கும் என்று நம்புகின்றோம். வீரசிங்கம்பட்டியில் மாரியம்மன் திருவிழா கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவில் பலர் நேர்ச்சிக் கடனின் பேரால் தேகமெங்கும் ஆயிரக்கணக்கான ஊசிகளைக் குத்திக்கொண்டு நெருப்புச் சட்டிகளை எடுப்பது வழக்கம். சிலர் முதுகுகளில் பெரிய கொக்கிகளைக் குத்திக்கொண்டு அவற்றில் சிறு தேர்களையும் கட்டி இழுப்பார்கள். இந்தக் காட்டுமிராண்டி வழக்கம் ஒழியவேண்டும் என்னும் நோக்கத்துடன் அரசாங்கத்தார் 144-வது பிரிவுப்படி தடையுத்தரவு பிறப்பித்தனர். "மாரியம்மன் பக்தர்கள்" இந்த உத்தரவை லக்ஷியம் செய்யவில்லை—மீற முயன்றனர். அங்கே சென்றிருந்த மாஜிஸ்ட்ரேட் நெல்லையப்ப முதலியாரையும் போலீஸாரையும் கற்களால் தாக்கினர். மாஜிஸ்ட்ரேட் அங்கேயே உயிர் துறந்தார். பின்னர் ஒரு ஹெட் கான்ஸ்டேபிளும் மாண்டார். போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டது. இருதரப்பிலும் பலர் படுகாயம் அடைந்தனர். பக்தியின் பேரால் நடைபெறும் சித்திரவதை அநாகரிக மூட வழக்கத்தை ஒழிக்க முயன்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உயிர் துறக்க நேரிட்டதைக் குறித்து நாம் பெரிதும் வருந்துகின்றோம்.

---

## சமய அறிஞர் கடமை என்ன ?

எந்தச் சமயமும் இத்தகைய சித்திரவதை பக்தியை அனுமதிக்கும் என்று சொல்ல முடியாது. தமிழ் நாட்டில் அனேக இடங்களில் மாரியம்மன் உற்சவம்போன்ற திருவிழாக்களில் அலகு குத்தல், தீ மிதித்தல், ஆடு கோழிகளைப் பலியிடுதல் முதலிய கொடுமைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சில விடங்களில் வாலிபர் முதுகுகளில் குத்திய கொக்கிகளில் மோட்டார்களைக் கட்டியிழுப்பதும் சகஜமாயிருக்கிறது. இதற்கெல்லாம் எந்தச் சமயம் சாஸ்திரம் இடங்கொடுக்கின்றன என்று எமக்கு விளங்கவில்லை. தீண்டாமை கூடாது என்றால் சமயம் போச்சு; குழந்தை மணம் வேண்டாம் என்றால் சாஸ்திரம் போச்சு என்று கூக்குரல் இடுகின்றவர்கள் பன்னூறு ஆண்டுகளாக நடைபெறும் இந்தச் சித்திரவதைக் கொடுமைகளைத் தடுக்க என்ன செய்திருக்கின்றனர் என்று கேட்கின்றோம். இத்தகைய விபரீதங்களில் சைவம்—வைஷ்ணவம் முதலிய எல்லாச் சமயத்தினரும் ஈடுபடுகின்றனர் என்பதில் ஐயம் இல்லை. நமது நாட்டிலுள்ள சைவ வைஷ்ணவ மடாதிபதிகளும் சமய அறிஞர்களும் இந்த மூட வழக்கங்களை இன்னும் வளரவிட்டுக் கொண்டிருப்பது மானக்கேடாகும். இவர்கள் தகுந்த முறையில் பிரசாரம் செய்யவேண்டும். சட்டசபை அங்கத்தினர்களும் அரசாங்கத்தாரும் இக்



கொடுமைகளைத் தடுக்கச் சட்டம் இயற்ற முற்படவேண்டும் என்று விரும்புகின்றோம்.

---

## நல்ல சந்தர்ப்பம் ஒன்று இழந்தோம்.

பூரி சங்காராச்சாரி ஸ்வாமிகள் இப்பொழுது தமிழ்நாட்டில் திக்விஜயம் செய்துகொண்டிருக்கிறார். இவர் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் வல்லுனர். தமிழறிவும் வாய்ந்தவர். சாஸ்திரக்ஞர். நல்ல பேச்சுத் திறமையும் பொருந்தியவர். இவர் எதற்காகத் தமிழ்நாட்டில் திக்விஜயம் செய்யத் தொடங்கினார்? காந்தியடிகளின் தீண்டாமைவிலக்குப் பிரசாரத்தை எதிர்க்கவே இங்கே திக்விஜயம் செய்யத் தொடங்கினார். தீண்டாமை வேண்டும்; அதற்குச் சாஸ்திர ஆதாரம் உண்டு என்பது எல்லாம் பிரமமயமாகப் போற்றும் இந்தச் சுவாமிகளின் வாதம். இதைப்பற்றிப் பகிரங்கமாக வாதம் செய்யவும் தாம் தயாரா யிருப்பதாக ஆங்காங்கு கர்ஜனை செய்துகொண்டு வந்தார். ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி, எல்., அவர்களைப் பற்றித் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்யவேண்டியது அநாவசியம் என்று நம்புகின்றோம். அவர் இப்பொழுது அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராய் இருக்கிறார். இவர் ஆங்கிலத்தோடு தமிழிலும் வடமொழியிலும் சிறந்த புலமைபெற்று மிளிர்கின்றார். சாஸ்திர ஆராய்ச்சியோடு வாக்குவன்மையும் வாய்ந்தவர். தீண்டாமை என்னும் தீமைக்குச் சாஸ்திரங்களில் ஆதாரம் இல்லை என்னும் கொள்கையுடையவர். இத்தகைய பெரியார் பூரி சுவாமிகளோடு வாதம் செய்வதாக ஒப்புக்கொண்டார். அதற்காகத் திரிச்சியிலிருந்த பூரி சங்கரரிடம் சென்றார். ஆனால் சுவாமிகள் தமது வாக்குப்படி வாதம் செய்ய முன்வரவில்லை. காரணம் என்ன? சரியான மத்தியஸ்தர் கிடைக்கவில்லையாம். நடுநிலைமை வாய்ந்த சிலரைப் பஞ்சாயத்தாராக நியமித்து வாதம் செய்து வாக்கெடுத்திருந்தால் சுவாமிகளின் மதிப்புக் குறைந்துவிடும் என்று நாம் நினைக்கவில்லை. இந்த இரண்டு பேரறிஞர்களின் வாதத்தின்மூலம் பொது மக்கட்கு ஒருவாறு உண்மை விளங்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அரிய சந்தர்ப்பம் ஒன்று இழந்தோம். இனிமேல் இந்த வாதம் கடிதப் போக்கு வாத்து வாயிலாக நடைபெறுமாம். அதையேனும் பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## வியாபாரத்திற்குக் கல்வி அவசியம்.

நமது நாட்டில் உத்தியோகம் செய்வதற்குத்தான் கல்வி ஏற்பட்டது. ஏனைய வியாபாரம் கைத்தொழில் விவசாயம் முதலியவைகட்குக் கல்வி தேவையில்லை என்ற ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறது. அதற்கேற்ப நம் நாட்டுக் கல்விமுறையும் உத்தியோகத்திற்கே தகுதியானதாக இருந்து வருகிறது. இந்தியாவில் வியாபாரம்—கைத்தொழில்—விவசாயம் செய்கிறவர்கள் எல்லாரும் அநேகமாய்க் கல்வியறிவற்றவர்களாகவே இருந்துவருகிறார்கள். ஆனால் மேனாடுகளில் அப்படியில்லை. எல்லாரும் கல்வி யறிவுபெற்றவர்களாயிருக்கிறார்கள். சென்ற மாதம் கோமில்லாவில் இந்திய வர்த்தக சபைத் தலைவரான ஸ்ரீமான் நளினாரஞ்சன சர்க்கார் ஒரு கூட்டத்தில் பேசியபோது, "தகுந்த படிப்பு இல்லாமல் எந்தத் தொழிலும் செய்யக்கூடாது. வியாபாரத்

திற்குக் கல்வி யறிவு அவசியம் இல்லை என்று சொல்லப்படுவதற்கு ஆதாரமே கிடையாது. எந்தத் தொழில் அல்லது வியாபாரம் நடத்துவதா யிருந்தாலும் அதற்குப் படிப்பு இல்லாமல் முடியாது" என்று குறிப்பிட்டார். இந்தப் பொன்மொழிகளைத் தமிழ் மக்களும்—உத்தியோக மோகங்கொண்டு—மற்றத் தொழில்களை அலக்ஷியமாகக் கருதும் பட்டதாரிகளும் நன்கு கவனிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். சமீபத்தில் டில்லியில் கூடிய இந்திய சர்வகலாசாலைகளின் மகாநாடு தொழிற்கல்விக்கு ஆக்கம் அளிக்கும் தீர்மானங்களைச் செய்திருப்பதையும் இங்கே ஞாபகமூட்டுகிறோம்.

---

## நாட்டார்—தாழ்த்தப்பட்டார் சமரஸம்

ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த ஒட்டநத்தம் முதலிய கிராமங்களில் கள்ள வகுப்பினரான நாட்டார்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குமிடையே கடுமையான மனஸ்தாபங்கள் வளர்ந்து கொண்டிருந்ததை நேயர்கள் அறிந்திருக்கலாம். நாட்டார்கள் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் தங்க நகைகளைக் அணியக்கூடாது என்றும், பித்தளைப் பாத்திரங்களை உபயோகிக்கக் கூடாது என்றும், ஆடவர்கள் சட்டை, பனியன், கோட்டு வகையராக்களை அணியக்கூடாது என்றும் கொடுமை செய்து வந்தார்கள். இது சம்பந்தமாய் மாகாண சர்க்காருக்கும் விண்ணப்பம் செய்யப்பட்டது. கள்ள வகுப்பினர் பல தடவைகளில் ஏழைகளான தாழ்த்தப்பட்ட மக்களை அநேக கொடுமைகட் குட்படுத்தி வந்திருக்கின்றனர். இப்பொழுது ராமநாதபுரம் ஜில்லா ஆதித்திராவிட மஹாஜன சங்கப் பிரஸிடெண்டு வ. எஸ். ஜான் அவர்களின் நன்முயற்சியால் அவ்விரு சமூகத்தாருக்கும் சமரஸம் ஏற்பட்டுவிட்ட செய்தியை அறிந்து மகிழ்கின்றோம். காந்தியடிகள் தமது சுற்றுப்பிரயாணத்தில் அங்குச் சென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்க விஷயமாகும்.

---

## சென்னையில் அநாதைப் பெண்கள் விடுதி

சென்னை நகரத்திலும் வேறு சில நகரங்களிலும் விபசாரத் தடைச் சட்டம் அமலில் இருப்பது எல்லாருக்கும் தெரியும். சென்னை உஷார் சங்கத்தாரின் தீவிர முயற்சியின் பயனாகவே இச்சட்டம் இயற்றி வைக்கப்பட்டது. சென்னையில் இச்சட்டம் அமலுக்கு வந்தபின் சுமார் 150 விபசார விடுதிகள் மூடப்பட்டிருக்கின்றன. இளம் பெண்கள் விபசாரத்தில் இறங்குவதற்குரிய காரணங்களில் வறுமையும் அறியாமையும் தலைசிறந்த காரணங்களாகும் என்பதில் ஐயமில்லை. விபசார விடுதிகளினின்றும் மீட்கப்படும் பெண்களுக்கு ஒரு புகலிடம் அவசியம். இது இன்றேல் அவர்கள் மீண்டும் அத்தீய நெறிக்கே திரும்பிவிடல் இயற்கையாகும். எனவே அநாதைப் பெண்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பொது மக்களைச் சார்ந்து நிற்கிறது. தீய வழிகளில் இறங்கியதால் திக்கற்றும் வீடில்லாமலும் தவிக்கும் பெண்களை மீண்டும் நல்ல வழிக்குக் கொண்டுவருவதற்குரிய பயிற்சி அளிக்க சென்ற மாதம் கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி ரஸ்தாவில் "ஆனந்த வில்லா" என்ற பங்களாவில் சென்னை இந்தியமாதர் சங்கத்தின் ஆதரவில் ஒரு விடுதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது இதில் 10-பெண்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் விபசார விடுதிகளினின்றும் மீட்கப்பட்டவர்கள். கல்வியும் கைத்தொழிலும் கற்று வருகிறார்கள்.



சென்னைக் கவர்னரின் மனைவியான லேடி பியட்ரிக்ஸ் ஸ்டான்லி இவ்விடுதியைத் திறந்து வைத்தார். டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மையார் அநாதைப் பெண்கள் முன்னேற்ற விஷயத்தில் ஆற்றிவரும் அரிய தொண்டை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். பம்பாய் கல்கத்தா முதலிய இடங்களில் அநாதைப் பெண்கள் நன்முறையில் ஆதரிக்கப்படுகின்றனர். அரசாங்கத்தாரும் போதிய பொருளுதவி செய்து வருகின்றனர். சென்னை வாசிகளும், மற்றவர்களும் அநாதைப் பெண்கள் விமோசனத்திற்குத் தங்கள் தங்களாலியன்ற உதவி புரிவதோடு அரசாங்கத்தாரும் உதவி புரியவேண்டும் என்று விரும்புகின்றோம்.

---

## மதம் மாறும் உண்மை

நமது நாட்டில் ஆண்டுதோறும் பல நூற்றுக்கணக்கான இந்துக்கள் இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற மதங்களைத் தழுவி வருகின்றனர். பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களே பிறமதம் தழுவி வருகின்றனர் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதற்குரிய காரணம் என்ன? இந்துக்கள் கடவுளின் பேராலும் சாஸ்திரங்களின் பேராலும் ஏற்படுத்தி யிருக்கும் வேற்றுமைகளே காரணம் என்பதை நாம் விரிக்க வேண்டியதில்லை. சமூகக் கொடுமையும் வறுமையுமே இந்துக்களைப் பிறமதம் தழுவுமாறு நிர்ப்பந்திக்கின்றன என்பது அநுபவம். இவ்வுண்மையைச் சென்ற மாதம் பெங்களூரில் திருப்பத்தூர் கிறிஸ்தவகுல ஆச்சிரமத்தைச் சேர்ந்த டாக்டர் பேடன் என்பவர் ஒரு கூட்டத்தில் பேசியபோது வெளியிட்டார். "ஐக்கிய மாகாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பு இந்துக்கள் பட்டினியால் பரிதவிக்கிறார்கள். அவர்களுக்கு ஆகாரம் கொடுக்க மிஷனரிகள் முன் வருகிறார்கள். அம்மக்கள் ஞானஸ்நானம் பெற்று மதம் மாறுகிறார்கள்" என்று டாக்டர் பேடன் கூறினார். இதனால் வேற்று மதங்களிலுள்ள தத்துவ விசேஷங்களைக் கண்டு மக்கள் மதம் மாறுவதில்லை என்பதும் ஏதோ தங்களுக்குரிய தேவைக்காகவே அங்ஙனம் செய்து வருகிறார்கள் என்பதும் இனிது விளங்கும் என்று நம்புகின்றோம். இந்நிலையில் உயர்வகுப்பு இந்துக்களின் கடமை என்ன?

---

## பெங்களூர் நகரசபையும் கதரும்

மைசூர் சமஸ்தானம் ஆதியிலிருந்து கதருக்கு ஆதரவளித்து வருதல் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். சமீபத்தில் பெங்களூர் நகரசபையார் நகரசபை சிப்பந்திகள் எல்லோருக்கும் கதர்த் துணிகளே வழங்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றனர். இதற்காக ஆயிரத்தைந்நூறு ரூபாய் மதிப்புள்ள கதர்த்துணிகளை வாங்கவேண்டும் என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலுள்ள நகர சபைகளும், ஜில்லா போர்டுகளும், கிராமப் பஞ்சாயத்துக்களும் பெங்களூர் நகரசபையாரைப் பின்பற்றவேண்டும் என்று விரும்புகின்றோம். ஸ்தல ஸ்தாபனங்கள் கதருக்கு ஆதரவளித்தால் கதரியக்கம் மேன்மேலும் பொதுஜன ஆதரவு பெற்று வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாகும். பெங்களூர் நகரசபையாரின் தேசிய உணர்ச்சியை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.




# நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

(719-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகேட்ட டாக்டர் நடேசன், "ஆம். இவ்விஷயத்தில் எனக்கேற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவே யில்லை........இந்த மாதிரி கேஸ்களை நான் பார்த்ததுமில்லை; சொல்லிக் கேட்டதுமில்லை. சவத்திற்கு என்ன அடையாளங்களோ அதே அடையாளங்கள் இக்கேஸ்களில் தோன்றுகின்றபடியால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஜனங்கள் வெகு ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். உயிரோ டிருக்கிற ஜீவனை சவமென்றெண்ணி மேலாகவேண்டிய காரியங்களைப் பார்த்து விடுவார்கள்......டாக்டர் லோகநாதம்! இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இன்னுஞ் சில நிமிஷங்களுக்கெல்லாம் நீங்கள் முன்னிருந்த சாதாரண நிலைமையை யடைந்து விடுவீர்கள். இக்கேஸை நாம் இத்துடன் விட்டுவிட முடியாது. அம்மங்கை மீனுளுக்கு ஏதாவது சீக்கிரம் செய்தல் வேண்டும்" என்று கூறினார். உடனே நான், "ஆம். தாமதம் செய்யக் கூடாது! நாம் செல்லவேண்டிய வழி உங்களுக்குத்தான் தெரியும். தயவு செய்து மீனுளுக்குக் கொடுக்க வேண்டிய மருந்தைக் கொடுங்கள்" என்று சொல்ல டாக்டர் நடேசன், "நாம் தாமதம் செய்யக்கூடாது என்பது வாஸ்தவந்தான்! ஆனாலும் மீனு ளிருக்கும் அறைக்குப் போவதற்குள் இந்த நீல அறையிலேயே நமக்கு இன்னும் கொஞ்சம் காரிய மிருக்கிறது" என்றார்.

நான்:—அது என்ன?—என்று கேட்டேன்.

டாக்டர் நடேசன்:—அது என்னஎன்று கேட்கிறீர்களே? நீல அறையின் மர்மம் இன்னதென்று தெரியாமல் மீனுளுக்கு எப்படி மருந்து கொடுக்க முடியும்? உங்களுக்கு மருந்து கொடுத்ததைப்போல் அப்பெண்ணுக்கும் கொடுத்தால் அவள் சௌக்கிய மடைந்து விடுவாளென்று நீங்கள் இப்பொழுது நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்——அல்ல; உங்களுக்கும் அம்மங்கைக்கும் எவ்வளவோ வித்தியாச முண்டு. இந்த வித்தியாசத்தை யெல்லாம் நமக்கு இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை. கவனிக்க வேண்டிய விஷயத்தின் பேரிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கவேண்டும்.

நான்:—நல்லது; அப்படியே செய்வோம்.



டாக்டர் நடேசன்:—நீலஅறையில் விஷப்புகை யிருக்கக் காரணமில்லை; ஏனென்றால் அவ்வறையின் ஜன்னல்களை நீங்கள் திறந்து விட்டீர்கள். மேலும் அறைக்குள்ளிருக்கும் போதெல்லாம் ஒருவிதமான வலியும் தோன்றவில்லை. அறையை விட்டு வெளியே வரும்போதுதான் இந்நிலைமை யுண்டாகிறது.

நான்:—ஆம். அறையைவிட்டு வந்தேனே இல்லையோ அப்பொழுதே எனக்கொருவிதமான மயக்கம் உண்டாயிற்று. அந்த க்ஷணம் மின்சாரம் தேகத்தில் அடிபடுவதுபோ லிருந்தது. இது எதனு லேற்பட்டது என்று உங்களுக்கு கொஞ்சங்கூட சந்தேக முண்டாகவில்லையா?

டாக்டர் நடேசன்:—கொஞ்சங்கூட விளங்கவில்லை. இவ்விஷயம் மர்மமாக விருக்கிறது. ஆனால் எனக்கு இவ்விதமான மர்மங்களைக் கண்டால் பிரியந்தான்! இந்த நீல அறையின் மர்மத்திலிருந்து நான் அறிந்துகொள்ள வேண்டியது அதிக மிருக்கலாம்!—என்றார்.

இது கேட்ட பாலாமணியம்மாள் நடேசனைப்பார்த்து "அப்படியானால் இந்த மர்மத்தை நீங்கள் கண்டுபிடிக்க முயல்வீர்க ளல்லவா?" என்று கேட்க, இதற்கு டாக்டர்நடேசன்.

"ஆகா! உங்களுடைய உத்தரவின் பேரில் அப்படியே செய்கிறேன். இம்மர்மம் மிக்க சிக்கலா யிருக்கிறது! இந்த சிக்கலான மர்மத்தைக் கண்டு பிடித்த பிறகுதான் அப்பெண்ணின் கேஸைக் கவனிக்கமுடியும்" என்றார்.

இப்படியாகப் பேச்சில் காலத்தைக் கழிப்பது எனக்கு வெறுப்பா யிருந்தபடியால் நான் உடனே டாக்டர் நடேசனைப் பார்த்து, "நல்லது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? என்ன உத்தேசம் செய்து வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். இதற்கு அவர் என்னைப் பார்த்து, "இம்முறை நான்மட்டும் நீல அறைக்குள் போகவேண்டும்" என்று பதில் சொன்னார்.

உடனே நான், "உங்களுடைய உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிட்டால் என்னசெய்வது? நீங்கள் தனியே உள்ளே போவதால் நன்மையேற்படுமோ அல்லது தீங்கு நேரிடுமோ" என்றேன். இதற்கு நடேசன், "அப்படியல்ல. அதிசயமான புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதிலேயேதான் எனக்குத் திருஷ்டி!" என்று சொன்னார். பிறகு தான் நீல அறையிலிருந்து வெளியே வருங்கால் மயக்கங்கொண்டுவிட்டால் அவருக்கு எப்படியெப்படி நான் சிகிச்சை செய்யவேண்டுமோ அதையெல்லாம் என்னிடம் சுருக்கமாகச் சொன்னார்.

இஞ்ஜெக்ஷன் செய்வதற்குத் தோதாகக் குழாயில் மருந்தையும், சுறுசுறுப்பை யுண்டாக்குவதற்காகக் கண்ணாடிப் பாத்திரத்தில் கலக்கப்பட்ட தண்ணீரையும் தயார்செய்து வைத்துவிட்டு மர்ம அறைக்குள் டாக்டர் நடேசன் நுழைந்தார்.

அங்குமிங்குமாக அறைக்குள் நடேசன் கவனித்துக்கொண்டே யிருந்தார். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார். அங்கு ஒன்றும் தோன்றவில்லை. அறைக்குள்ளேயும் அதிசயம் தென்படவில்லை. அறைக்குள் ஜன்னல் வழியாக சுகமான தென்றல் வீசுகிறது என்று உள்ளேயிருந்தபடியே டாக்டர் நடேசன் எனக்குச் சொன்னார்.........சுமார் ஐந்து நிமிஷங்களுக்கு

டாக்டர் நடேசன் அறையினுள்ளேயிருந்தார். பிறகு வேகமாக அவர் அறையை விட்டு வெளிப்பக்கம் வந்தார்.

வெளியே வந்தாரோ இல்லையோ அவர் வாய் குழறிக்கொண்டே, "லோகநாதம்! இன்ஜெக்ஷன்! சீக்கிரம்!" என்று கத்தினார்.

அவருடைய கம்பீரமான முகம் இப்பொழுது சவம்போல் வெளுத்திருந்தது. அவருடைய கைகால்கள் அசைவற்றுப் போய்விட்டன; மூர்ச்சையாகி கீழே விழுவதற்கிருந்தார். ஆனால் நான் அவரைத் தாங்கிக்கொண்டு அவருடைய இடதுகையில் ஒருமுறை இன்ஜெக்ஷன் செய்தேன். அவர் தனது இடது கையைத் தூக்கிக்கொண்டிருந்தாராதலால், இன்ஜெக்ஷன் இடதுகையில் செய்யவேண்டும் என்று அவர் எனக்குச் சொல்லுகிறதாக அறிந்துகொண்டு அப்படிச் செய்தேன்.

நான் இன்ஜெக்ஷன் செய்யும்போதெல்லாம் அவருடைய கண்கள் மூடியிருந்தன. பேசக்கூட சக்தியில்லாமலிருந்தார்....ஆனால் இன்ஜெக்ஷன் கொடுத்த மறுநிமிஷம் அவர் கண் விழித்துக்கொண்டு என்னை நோக்கி, "லோகநாதம்! நீங்கள் உங்களுக்கு ஏற்பட்டதை விவரித்தமாதிரியே எனக்கு தேகவலி யேற்பட்டிருக்கிறது. உங்கள் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு இன்னும் மூன்று நிமிஷங்களுக்கெல்லாம் இரண்டாவது இன்ஜெக்ஷன் செய்யவேண்டும்" என்றார்.

நான் கடியாரத்தைப் பார்த்துவிட்டு அப்பால் மூன்று நிமிஷங்களுக்குக் காத்துக்கொண்டிருந்தேன். பிறகு இரண்டாவது இன்ஜெக்ஷன் செய்தேன்......இதன் பிறகு இரண்டு நிமிஷங்கள் சென்றன. கண்ணாடிப் பாத்திரத்திலுள்ள மருந்தையும் நான் எடுத்துக் கொடுத்தேன். இதையவர் சாப்பிட்டுவிட்டுச் சற்று நேரம் கண்ணை மூடிக்கொண்டு மௌனமாயிருந்தார்.

பிறகு அவர் என்னைப் பார்த்து, "லோகநாதம்! இந்த இன்ஜெக்ஷன் செய்வதில் பிரயோஜன மேற்படாதென்று எண்ணிக்கொண் டிருந்தேன். ஆனால் இதனால் அநுகூலமேற்படுகிறது என்று இப்பொழுது நன்றாய்த் தெரிகிறது. இன்னும் சில நிமிஷங்களுக் கெல்லாம் நான் பழைய நிலைமைக்கு வந்துவிடுவேன்" என்றார்.

நான்:—ஆனால் இதற்கெல்லாம் காரணமென்னவென்று நாம் கண்டுபிடிக்கவில்லையே?

டாக்டர் நடேசன்:—இனிமேல்தான் கண்டுபிடிக்கவேண்டும். இதுவரை எனக்கு ஒன்றும் புலப்படவில்லை.

நான்:—நீங்கள் முதல் தடவை இவ்வறையைவிட்டு வெளியே வரும்போது இந்த நிலைமை யுங்களுக்கு உண்டாக வில்லையே!

டாக்டர் நடேசன்:—ஆம்; எல்லாவற்றையும்விட இவ்விஷயந்தான் எனக்குப் புரியாத மர்மமாயிருக்கிறது...லோகநாதம் இவ்விஷயத்தில் நாம் அதிக ஊக்கத்துடனேயே வேலை செய்யவேண்டியதாயிருக்கிறது; இறுதியில் நாம் செய்யும் இந்த ஆராய்ச்சியினால் நமக்கும் ஏனைய உலகத்தாருக்கும் நன்மையுண்டாகக்கூடும்!

நான்:—இவைகளைப்பற்றி நாம் பின்பு யோசித்துக்கொள்ளலாம். தற்சமயம் மீனாளைப் பிழைப்பித்து வைக்க வேண்டியதுதான் நமது கடமை!



டாக்டர் நடேசன்:—ஐயா! அம்மங்கையைப் பற்றி நான் மறந்துபோய் விட்டதாக நீங்கள் எண்ணிக்கொள்ளவேண்டாம். இதற்கு முன்னால் அவளுக்கு என்னவிதமான சிகிச்சை செய்வதென்றே எனக்குப் புரியாமலிருந்தது. இப்பொழுது போகப்போக கொஞ்சம் வெளிச்சமுண்டாகிறது.

நான்:—"நல்லது; இப்பொழுது உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது? இன்னமும் உங்களுடைய மயக்கம் தெளியவில்லையென்று நினைக்கிறேன்" என்றேன்.

இதைக் கேட்டதும் டாக்டர் நடேசன் "இப்பொழுது யாதொரு மயக்கமுங் கிடையாது. முன்னிலைமை யடைந்துவிட்டேன்" என்று கூறிவிட்டுத் திடீரென்று மறுபடியும் நீல அறைக்குள் நுழைந்தார்.

அறையின் மர்மத்திற்குக் காரணம் அதன் வாசற்படியி லிருக்கிறதென்று டாக்டர் நடேசன் எண்ணுவதாக என் மனதிற்பட்டது. இம்முறையவர் நீல அறையைவிட்டு வெளியே வரும்போது அவருக்குப் போனதடவை யேற்பட்டதுபோல் இப்பொழுது ஏற்படவில்லை. இதிலிருந்து அறையின் மர்மத்திற்குக் காரணம் இன்னதாகத்தா னிருக்கவேண்டுமென்று அவர் தன் மனதிற்குள்ளேயே தீர்மானித்துக் கொண்டார். தன்மனதிலிருப்பதை யவர் என்னிடம் சொல்லவில்லை. நானும் கேட்க அச்சப்பட்டுக்கொண்டு சும்மாவிருந்துவிட்டேன்.

அப்பால் டாக்டர் நடேசன் என்னையும் பாலாமணியம்மாளையுமழைத்துக்கொண்டு மீனாளிருந்த அறைக்குள் நுழைந்தார். அவ்வறைக்குள் நுழைந்தவுடனே எனக்குண்டான சந்தோஷத்திற் களவேயில்லை. மட்டுக் கடங்கா ஆவேசத்துடன் நான் "ஆ"வென்று கத்தினேன். என் மனைவி, அம் மின்னற்கொடி மீனாளுக்கு உயிர் வந்துவிட்டது பிரத்தியட்சமாகத் தெரிந்தது. அவள் நான் பார்க்கும்பொழுது தன்னுடைய படுக்கையில் ஒரு பக்கமாக அசைந்தனள்;

மீனாளுக்கு உயிர் வந்துவிட்டதைக் கண்ணுற்ற டாக்டர் நடேசன், "சபாஷ்! நான் சந்தேகத்துடன் செய்தவேலை அநுகூலப் பட்டுவிட்டது. நல்லது; லோகநாதம்! அருகிலிருக்கும் மருந்துக் கடைக்கு நான் மறுபடியும் போய்விட்டு வரவேண்டும்" என்று கூறிவிட்டு வாசலிற் சென்று தனது ரிக்ஷாவிலேறிக்கொண்டு போய்விட்டார்.

நான் பாலாமணியம்மாளைப் பார்த்து, "நீல அறையின் மர்மம் மிக்க அதிசயமாகவே யிருக்கிறது. இதற்குமுன்னால் இந்த அதிசயம் இருந்ததுண்டா?" என்று கேட்க அவள், "எனக்குத் தெரிந்து இதற்கு முன்னால் இவ்வதிசயம் கிடையாது" என்றாள்.

நான்:—அந்த முகமூடி யணிந்துகொண்டிருந்த ஸ்திரீ இன்றைக்கு வந்து போனதற்கு முன் இவ்வதிசயம் இவ்வறையி லிருப்பதாக உங்களுக்குத் தெரியாது! அப்படித்தானே?

பாலாமணி:—ஆம்! இம் மர்மத்திற்குக்காரணம் இந்த ஸ்திரீதான்!

நான்:—இந்த ஸ்திரீ யாராகவிருக்கக் கூடுமென்று உங்களுக்குக் கொஞ்சங்கூட சந்தேகந் தோன்றவில்லையா?

பாலாமணி:—கொஞ்சங்கூடத் தெரியவில்லை.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பவ௵ சித்திரைமீ—கலியுகாதி 5036, சாலிவாகனம் 1857,
பசலி 1343, கொல்லமாண்டு 1109, ஹிஜரி 1352-53,
இங்கிலீஷ் 1934௵ ஏப்ரல்மீ—மேமீ

| சித்திரை | ஏப்ரல்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | வெள் | சது1-8 அ ● 58-35 | ரேவ56-8 | அமி60 | **சர்வத்திர அமாவாசை, வருஷப் பிறப்பு,** |
| 2 | 14 | சனி | பிர57-15 | அஸ்56-28 | சித்60 | அதிக வைசாக சுத்தம் |
| 3 | 15 | ஞா | துதி57-20 | பர58-8 | சித்60 | சந்திர தெரிசனம் |
| 4 | 16 | திங் | திரி59-0 | ✲60 | மர60 | **கிருத்திகை** |
| 5 | 17 | செவ் | சது60 | கிரு1-25 | சி1-25அ | மாச சதுர்த்தி விரதம் |
| 6 | 18 | புதன் | சது2-10 | ரோ6-15 | சித்60 | கரிநாள் |
| 7 | 19 | வியா | பஞ்6-55 | மிரு12-23 | மர60 | **சஷ்டி** |
| 8 | 20 | வெள் | சஷ்12-40 | திரு19-30 | சித்60 | இராமாநுஜர் ஜயந்தி |
| 9 | 21 | சனி | சப்19-0 | புன27-8 | சித்60 | மாடு வாங்க, |
| 10 | 22 | ஞா | அஷ்25-20 | பூச34-43 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 11 | 23 | திங் | நவ30-58 | ஆயி41-35 | சி41-35ம | நவக்கிரக சாந்தி செய்ய |
| 12 | 24 | செவ் | தச35-23 | மக47-8 | சித்60 | கிருஷியாரம்பம் செய்ய |
| 13 | 25 | புத | ஏகச38-3 | பூர51-3 | அமி60 | சர்வ ஏகாதசி |
| 14 | 26 | வியா | து38-53 | உத்53-13 | ம53-13சி | சுப காரியங்கள் விலக்க |
| 15 | 27 | வெள் | திர37-50 | அஸ்53-25 | அ53-25சி | பிரதோஷம், கரிநாள் |
| 16 | 28 | சனி | சது35-0 | சித்51-58 | ம51-58அ | சித்ரகுப்த பூஜை |
| 17 | 29 | ஞா | ○30-58 | சுவா49-15 | சி49-15ம | **சித்ரா பௌர்ணமி** |
| 18 | 30 | திங் | பிர25-25 | விசா45-25 | ம45-25சி | அதிக வைசாக பகுளம் |
| 19 | 1934௵ மேமீ 1 | செவ் | துதி19-13 | அனு41-3 | சி41-3மா | வியாதியஸ்தர் குளிக்க |
| 20 | 2 | புதன் | திரி12-55 | கே36-28 | சி36-28ம | சங்கடஷ்ட சதுர்த்தி |
| 21 | 3 | வியா | சது6-20 பஞ்59-53 | மூல31-55 | சித்60 | கத்தரி ஆரம்பம், அக்னி நட்சத்திரம் ஆரம்பம் |
| 22 | 4 | வெள் | சஷ்53-53 | பூரா27-40 | பி27-40சி | |
| 23 | 5 | சனி | சப்48-28 | உத்23-50 | சித்60 | |
| 24 | 6 | ஞா | அஷ்43-35 | திரு20-38 | அ20-38ம | |
| 25 | 7 | திங் | நவ35-25 | அவி18-5 | சித்60 | |
| 26 | 8 | செவ் | தச35-58 | சத16-13 | மர60 | |
| 27 | 9 | புதன் | ஏகா33-10 | பூர14-55 | அ14-55சி | |
| 28 | 10 | வியா | து28-40 | உத்14-2௩ | சித்60 | |
| 29 | 11 | வெள் | திர30-3 | ரே14-53 | அமி60 | |
| 30 | 12 | சனி | சது32-18 | அஸ்16-8 | சித்60 | |
| 31 | 13 | ஞா | ● அ30-30 | பர18-30 | சித்60 | |

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி செவ் | | |
| சுக் சனி | 16-மே-புத<br>17-மீன-சுக்<br>31-ரிஷ-புத | | கே |
| ராகு | | | |
| | | | குரு |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

பூலோகத்தின்கண் புண்ணிய கீர்த்தியாய் விளங்க—உயர்பதவி—கௌரவம்—மஹத்துவம்—புகழ்ச்சி-அதிர்ஷ்டம்—ஜீவசக்தி-கார்யசித்தி-முதலானவைகளை அனுபவிக்கவேண்டி அபூர்வ ரகஸ்யங்களை சுலபமாக அறிந்து அனுஷ்டிப்பதற்கு—ஸ்வாமி ப்ரேமானந்த யோகீஸ்வரர் அவர்களினால் லோகோபகாரமாய் எழுதப்பட்ட

# வசீகரண தந்த்ரம்

அல்லது

## மனோவசிய சாஸ்திரம்

என்னும் அதியற்புத கிரந்தத்தை உடனே விலைக்கு வாங்கி வாசித்து லாபம் அடையுங்கள்! இதில் கோரிய பெண்ணை மணமுடித்தல், மணமகன் மணமகளுடைய காதலை விருத்தி செய்தல், கன்னிகை வசீகரணம், மணமில்லா மணத்தை மகிழ்வுபெறச் செய்தல், ப்ரேமாபிவிர்த்தி, நிரந்தரமான நட்பைப்பெறல், மணத்திற்கு முந்தி மணப்பெண்ணின் ப்ரீதியைப்பெறல், ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெருதல், பிரிவுற்ற தம்பதிகள் கூடுதல், வேண்டுமளவு சந்ததிபெறல், கணவனின் கெட்டநடத்தைகளை திருத்துதல், பெண்களின் துர்நடத்தைகளை நிறுத்துதல், தனவந்தனை தன்வயமாக்கிக் கொள்ளல், உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தை பெறுதல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், சூன்யம் திருப்புதல், வைத்தியம் போக்கடித்தல், மானவ வசியம், ஜீவஜந்துக்களின் வசியம், தனகர்ஷணம், களாகர்ஷணம், ஜனாகர்ஷணம், மோஹனம், ஸ்தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், மாரணம், சாந்தி முதலாக 100 ப்ரயோகங்கள் சிறுவர்முதல் பெரியவர் சுருக்க அறிந்துகொள்ளும்படியான சுலபமான நடையில்—இனியமொழியில் எழுதப்பட்டன.

மேற்சொன்ன விஷயங்களெல்லாம் இப் புத்தகத்தில் இல்லையென்று எவரேனும் நிரூபித்தால் அவருக்கு இப்புத்தகத்திற்கு வாங்கிக்கொண்ட விலையை யாதொரு ஆக்ஷேபனையின்றி திருப்பிக்கொடுத்து விடப்படும். இன்னும் இதைவிட திடமாக வேறு என்ன உறுதி சொல்லலாம்?

அதிர்ஷ்டம் உள்ளவர்கட்கே இப் புத்தகம் கிடைக்கும்! நாளை எழுதலாமென்று காலம் தள்ளாமல் மறந்துவிடுமுன் இன்றே-இப்பொழுதே-ஒரு புத்தகத்திற்கு-ஆர்டர் செய்து வாங்கிப் படித்து அதிலுள்ள இன்பத்தைக் கண்டு களி கூருங்கள்!

**விலை ரூபாய் இரண்டே!**

குறிப்பு:—ரூபா இரண்டு முன்பணமாக மணியார்டர் செய்தால், ஒரு புத்தகம் தபால் பார்சலில் அனுப்பப்படும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்.

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

# நாலடியார் மூலமும்

## விரிவான உரையும்.

**செம்பூர் வித்வான்-வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.**

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப்பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகப் பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன்படத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந்நூல் நல்ல வழிகாட்டியாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரையொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந் நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற்கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோதமாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்



கப்பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்கள், இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந்நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் முதற் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாளடைவில் சில பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில் காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820 பக்கமுள்ளதாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத் தக்கது.

**இதன் விலை ரூபா 2—8—0.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-34 வரை விலை ரூ. 1—12—0

# நாகரீகம்?

## இரண்டாம் பதிப்பு.

சே. இராஜா செட்டியார், எம்.பி. பி.ஐ., அவர்கள் இயற்றியவை.

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் சீர்கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகிவரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இந்நாவல் வரையப்பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியர் எல்லோரும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்று அரும் பெரும் நீதிகள் அடங்க பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் ஊழல்களும், ஆப்தமித்ரனின் அருங்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அத்தாட்சிகளோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து நற்பயனடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 2.

